» தொகுதி 1, இதழ் 18

» மார்ச் 16-31, 2021

இலவச விநியோகத்திற்காக





# நியூ இந்தியா சமாச்சார்

Volume 1, Issue 18

NEW INDIA SAMACHAR

March 16-31, 2021



# உள்ளூர் பொம்மைகள் உலகளாவிய ஆடுகளம்

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் விதவிதமான பொம்மைகள் உற்பத்தி செய்யப்படும் நிலையில், உலக பொம்மைச் சந்தையில், இந்திய பொம்மைத் தொழில் தனது பங்களிப்பை அதிகரிக்க ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. அரசின் முன்முயற்சிகள் காரணமாக, பொம்மை உற்பத்தியில் இந்தியா முன்னணி நாடாக உருவெடுத்து வருகிறது.

# சுயசார்பு இந்தியாவை அடைய அறிவியல், புதுமை கண்டுபிடிப்புகள் அவசியம்



**பிரதமர் நரேந்திரமோடியின் 'மனதின் குரல்' உரையில் காட்டப்பட்ட சிறப்புக் கவனமே சுயசார்பு - இந்தியாவிற்கு ஊக்கமளித்துள்ளது. மக்கள் அனைவரும் புதுமை கண்டுபிடிப்புகளில் ஈடுவடுவதோடு, தண்ணீர் சேமிப்பிலும் ஈடுபட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். அவரது உரையின் சுருக்கம் வருமாறு**

**தண்ணீர் ஒரு அமிர்தம் :** மாக் மாதம் ( இந்தி நாட்காட்டியின் 11-வது மாதம்) ஆறுகள், ஏரிகள் மற்றும் இதர நீர் ஆதாரங்களுடன் தொடர்புடைய மாதம் ஆகும். இந்தியாவின் ஏதாவதொரு பகுதியில், தண்ணீருடன் தொடர்புடைய திருவிழா இல்லாத நாளே இல்லை என்று சொல்லலாம். நம்மைப் பொறுத்தவரை, தண்ணீர் தான் வாழ்க்கை, நம்பிக்கை மற்றும் வளர்ச்சியின் ஓட்டம் ஆகும். இந்த ஆண்டு, ஹரித்வாரின் கும்பமேளா நடைபெற உள்ளது. நம்மைச் சுற்றியுள்ள தண்ணீர் ஆதாரங்கள் மற்றும் மழைநீர் சேமிப்பு குறித்த 100 நாள் பிரச்சாரத்தைத் தொடங்கலாமா? இந்த சிந்தனையோடு, 'மழை நீரைப் பிடித்துவைப்போம்' என்ற நீர்வளத் திட்டம் நீர்வள அமைச்சகத்தால், இன்னும் சில தினங்களில் தொடங்கப்பட உள்ளது.

**சந்த் ரவிதாஸ் ஜெயந்தி :** மாத் மாத பவுர்ணமி தினத்தில், சந்த் ரவிதாஸ்-ன் பிறந்தநாள் கொண்டாடப்பட உள்ளது. சந்த் ரவிதாஸ்-ன் வார்த்தைகளும், அறிவாற்றலும் இன்றும்கூட, நமக்கு வழிகாட்டுகின்றன

**சி வி ராமனை நினைவுகூறுவோம் :** தலைசிறந்த விஞ்ஞானி டாக்டர் சி.வி. ராமன், 'ராமன் விளைவு'-ஐ கண்டுபிடித்த தினம், தேசிய அறிவியல் தினமாக (பிப்ரவரி 28) கொண்டாடப்படுகிறது. உலகிலுள்ள மற்ற விஞ் ஞானிகளைப் பற்றி நாம் அறிந்துகொள்ளும் விதத்திலேயே, இந்திய விஞ்ஞானிகளைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும்.

**புதுமை கண்டுபிடிப்பு :** 'சுயசார்பு இந்தியா' இயக்கத்தில், அறிவியல் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது. 'பரிசோதனைக்கூடத்திலிருந்து நிலத்திற்கு' என்ற மந்திரத்தைப் பின்பற்றி முன்னோக்கிச் செல்வோம். ஹைதராபாத்தைச் சேர்ந்த சிந்தல வெங்கட் ரெட்டி, வைட்டமின்-டி சத்து மிகுந்த பல்வேறு கோதுமை மற்றும் அரிசி ரகங்களைக் கண்டுபிடித்துள்ளார். ஜெனிவாவைச் சேர்ந்த உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பிடமிருந்து, காப்புரிமை ஒன்றையும் அவர் இந்த மாதம் பெற்றுள்ளார். அதேபோன்று, குஜராத்தின் பதான் மாவட்டத்தைச் சேர்ந்த காம்ராஜ் பாய் சவுத்ரி, சிறந்த ரக முருங்கைக்காய் விதைகளை உருவாக்கியுள்ளார்.

**தற்சார்பு இந்தியா :** தற்சார்பு இந்தியா ஒரு தேசிய உணர்வு ஆகும். பணக்கார மற்றும் வளர்ந்த நாடுகளில், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தேஜஸ் போர் விமானம், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பீரங்கிகள், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஏவுகணைகள், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மெட்ரோ ரயில் பெட்டிகளையும், டஜன் கணக்கான நாடுகளில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசிகளையும் பயன்படுத்துவதைக் காணும்போது, நாம் தலைநிமிர்ந்து நிற்கலாம். இந்த கவுரவத்தை ஜவுளி, கைவினைப் பொருட்கள், மின்னணு சாதனங்கள், செல்போன்கள் மற்றும் இதர துறைகளிலும் இதே கவுரவத்தை அடைய வேண்டும். சுயசார்பு இந்தியா என்ற மந்திரச் சொல், நாட்டிலுள்ள கிராமங்களையும் சென்றடைந்துள்ளது.

**தேர்வு வீரர்கள் :** கொரோனா பெருந்தொற்று காலத்தில், எனக்குக் கிடைத்த நேரத்தை எடுத்துக் கொண்டு, தேர்வு வீரர்கள் நூலில் பல புதிய மந்திரங்களை இணைத்துள்ளேன். நரேந்திரமோடி செயலியில் வழங்கப்பட்டுள்ள இந்த மந்திரங்களுடன் தொடர்புடைய உற்சாகமூட்டும் நடவடிக்கைகள், உங்களுக்குள் ஒரு தேர்வு வீரரை உருவாக்க உதவும்

**கொரோனா வைரஸ் குறித்து அலட்சியமாக இருந்துவிடக் கூடாது :** மார்ச் மாதம், நிதியாண்டின் கடைசி மாதம் ஆகும். நாட்டில் பொருளாதார நடவடிக்கைகள் வேகமடைந்துவரும் அதே விதத்தில், நமது வர்த்தகம் மற்றும் தொழில்முனைவோர் நண்பர்கள் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. கொரோனா வைரஸுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளைக் குறைத்துவிடக்கூடாது.

இந்த க்யூ ஆர் கோடை ஸ்கேன் செய்து மனதின் குரல் உரையைக் கேட்கலாம்

# நியூ இந்தியா சமாச்சார்

» தொகுதி 1 இதழ் 18 » மார்ச் 16-31 2021


## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | தலையங்கம் | பக். 02 |
| 2 | அஞ்சல் பெட்டி | பக். 03 |
| 3 | செய்திச் சுருக்கம் | பக். 04-05 |
| 4 | ஆளுமை | பக். 06 |
| 5 | சர்வதேச மகிழ்ச்சி தினம் | பக். 07 |
| 6 | ஓடிடி-சமூக ஊடக வழிகாட்டு நெறிமுறை | பக். 08-09 |
| 7 | முகப்புக் கட்டுரை | பக். 10-25 |
| 8 | நிதி ஆயோக் | பக். 26 |
| 9 | அமைச்சரவை முடிவுகள் | பக். 27 |
| 10 | பிரதமரின் கரீப் கல்யாண் திட்ட ஓராண்டு நிறைவு | பக். 28-29 |
| 11 | பட்ஜெட் செயலாக்கம் | பக். 30-31 |
| 12 | சர்வதேச வன மற்றும் தண்ணீர் தினம் | பக். 32-33 |
| 13 | கல்வி | பக். 34-35 |
| 14 | உலகளாவிய தடுப்பூசி செலுத்தும் பணி | பக். 36-37 |
| 15 | கொரோனாவுக்கு எதிரான போர் | பக்.38 |
| 16 | விஸ்வ பாரதி, ஐஐடி காரக்பூரில் பிரதமர் | பக். 39 |
| 17 | ஆக்கப்பூர்வ அணுகுமுறை | பக். 40 |



**Editor**
Jaideep Bhatnagar,
Principal Director General, PIB,
New Delhi

**Consulting Editors**
Vinod Kumar
Santosh Kumar

**Designer**
Ravindra Kumar Sharma

**Published & Printed by**
Satyendra Prakash,
Principal Director General,
BOC on behalf of Bureau of
Outreach and
Communication

**Printed at**
Infinity Advertising services Pvt.Ltd.
FBD-One Corporate Park, 10th floor,
New Delhi-Faridabad border, NH-1,
Faridabad-121003

**Published from**
Bureau of Outreach and
Communication, 2nd Floor, Soochna
Bhawan,
New Delhi -110003

NEW INDIA SAMACHAR

RNI No. : DELTAM/2020/78809

response-nis@pib.gov.in

# ஆசிரியர் மேசையிலிருந்து...

வாழ்த்துக்கள்!

ஒரு பொம்மை, குழந்தைகளுக்கு அளவற்ற மகிழ்ச்சியை அளிப்பதோடு, அவர்களது பிஞ்சு மனதில் அழியாச் சுவடையும் ஏற்படுத்தி விடுகிறது. பொம்மைகளுடனான நெருக்கம், குழந்தைகளுக்கு வாழ்நாள் முழுவதற்கும் ஊக்கமளிக்கிறது. உள்ளூர் பொம்மைகளின் பாரம்பரிய செழுமை இந்தியாவிற்கு உள்ளபோதிலும், இந்திய சந்தைகளில் குவியும் வெளிநாட்டுப் பொருட்களால், அவை காணாமல் போய்விடுகின்றன. உலகில், மிகப்பெருமளவில் பொம்மைகளைப் பயன்படுத்தும் நாடாக இந்தியா உள்ளபோதிலும், சர்வதேச பொம்மை சந்தையில் அதன் பங்களிப்பு வெறும் 0.5 சதவீதமாகவே உள்ளது. இத்தகைய சூழலில் தான், பல்வேறு நடவடிக்கைகள் மூலம், பொம்மைத் தொழிலுக்கு புத்துயிரூட்ட அரசு முயற்சித்து வருகிறது.

பொம்மைகளின் உதவியுடன், குழந்தைகளுக்கு இந்தியக் கலாச்சாரம் மற்றும் நாகரீகத்தை அறிமுகப்படுத்த அரசு விரும்புகிறது. பொம்மைத் தொழிலில் நம்பிக்கையை ஏற்படுத்தி, ரசாயனக் கலப்பு இல்லாத பொம்மைகளைக் குழந்தைகளுக்கு வழங்கவும் அரசு விரும்புகிறது. இதுபோன்ற முயற்சிகள், இந்தியப் பொருளாதாரத்திற்கு ஆரோக்கியமாக அனைவதுடன், தீங்கு விளைவிக்கக் கூடிய பொம்மைகளிடமிருந்தும் குழந்தைகளைப் பாதுகாக்கும். பொம்மைத் தயாரிப்புத் தொழிலில் தற்சார்பு அடையச் செய்ய வேண்டுமென்ற அரசின் செயல் திட்டத்தின் அடிப்படையிலேயே, நியூ இந்தியா சமாச்சாரின் இந்த இதழ் அட்டைப்படக் கட்டுரை அமைகிறது.

இது தவிர, கொரோனாவுக்குப் பிந்தைய காலகட்டத்தில் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வது பற்றிய கருத்துக்களும், இந்த இதழில் இடம் பெற்றுள்ளன. மேலும், பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள், லட்சக்கணக்கான மக்களிடம் ஏற்படுத்தியுள்ள முகமலர்ச்சி குறித்தும் இந்த இதழில் விவாதிக்கப்பட்டுள்ளது. இது முடிவல்ல, மாறாக 'சுயசார்பு இந்தியா இயக்கம்', தேச உணர்வுள்ள இயக்கமாக மாறி வருவதன் தொடக்கத்தைக் குறிக்கிறது.

அதே பாசம் மற்றும் நம்பிக்கையுடன், நீங்களும் உங்களது கருத்துக்களை எங்களுக்குத் தெரிவிக்கலாம்

முகவரி : கள விளம்பரம் மற்றும் தொடர்புப் பிரிவு,
இரண்டாவது மாடி, சூச்னா பவன், புதுதில்லி ரூ 110003
மின்னஞ்சல் : response-nis@pib.gov.in



(ஜெய்தீப் பட்நாகர்)

# அஞ்சல் பெட்டி




நியூ இந்தியா சமாச்சார் - இதுபோன்ற பயனுள்ள இதழை வெளியிடுவதற்கு பாராட்டுக்கள். பிப்ரவரி மாத ஆன்லைன் இதழை நான் படித்தேன். அதில் சுருக்கமாக, எளிமையான மொழியில் இடம் பெற்றிருந்த தகவல்களைப் படித்து வியந்துபோனேன்.
இந்தப் பத்திரிகையின் பழைய இதழ்கள் எங்கு கிடைக்கும் என்பதை, தயவுகூர்ந்து எனக்குத் தெரிவிக்கவும். இந்த இதழின் ஆங்கிலம் மற்றும் இந்தி மொழி பதிப்புகளை, எனது மின்னஞ்சல் முகவரிக்கு, தொடர்ச்சியாக அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.


ஜக்ரிதி பாண்டே,
எம்.காம்., எல்எல்பி, ஏசிஎஸ்.
லக்னோ
csjagritipandey@gmail.com


## டிஜிட்டல் காலண்டர்




இந்திய அரசு வெளியிட்டுள்ள டிஜிட்டல் காலண்டர் மற்றும் டைரியில் பல்வேறு திட்டங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் அரசின் வெளியீடுகள் குறித்த அண்மைக்கால தகவல்கள் இடம்பெற்றுள்ளன. அதோடு, அரசு விடுமுறை மற்றும் பல்வேறு முக்கிய நாட்களின் பட்டியலும் இடம்பெற்றுள்ளது.

இதனை கூகுள் பிளேஸ்டோர் மற்றும் ஐஓஎஸ்-ஸில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்

கூகுள் பிளேஸ்டோர் இணைப்பு
https://play.google.com/store/apps/details?id=in.gov.calendar

ஐஓஎஸ் இணைப்பு
https://apps.apple.com/in/app/goi-calendar/id1546365594

**https://goicalendar.gov.in/**

இந்த இதழில் இடம்பெறும் அம்சங்களை அதிகரிக்க, பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். படவிளக்கம், நன்றாக புரியக்கூடிய எழுத்து அச்சுகள் மற்றும் படங்கள், ஒவ்வொரு வாசகரும், இதழின் கடைசிப் பக்கம் வரை படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தைத் தூண்ட உதவுகிறது.
இந்த சிறந்த பணியை தொடர்ந்து மேற்கொள்ளவும்.
நன்றிகள்.


ருதுராஜ் மொகந்தி
கணினி அறிவியல் & பொறியியல் துறை
இந்திய தொழில்நுட்பக் கழகம் தில்லி
"ருதுராஜ் மொகந்தி எம்சிஎஸ்18
<Ruturaj.Mohanty.mcs18@cse.iitd.ac.in>;


முதற்கண், புதிய இந்தியாவை உருவாக்க, மத்திய அரசு மேற்கொண்ட முன்முயற்சிகளின் கண்ணாடியாகத் திகழும் இந்த அருமையான இதழை வெளியிடுவதற்காக, எனது பாராட்டுக்களை ஏற்றுக்கொள்ளவும். பிப்ரவரி 16-28, 2021 ஆன்லைன் இதழை நான் படித்தேன். இந்த இதழின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெறுவதற்கு வருடாந்திர சந்தா செலுத்த நான் ஆர்வமாக உள்ளேன். இதற்கான அனைத்து நடவடிக்கைகளுக்கும் எனது நல் வாழ்த்துக்கள்


அபய் காந்த் ஜா
மின்னஞ்சல் - avypur@gmail.com


நியூ இந்தியா சமாச்சார் இதழின் நடைமுறைகள் மற்றும் சமீபத்திய செய்திகள் இடம்பெறச் செய்யும் உங்களது பயணத்தில், என்னையும் ஒரு அங்கமாக சேர்த்துக் கொண்டதற்கு மிக்க நன்றி. மாண்புமிகு பிரதமர் மற்றும் அவரது அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர்கள், தலைசிறந்த அர்ப்பணிப்பு மற்றும் சகிப்புத் தன்மையுடன் கடந்த சில ஆண்டுகளாக மிகச்சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றனர். அரசியல் சட்டப்பிரிவு-370 ரத்து, பணமதிப்பிழப்பு மற்றும் ஜிஎஸ்டி போன்ற அரசின் சில நடவடிக்கைகள், அர்ப்பணிப்பு மற்றும் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கின்றன.


சத்ய பிரகாஷ் பட்னாயக்
பஞ்சகோச்சியா, மொராடா,
மயூர்பஞ்ச்
pattnayaksp80@gmail.com

## உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் விளையாட்டரங்கை இந்தியா பெற்றுள்ளது



உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் விளையாட்டரங்கை, குஜராத்தின் அகமதாபாதில், பிப்ரவரி 24, 2021 அன்று குடியரசுத்தலைவர் ராம் நாத் கோவிந்த் திறந்துவைத்தார். இந்த விளையாட்டரங்கம், பசுமைக் கட்டட சான்றளிப்புக்கான தங்கத் தரத்தை பெற்றிருப்பதோடு, சுற்றுச் சூழலுக்கு உகந்த வளர்ச்சிக்கும் மிகச்சிறந்த உதாரணமாகும். முன்பு மோடேரா விளையாட்டரங்கம் என்றழைக்கப்பட்டு வந்த இந்த விளையாட்டரங்கிற்கு, தற்போது நரேந்திர மோடி கிரிக்கெட் விளையாட்டரங்கம் என பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த அரங்கில், 1 லட்சத்து 32 ஆயிரம் பார்வையாளர்கள் அமருவதற்கான இடவசதி உள்ளது. உலகத்தரத்திலான பல்வேறு வசதிகள் இங்கு செய்யப்பட்டுள்ளன. 63 ஏக்கர் பரப்பிலான தூண்கள் இல்லாத இந்த விளையாட்டரங்கம், ரூ.800கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு, எல்இடி மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த விளக்குகள், வீரர்களின் நிழல், ஆடுகளத்தில் தெரியாத வகையில் பார்த்துக் கொள்ளும் என்பதோடு, 40 முதல் 50 சதவீத அளவிற்கு மின்சார பயன்பாட்டை மிச்சப்படுத்தும். உலகின் மிகப்பெரிய இந்த கிரிக்கெட் விளையாட்டரங்கம், சர்தார் வல்லபாய் விளையாட்டு வளாகத்தின் ஒரு பகுதியாகும். சர்தார் படேல் விளையாட்டு வளாகத்தில், குறைந்தபட்சம் 20 விளையாட்டரங்கங்கள் கட்டப்படுவதோடு, அவை ஒவ்வொன்றுக்கும், சர்வதேசப் போட்டிகளில் நாட்டிற்கு அங்கீகாரம் பெற்றுக்கொடுத்த வீரர்களின் பெயர் சூட்டப்பட உள்ளது. 233 ஏக்கர் பரப்பிலான இந்த விளையாட்டு வளாகம், இந்தியாவின் மிகப்பெரிய விளையாட்டு வளாகமாகத் திகழும்.

## யோகா தின பயிற்சித் திட்டம்

சர்வதேச யோகா தினம், 2015 முதல் ஆண்டுதோறும் ஜூன் 21 அன்று உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் யோகா பயிற்சியை ஏற்றுக்கொண்டு பின்பற்றும் விதமாக, மத்திய ஆயுஷ் அமைச்சகம், பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதுபோன்ற ஒரு நடவடிக்கையாகத்தான், பொதுவான யோக பயிற்சித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. யோகா நிபுணர்கள் அடங்கிய குழுவால் இது உருவாக்கப்பட்டிருப்பதோடு, உடல் ரீதியாகவும், மனதளவிலும், உணர்வுப்பூர்வ மற்றும் ஆன்மீக ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான பாதுகாப்பான நடைமுறைகளைக் கொண்டதாகவும் உள்ளது. யோகா பற்றிய அறிவு மற்றும் பயிற்சியை பிரபலப்படுத்தி, மேம்படுத்தும் விதமாக, பொதுவான யோகா நடைமுறைகள் குறித்த ஆன்லைன் பயிற்சி அரங்கிற்கு ஆயுஷ் அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது. இது, ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் நடத்தப்படுகிறது. பிப்ரவரி 2021-ல் தொடங்கிய இந்தப் பயிற்சி அரங்கம், ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளன்று காலை 7 மணிக்குத் தொடங்குவதோடு, ஜூன் 2021 வரை இது தொடரும்.




## புவி வானியல் தரவுக்கான தளர்த்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளை அரசு அறிவித்துள்ளது

புவி வானியல் தரவுக்கான தளர்த்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளை அரசு அறிவித்துள்ளது. புவியின் மேற்பரப்பில் காணப்படும் பொருட்கள் அல்லது அம்சங்களைப் பிரதிபலிக்கும் தரவுகளை விளக்குவதற்கு இது பயன்படுத்தப்படுகிறது. கட்டுப்பாடுகள் முழுமையாக விலக்கிக் கொள்ளப்பட்டிருப்பது, இந்திய நிறுவனங்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும். இந்த நிறுவனங்கள், புவி வானியல் தரவு மற்றும் வரைபடம் உள்ளிட்ட புவியியல் தரவு சேவைகளைப் பெறுவதற்கும் தயாரிப்புக்கும் முன் அனுமதி பெறவோ, பாதுகாப்பு அனுமதி அல்லது உரிமம் பெறவேண்டிய தேவை இருக்காது. புதிய தளர்த்தப்பட்ட நெறிமுறைகள், சட்ட அமலாக்க அமைப்புகளால் சேகரிக்கப்படும் பிரத்யேக புவி வானியல் தரவுகள் தவிர, அரசு நிதியைப் பயன்படுத்தி சேகரிக்கப்படும் மற்ற புவி வானியல் தரவுகளைப் பெறுவதில், இந்திய விண்வெளி ஆய்வுக் கழகம் போன்ற இந்திய நிறுவனங்களின் பணிகளை எளிமையாக்க உதவும். இந்த அமைப்புகள், இதுபோன்ற புள்ளி விவரங்களை, அறிவியல், பொருளாதார மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காக எவ்வித கட்டுப்பாடுமின்றி பயன்படுத்திக் கொள்ளலாம். அரசின் இந்த முடிவு, நாட்டில் ரூ.1லட்சம் கோடி புவி வானியல் பொருளாதாரத்திற்கு வழிவகுக்கும்.

# மீட்சிப் பாதையில் இந்தியப் பொருளாதாரம் ; மொத்த உள்நாட்டு உற்பத்தியும் சாதகமாக உள்ளது



Interview | Cover Story

## "We are cautiously optimistic with our long-term approach"

From *Jaan Hai to Jahan Hai* to *Jaan Bhi Aur Jahan Bhi*, India has come a long way from not only saving lives but also bringing the economy on track. The country with 137 Crore population is not only faring better in terms of dealing with COVID-19 pandemic onslaught but also its impact on the economy. The upturn in the economy is visible by various indicators which has been made possible due to proper planning, better execution and a decisive leadership. In an exclusive conversation, Chief Economic Advisor Dr K V Subramanian spoke to Consulting Editors of New India Samachar Vinod Kumar and Santosh Kumar on various issues including future roadmap of the economy. Excerpts:

**Q India's preparation to check COVID-19 pandemic not only saved lives but also gave a new impetus to the economy. How did the Government's plan work effectively, which is taking the country towards a new hope?**

A When cases of COVID-19 started increasing in other countries around March, we studied the pattern of Spanish Flu pandemic that struck around 102 years ago. The one thing that came out of it that countries where lockdown was properly implemented with lesser mortality rate, the economic recovery was much better. The inference came out from this that we have to chalk out a long term strategy. The Government's priority was to save lives first and then to take care of the GDP. The Prime Minister said it correctly, '*Jaan Hai to Jahan Hai*'. After people followed his words and the nation was recovering fast, the slogan of '*Jaan*

New India Samachar | 27

2020-21ம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில், இந்தியப் பொருளாதாரம் 0.4 சதவீத வளர்ச்சியை அடைந்துள்ளது. கொரொனா பெருந்தொற்று பாதிப்பு மற்றும் அதன் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அமலப்படுத்தப்பட்ட நாடுதழுவிய ஊரடங்கு காரணமாக, முதல் காலண்டில் பொருளாதாரம் 23.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இரண்டாவது காலாண்டு அல்லது ஜுலை - செப்டம்பர் காலகட்டத்தில், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.5 சதவீதமாகக் குறைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் அடுத்தடுத்த இரண்டு காலாண்டுகளில் குறைந்ததால், அந்த காலகட்டம் பொருளாதார மந்தநிலை காலமாகக் கருதப்பட்டது. நியூ இந்தியா சமாச்சாருக்கு (டிசம்பர் 16-31வெளியீடு) பேட்டியளித்த தலைமைப் பொருளாதார ஆலோசகர் கே.வி.சுப்ரமணியன், மூன்றாவது காலாண்டில் பொருளாதாரம் சாதகமான நிலைக்கு மீண்டுவரும் என்று தெரிவித்துள்ளார். மூன்றாவது காலாண்டிற்கான புள்ளிவிவரங்களின்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் 0.4சதவீத வளர்ச்சி அடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது. வேளாண்துறை 3.9 சதவீதமும், உற்பத்தித்துறை 1.6 சதவீதமும். கட்டுமானத் தொழில் 6.2 சதவீத அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

## ஈ.எஸ்.ஐ திட்ட பயனாளிகள், அருகிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளிலும் தற்போது மருத்துவ சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்

ஈ.எஸ்.ஐ திட்ட பயனாளிகளுக்கு மேம்பட்ட மருத்துவ சேவைகளை வழங்க மத்திய அரசு, தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தற்போது, பயனாளிகள், தங்களது இருப்பிடத்திலிருந்து 10 கி.மீ. சுற்றளவுக்குள் ஈ.எஸ்.ஐ.சி மருத்துவமனையோ அல்லது மருந்தகமோ இல்லாவிட்டால், அருகிலுள்ள ஈ.எஸ்.ஐ.சி--யால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளிலும் மருத்துவ சேவைகளைப் பெற்றுக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.




ஈ.எஸ்.ஐ. திட்ட பயனாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டும், புதிய இடங்களில் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளை விரிவுபடுத்துவதற்குப் பதிலாகவும், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனைகளில் மருத்துவ சேவைகளைப் பெறுவதற்கு, பயனாளிகள், ஈ.எஸ்.ஐ.சி. மருந்தகங்களிலிருந்து எத்தகைய பரிந்துரைகளையும் பெற வேண்டியதில்லை. அவர்கள், தங்களுக்கு அருகிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளுக்குச் சென்று, ஈ.எஸ்.ஐ. இ-பெஹச்சான் அட்டை/சுகாதார பாஸ்புத்தகம் போன்றவற்றுடன் அரசால் வழங்கப்பட்ட எந்தவொரு அடையாள அட்டையையும் காட்டினாலே போதும். புறநோயாளிகள் பிரிவில் வழங்கப்படும் மருத்துவ ஆலோசனை ரொக்கப்பரிமாற்றமில்லாமல் நேரடியாகப் பெற முடியும்.

## வன உயிரினப் பாதுகாப்பு தடுப்புச் சுவருடன் அமைக்கப்படும் இந்தியாவின் முதல் நெடுஞ்சாலை



நாட்டிலேயே முதலாவதாக, உயர்த்தப்பட்ட வனஉயிரின பாதுகாப்பு தடுப்புச்சுவருடன் கூடிய நெடுஞ்சாலை இந்தியாவில் அமைக்கப்பட உள்ளது. தில்லி - சஹாரான்பூர் - டேராடூன் பொருளாதார பெருவழித்தடத்தில், இதற்கான பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது, வன உயிரினங்களைப் பாதுகாப்பதற்காக, 12 கிலோமீட்டர் தொலைவுக்கு இந்த உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை அமைக்கப்படுகிறது. ரூ.13,000 கோடி செலவிலான இந்த நெடுஞ்சாலை, தில்லி - டேராடூன் இடையிலான பயணத் தொலைவை, 235 கி.மீ.-லிருந்து 210 கி.மீயாகக் குறைப்பதோடு, பயண நேரமும், 6.5 மணி நேரத்திலிருந்து 2.5 மணி நேரமாகக் குறையும். இந்த நெடுஞ்சாலை முழுவதும், குறைந்தபட்சம் மணிக்கு 100கி.மீ வேகத்தில் வாகனத்தை இயக்கும் வகையில் அமைக்கப்பட உள்ளது. ஒவ்வொரு 25-30 கி.மீ தொலைவிற்கும், சாலையோர வசதிகளும் செய்யப்பட உள்ளது. திட்ட செயலாகத்தை எளிமைப்படுத்துவதற்காக, நெடுஞ்சாலையின் ஒட்டுமொத்த தொலைவும், 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இந்த சாலை, பாக்பத், சஹாரான்பூர் போன்ற பல்வேறு நகரங்கள் வழியாகச் செல்கிறது. இந்த நெடுஞ்சாலையின் 4-வது பகுதி, காப்புக்காடு வழியாகச் செல்வதால், அந்தப் பகுதி வன உயிரின பாதுகாப்புக்காக உயர்த்தப்பட்ட சாலையாக அமைக்கப்படுகிறது. இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கான அனுமதி, மார்ச்-2021க்குள் வழங்கப்பட உள்ளது. ■

# ஷெனாய் மேஸ்ட்ரோ

# உஸ்தாத் பிஸ்மில்லா கான்



உஸ்தாத் பிஸ்மில்லா கான் ஷெனாய் வாசிக்கும்போது, தமது மயக்கும் மெல்லிசையால், ரசிகர்களைக் கட்டிப்போடும் திறன் பெற்றவர். இசைக்கருவிகள் மீது கொண்ட தீராக்காதல் காரணமாக, அவர் அவற்றைச் செல்லமாக 'பேகம்' (மனைவி) என்று அழைப்பதை வழக்கமாகக் கொண்டவர். தற்போதும்கூட, ஷெனாய் இசைக்கருவி என்றாலே அது பிஸ்மில்லா கானைத்தான் நினைவுறுத்துகிறது.

**பிறப்பு :** மார்ச் 21, 1916 **மறைவு :** ஆகஸ்ட் 21, 2006

ஷெனாய் என்ற சொல் அல்லது அது எழுப்பும் ஒலி, உஸ்தாத் பிஸ்மில்லா கான்-ஐ நினைவுபடுத்துவதாக உள்ளது. ஷெனாய் எனப்படும் காற்றால் இசை ஏற்படுத்தும் கருவியை தனி ஒரு நபராக பிரபலப்படுத்தியவர் அவர். இந்திய பாரம்பரிய இசைக் கருவிகளின் நீரோட்டத்தில், ஷெனாய் இசைக்கருவியைக் கொண்டுவந்தவரும் அவரே. அவருக்கு முன்பாக, இந்த இசைக்கருவி, பெரும்பாலும் விழாக்களின்போது இசைக்கும் கருவியாக மட்டுமே இருந்தது. ஷெனாய் இசைக்கருவியை, சர்வதேச அரங்கிற்குக் கொண்டு சென்றவரும் அவரே. உலகெங்கிலும் தமக்கு ரசிகர்கள் இருந்தபோதிலும், பனாரஸில் (தற்போதைய வாரணாசி) வசிப்பதைத் தான் அவர் விரும்பினார். பீகார் மாநிலம் தும்ரானில், அரசவை இசைக்கலைஞர்கள் குடும்பத்தைச் சேர்ந்த பைகம்பர் கான் மற்றும் மித்தான் தம்பதியரின் இரண்டாவது மகனாக, அமிருதின் கான் என்ற இயற்பெயருடன் பிறந்தவர் அவர். அவரது தந்தை, தும்ரான் மகாராஜா கேஷப் பிரசாத் சிங்-கின் அரசவை இசைக் கலைஞராக பணியாற்றியவர். இவருக்கு ஆறு வயதாக இருக்கும்போது, விஸ்வநாதர் கோவிலின் அதிகாரப்பூர்வ ஷெனாய் இசைக் கலைஞரான தமது தாய் மாமன் அலி பக்ஸ் வசித்த உத்தரபிரதேச மாநிலம் வாரணாசிக்கு இடம் பெயர்ந்தார் கான். ஷெனாய் இசைக்கருவி மீது அவருக்கு இருந்த ஆர்வத்தை அறிந்த பக்ஸ், அவருக்குப் பயிற்சியளிக்கத் தொடங்கினார்.

மத ரீதியாக இசைக்கும் பயிற்சி பெற்ற அவர், குறுகிய காலத்திலேயே அதில் புலமை பெற்றார். படிப்படியாக திறனை மேம்படுத்திக் கொண்டே வந்த அவர், ஷெனாய் இசைக்கருவிக்கு அப்பாற்பட்டது என்று கருதப்பட்ட பல்வேறு புதிய 'ராகங்களை'யும் கண்டுபிடித்தார்.

தமது வாழ்நாள் முழுவதும் வாரணாசியிலேயே வசித்ததன் மூலம், அந்த நகரத்தின் மீது அவர் எந்தளவிற்கு காதல் கொண்டிருந்தார் என்பதற்கு சாட்சியமாகும். காசியைப் போன்ற நகரம் வேறு எதுவும் இல்லை என்றும் அவர் கூறிவந்தார். குளிப்பதற்கு கங்கை நதி, தொழுகை நடத்துவதற்கு மசூதி மற்றும் பயிற்சி பெறுவதற்கு பாலாஜி கோவில் என, அவருக்குத் தேவையான அனைத்தும் காசியில் கிடைத்தது. சமூக நல்லிணக்கம் அல்லது வாரணாசியில் புகழ்பெற்ற கங்கா - ஜமுனா கலாச்சாரத்திற்கு (இந்து - முஸ்லீம் ஒருமைப்பாட்டு கலாச்சாரம்) மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்ந்தவர் ஷெனாய் மேஸ்ட்ரோ. தமக்குக் கிடைத்த எல்லாப் புகழையும், அல்லா, சரஸ்வதி தேவி மற்றும் விஸ்வநாத பெருமானுக்கு அர்ப்பணம் செய்தவர் அவர்.

பல்வேறு சந்தர்ப்பங்களில், அவருக்குப் பெருமளவு பணமும், வெளிநாட்டில் வசிப்பதற்கான வாய்ப்பும் கிடைத்தபோதும்கூட, அவற்றையெல்லாம் மறுத்துவிட்டு, வாரணாசி தான் தமக்கு சொந்த ஊர் என்று கூறி வந்துள்ளார். வாரணாசியைப் போன்ற ஒரு நகரத்தையே உருவாக்கித் தருவதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட போதும்கூட, "பிம்பம் ஒருபோதும் நிஜமாகாது. கங்கை நதி ஓடும் வாரணாசியில் தான், பாலாஜி பெருமானுக்கு ஷெனாய் இசைக்க முடியும். நான் எனது சொந்த ஊரில் தான் வசிப்பேன், இந்தியாவைத் தவிர வேறு எங்கும் வசிக்க மாட்டேன்" என்று உறுதிபடக் கூறிவந்தார்.

1937-ம் ஆண்டு கொல்கத்தாவில் நடைபெற்ற அகில இந்திய இசை மாநாட்டில் நடைபெற்ற இசை நிகழ்ச்சிதான் அவரது வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது. அதன்பிறகு, அவருக்குப் பின்னடைவே கிடையாது. 1947-ம் ஆண்டு இந்தியா சுதந்திரமடைந்தபோது, செங்கோட்டையில் ஷெனாய் இசைக்கும் அரிய கவுரவத்தை அவர் பெற்றார்.

2006-ம் ஆண்டு அவர் மறைவெய்தியபோது, அவர் பயன்படுத்திவந்த ஷெனாய் இசைக்கருவிக்கும் ஓய்வு அளிக்கப்பட்டது. இந்தியாவின் மிக உயரிய சிவிலியன் விருதுகளான - பத்மஸ்ரீ(1961), பத்ம பூஷன்(1968), பத்ம விபூஷன்(1980) மற்றும் பாரத் ரத்னா(2001) ஆகிய 4 விருதுகளையும் பெற்றவர் அவர். ■

சர்வதேச மகிழ்ச்சி தினம்
மார்ச் 20, 2021

# கோடிக்கணக்கான
# புன்னகை முகங்கள்!

மையக் கருத்து:
அமைதியாக இருங்கள்
நலமுடன் இருங்கள்
அன்புடன் இருங்கள்

உங்கள் முகத்தை எப்போதும் புன்னகையுடன் வைத்திருப்பதன் மூலம், வாழ்க்கையை எளிதாக்கிக் கொள்ள முடியும் என்பதோடு, அனைத்துத் தடைகளையும் கடந்து வரவும் இது உதவிகரமாக இருக்கும். இந்தக் கருத்தை அங்கீகரிக்கும் விதமாகவே, சர்வதேச மகிழ்ச்சி தினம் கொண்டாடப்படுகிறது. எனினும், மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்கு ஒரு நாள் மட்டும் போதாது, ஏனெனில் வாழ்க்கையின் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் ஒருவர் அனுபவித்து களிப்புற வேண்டும். உள்ளடக்கிய, சமத்துவமான மற்றும் சமச்சீரான பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் இந்நாள், நீடித்த வளர்ச்சி, வறுமை ஒழிப்பு, மகிழ்ச்சி மற்றும் அனைவருக்கும் நல்லதே நடப்பதை உறுதி செய்யவும் கொண்டாடப்படுகிறது



## ஜல் ஜீவன் இயக்கம்

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ், 17 மாதங்களிலேயே, கிராமப்புறங்களில் உள்ள 3.53 கோடி வீடுகளுக்கு குழாய் வழி குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது

## பிரதமரின் உஜ்வாலா

புகையில்லா சமையலறைகளை அமைக்கும் விதமாக, 8.3கோடி பெண்களுக்கு இலவச எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது



## பிரதமரின் ஜீவன் ஜோதி பீம யோஜனா

குறைந்த செலவில், புதுப்பிக்கத்தக்க ஆண்டு ப்ரீமியமாக ரூ.330 செலுத்தி, ஆயுள் காப்பீடாக ரூ.2லட்சம் பெறலாம். இதுவரை, 9.88 கோடி மக்கள், இத்திட்டத்தில் பதிவு செய்துள்ளனர்

## ஜன் ஆசாதி

700 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 6,600 பிரதமரின் ஜன் ஆசாதி மையங்கள் (மக்கள் மருந்தகங்கள்) மூலம், குறைந்த விலையில், தரமான மருந்துப் பொருட்கள் கிடைப்பது, ஏழைகளின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது

## உஜாலா

எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் விதமாக, 36.71 கோடி எல்இடி விளக்குகள் வழங்கப்பட்டு, ஆண்டுக்கு ரூ.18,000 கோடி சேமிக்கப்படுகிறது

## ஆயுஷ்மான் பாரத்

50 கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்கு, ரூ.5 லட்சம் வரை இலவச சிகிச்சை வழங்கப்படுவதன் மூலம், ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிவகுக்கப்பட்டுள்ளது. இதுவரை, 1.63 கோடிக்கு மேற்பட்ட மக்கள் இத்திட்டத்தின் பலனை அனுபவித்துள்ளனர்

## பிரதமரின் ஆவாஸ்

சொந்த வீட்டிற்கு உரிமையாளராகும் கனவு தற்போது நனவாகியுள்ளது. பிரதமரின் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், இதுவரை 1.68 கோடி மக்கள் சொந்த வீட்டைப் பெற்றுள்ளனர்

## பிரதமரின் கிசான்

பிரதமரின் கிசான் சம்மான் நிதி (பிரதமரின் விவசாயிகள் ஆதரவு நிதியுதவி) 11.64 கோடி குடும்பங்களுக்கு பலனளித்துள்ளது. இதுவரை, ரூ.1.13லட்சம் கோடி, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது



## உடான்

வெறும் ரூ.2,500 மட்டும் செலவு செய்தால், விமானப் பயணம் மேற்கொள்ள வகை செய்யப்பட்டதன் மூலம், 53 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் விமானப் பயண கனவு நனவாகியுள்ளது

## பிரதமரின் ஸ்வநிதி

கொரோனா காலத்தில் நிவாரணம் அளிக்கும் விதமாக, 2.76கோடிக்கும் மேற்பட்ட சாலையோர சிறுவியாபாரிகளுக்கு , இதுவரை ரூ.2,071 கோடி அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது



# சமூக ஊடகங்களை நடத்துவதற்கு புதிய விதிமுறைகள்,

## ஓடிடி-தளங்களும் பொறுப்பு ஏற்க வகை செய்யப்படுகிறது



**டிஜிட்டல் இந்தியா திட்டம், சாமான்ய மனிதனுக்கும் அதிகாரமளிக்கிறது. செல்போன்கள் மற்றும் இணையதளத்தின் பரவலான வளர்ச்சி, பல்வேறு சமூக ஊடகங்களும் இந்தியாவில் தடம்பதிக்க வகை செய்துள்ளன. எனினும், சமூக ஊடகங்கள், செய்தி ஊடகங்கள் மற்றும் ஓவர் - தி - டாப் (ஓடிடி) தளங்களை, வரைமுறைப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்துவந்தது. இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றும் விதமாக, புதிய வழிகாட்டு நெறிமுறைகளை அரசு வெளியிட்டுள்ளது**

பல்வேறு சமூக ஊடக தளங்கள் இந்தியாவில் பயன்பாட்டில் உள்ளதோடு, நாட்டு மக்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அத்துடன், இவை அனைத்தும் சாமான்ய மனிதனின் வாழ்க்கையின் மிக முக்கிய அங்கமாகவும் மாறிவிட்டது. இந்தியாவில் சமூக ஊடக தளங்களின் பயன்பாடு விரிவடைந்திருப்பது, மக்கள் தங்களது படைப்பாற்றல், கேள்வி கேட்கும் திறன் போன்றவற்றை வெளிப்படுத்தவும், தகவல்களை அறிந்து கொள்ளவும், கருத்துக்களை பகிர்ந்து கொள்ளவும் அரசு மற்றும் அதன் நிர்வாகிகளைப் பற்றிய விமர்சனங்களை வெளிப்படுத்தவும் வகை செய்துள்ளது. இந்தியர்கள் ஒவ்வொருவரும் அரசை விமர்சிக்கவும், மறுப்புத் தெரிவிக்கவும் உரிமை உள்ளது என்பதை அரசு ஒப்புக் கொண்டுள்ளது. எனினும், வெளிப்படைத்தன்மை இல்லாதது, பொறுப்புணர்வு மற்றும் டிஜிட்டல் ஊடக பயன்பாட்டாளர்களின் உரிமை போன்றவை கவலை அளிக்கத்தக்கதாக உள்ளது. சமூக ஊடக பரவல், ஒருபுறம் மக்களுக்கு அதிகாரமளித்தாலும், மறுபுறம் சமீபகாலமாக அதிகரித்து வரும் மோசமான விளைவுகள் மற்றும் கவலைகளை அளிப்பதாகவும் உள்ளது.

**53** கோடி வாட்ஸ்ஆப் பயன்பாட்டாளர்கள் இந்தியாவில் உள்ளனர்

**1.75** கோடி டிவிட்டர் பயன்பாட்டாளர்கள் இந்தியாவில் உள்ளனர்

**44.8** கோடி யூ டியூப் பயன்பாட்டாளர்கள் இந்தியாவில் உள்ளனர்

**41** கோடி முகநூல் பயன்பாட்டாளர்கள் இந்தியாவில் உள்ளனர்

**21** கோடி இன்ஸ்டாகிராமம் பயன்பாட்டாளர்கள் இந்தியாவில் உள்ளனர்

### சமூக ஊடகங்களுக்கான புதிய வழிகாட்டி நெறிமுறைகள்

- தகவல் தொழில்நுட்ப (இடைநிலை வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் டிஜிட்டல் மீடியா நடத்தை விதிகள்) விதிமுறைகள், 2021-ஐ அரசு வெளியிட்டுள்ளது
- புதிய விதிமுறைகள், சமூக ஊடக பயன்பாட்டாளர்களுக்கு அதிகாரமளித்துள்ளது
- பாதிக்கப்படுவோர் தெரிவிக்கும் புகார்களைப் பெறவும், குறைதீர்க்கவும் உரிய அமைப்பு ஒன்றை சமூக ஊடகங்கள் உருவாக்க வேண்டும்
- இதுபோன்ற குறைகளுக்குத் தீர்வுகாண அதிகாரை ஒருவரை நியமிப்பதுடன், அவரது பெயர் மற்றும் விவரங்களையும் பகிர்ந்துகொள்ள வேண்டும்
- பெறப்பட்ட புகார்கள் மற்றும் அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்கள் குறித்து மாதாந்திர அறிக்கை ஒன்றை சமூக ஊடக அமைப்புகள் வெளியிட வேண்டும்
- இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும் வகையிலான தகவல்களை முதலில் பரப்பியவர் அல்லது குறைந்தது ஐந்து ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனைக்குரிய குற்றங்களில் ஈடுபட்டவர்கள் யார் என்பதை, சமூக ஊடக அமைப்புகள் கண்டறிய வேண்டும்
- புகார் வரப்பெற்ற 24 மணி நேரத்திற்குள், ஆட்சேபகரமான கருத்துக்களை, சமூக ஊடகங்கள் அகற்ற வேண்டும்

# டிஜிட்டல் ஊடகங்கள், ஓடிடி அமைப்புகளுக்கான புதிய தகவல் என்ன

- ஓடிடி தளத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், அரசு உரிய விதிமுறைகளை வகுக்கும்
- இதுவரை, ஓடிடி தளத்திற்கு எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை
- டிஜிட்டல் ஊடகங்களில் செய்தி வெளியிடுவோர், இந்திய பத்திரிகை கவுன்சிலின் இதழியல் கோட்பாடுகள் மற்றும் கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு ஒழுங்குமுறைச் சட்டங்களை அறிந்து கொள்ள வேண்டும்
- ஆன்லைன் செய்திகள், ஓடிடி தளம் மற்றும் டிஜிட்டல் ஊடகங்களுக்கான கட்டுப்பாடு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது
- ஓடிடி தளங்கள், யு (யுனிவர்சல்) யு/ஏ7+ யு/ஏ13+ யு/ஏ16+ மற்றும் ஏ(வயதுவந்தோர் மட்டும்) என வயது அடிப்படையிலான ஐந்து பிரிவுகளாக பிரித்து, படக்காட்சிகளை சுயமாக வகைப்படுத்த வேண்டும். யு/ஏ13+ அல்லது அதற்கு மேல் வகைப்படுத்தப்பட்ட படங்களை, பெற்றோருடன் பார்க்கும் வகையில் கட்டுப்பாடுகளை செயல்படுத்த வேண்டும்
- பல்வேறு நிலையிலான சுய கட்டுப்பாட்டு விதிகளின் கீழ், இந்த அமைப்புகளுக்கு, மூன்றடுக்கு குறைதீர்ப்பு நடைமுறை ஒன்று வகுக்கப்பட வேண்டும்
- உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி அல்லது சுதந்திரமான முக்கியப் பிரமுகர் தலைமையில், வெளியீட்டாளர்களுக்கான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சுய-கட்டுப்பாட்டு அமைப்புகள் தேவை
- கண்காணிப்பு நடைமுறை ஒன்றை, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் உருவாக்கும்

எவ்வாறு மற்றும் எதற்காக, புதிய விதிமுறைகள் வகுக்கப்படும்

- 2018-ல், வழக்கு ஒன்றை தாமாக முன்வந்து விசாரித்த உச்சநீதிமன்றம், குழந்தைகளுக்கு எதிரான ஆபாசப் படங்கள், பாலியல் அத்துமீறல் மற்றும் கூட்டு பாலியல் அத்துமீறல் பற்றிய புகைப்படங்கள், வீடியோக்கள் மற்றும் தளங்கள் மற்றும் இது குறித்த அமைப்புகள் மற்றும் பிற செயலிகளைக் கட்டுப்படுத்தத் தேவையான நெறிமுறைகளை வகுக்க வேண்டுமென உத்தரவிட்டுள்ளது
- புதிய விதிமுறைகளை வெளியிடுவதற்கான நடைமுறைகளை வகுப்பதற்கான காலக்கொடுவைத் தெரிவிக்குமாறு, மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்திற்கு 2019-ல், உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது
- சமூக ஊடகங்களில் வெளியாகும் குழந்தைகளின் ஆபாசப் படங்கள், அபாயகரமான அளவிற்கு இருப்பது குறித்தும், இதன் காரணமாக குழந்தைகள் மற்றும் சமுதாயத்தில் ஒட்டுமொத்தமாக ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை முழுமையாக ஆய்வு செய்தபின், 2020-ல் மாநிலங்களவை துணைக் கமிட்டி அளித்த அறிக்கையில், ஆபாசப் படங்களை முதலில் வெளியிட்டவர் யார் என்பதை அடையாளம்காண வகை செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது



- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வரைவு விதிமுறைகள் ஒன்றைத் தயாரித்து, டிசம்பர் 2018-ல் பொதுமக்களின் கருத்தைக் கோரியது. 171 விமர்சனங்கள் மற்றும் 80 போட்டி விமர்சனங்கள் வரப்பெற்றன. இதுபோன்ற விமர்சனங்களை விரிவாக ஆய்வுசெய்து, அமைச்சகங்களுக்கு இடையேயான கூட்டமும் நடத்தப்பட்டு, விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது

சமூக ஊடகத் தளங்களில் போலிச் செய்திகள் மற்றும் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. சமூக ஊடகங்களை தவறாகப் பயன்படுத்தி, சித்தரிக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் அம்சங்களைப் பகிர்ந்து கொள்வது, கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்து வருகிறது. இவற்றை, தனி நபரின் கண்ணியத்திற்கான அச்சுறுத்தலாக மட்டும் கருதாமல், இயற்கை நியதிக்கு எதிரானதாகவும் கருத வேண்டும். ஆபாச வார்த்தைகள், வன்முறையைத் தூண்டக்கூடிய பேச்சுக்கள் மற்றும் ஆபாசப் படங்கள் வெளியீடு மற்றும் மத உணர்வுகளை அவமதிக்கும் விதமாக சம்பவங்கள், சமூக ஊடகங்களில் அதிகரித்து வருகிறது. நாடாளுமன்றம் மற்றும் அதன் குழுக்கள், நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் பொது சமுதாய விவாதங்களில், அவ்வப்போது கவலை தெரிவிக்கப்பட்டு வருகிறது.

முகநூல், டுவிட்டர் மற்றும் நெட்ஃபிளிக்ஸ், அமேசான் பிரைம் மற்றும் ஹாட்ஸ்டார் போன்ற ஓடிடி தளங்கள் உள்ளிட்ட சமூக ஊடகங்களுக்கான புதிய நெறிமுறைகளை பிப்ரவரி 25, 2021 அன்று அரசு அறிவித்தது. டிஜிட்டல் மீடியா மற்றும் ஓடிடி--க்கான விதிமுறைகள், உள்ளரங்கு மற்றும் சுய கட்டுப்பாட்டு நடைமுறைகள் குறித்துத் தான் அதிக கவனம் செலுத்துவதாக உள்ளன. இதழியல் மற்றும் புதுமை சிந்தனை சுதந்திரத்தை நிலைநாட்டும் அதேவேளையில், குறைதீர்ப்புக்கான விரிவான நடைமுறைகளும் தேவை. புதிய விதிமுறைகள், மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாக அமைவதோடு, புதுமைக் கண்டுபிடிப்பு திறனைத் தடுப்பதாக நிலவக்கூடிய தவறான எண்ணத்தை போக்குவதாகவும் இருக்க வேண்டும். ■

# உள்ளூர் பொம்மைகள்

## சர்வதேச சந்தைகளுக்கு

பொம்மைகள் என்பவை விளையாட்டுப் பொருட்களாக இருப்பதோடு மட்டுமல்லாமல் கற்றுக் கொள்ள உதவுபவை என இரண்டு விதமாகவும் பயன்படுகின்றன. நிலையான நினைவுகளை நமக்குள் ஏற்படுத்தும் பொம்மைகள் குழந்தைகளின் அறிவுத் திறன் மற்றும் அறிவாற்றல் வளர்ச்சி மேம்பாட்டுக்கும் உதவுகின்றன. மேலும் குழந்தைகள் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் குறித்து கற்றுக் கொள்வதற்கும் ஏற்ற ஊடகமாக பொம்மைகள் விளங்குகின்றன. பொருளாதார ரீதியில் பொம்மைகள் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் ஆதார மையமாகவும் விளங்குகின்றன. புத்தாக்கமான மற்றும் நவீன பொம்மைகள் பிரபல்யம் பெற்று வரும் நேரத்தில் சர்வதேச பொம்மை சந்தை மதிப்பு ரூ.7 லட்சம் கோடியாக இருந்த சமயத்தில் இந்தியாவின் பங்கு 0.5 சதவிகிதம் என இருந்தது. எனவே அரசு 2024க்குள் பொம்மை ஏற்றுமதியை ரூ.2,800 கோடி மதிப்புக்கு அதிகரிக்கவும் கூடுதலான வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் இலக்கு நிர்ணயம் செய்து உள்ளது. எனவே இந்தியா இப்போது சுயசார்புள்ள பொம்மை தயாரிப்புத் தொழிலைத் தொடங்கி உள்ளது.....











"எனக்கு பொம்மைகள் செய்வது பிடிக்கும். நான் பொம்மை தயாரிக்கும் கலையை ராஜஸ்தான் மற்றும் கொல்கத்தாவில் கற்றுக் கொண்டேன். நாங்கள் தயாரிக்கும் பொம்மைகள் பெரிதும் பாராட்டைப் பெற்று வருவதோடு உள்ளூரில் தயாரிக்கும் பொம்மைகள் குறித்த மக்களின் பார்வையும் பெரிதும் மாறி உள்ளது. நாங்கள் தயாரிக்கும் பொம்மைகளுக்கு இப்போது நல்ல வரவேற்பு இருக்கிறது", என்று கூறுகிறார் ஜார்கண்ட் மாநிலத்தின் ராஞ்சியில் இருந்து வந்துள்ள ஷோபா குமாரி. அவரது ஆர்வமானது இப்போது வருவாய் ஈட்டும் ஆதாரமாக மாறி உள்ளது. நல்லதே நடந்து கொண்டிருப்பதைப் பார்த்த பின்பு சலீனா கச்சப், பிரதீபா டோப்பி மற்றும் மற்றவர்களுக்கும் அவர் தனது கலைத் திறனைக் கற்றுத் தந்தார். இன்று இந்தக் குழுவினர் அமெரிக்காவுக்கும் நெதர்லாந்துக்கும் தாங்கள் தயாரித்த பொம்மைகளை ஏற்றுமதி செய்கின்றனர். மற்றும் இந்திய பொம்மைகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தையும் தருகின்றனர்.





உள்நாட்டு மரப் பொம்மைகள் தயாரிப்பவரான சி.வி.ராஜு ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் உள்ள எடிகொப்பக்காவில் இருந்து வந்துள்ளார். எடிகொப்பக்காவில் பொம்மை தயாரிக்கும் பாரம்பரியமானது சில நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. இத்தகைய பழமையான வண்ணப்பூச்சு வேலை கொண்ட பொம்மைகளின் சிறப்பம்சங்கள் என்னவென்றால் அவை மரத்தால் செய்யப்படுவதும் அவற்றில் கூர்மையான முனைகள் இல்லை என்பதுவுமே ஆகும். முனைகள் வட்ட வடிவமாக இருப்பதால் குழந்தைகள் பயன்படுத்தும் போது அவர்களுக்கு காயம் ஏற்படும் வாய்ப்பு குறைகிறது. மேலும் இத்தகைய பொம்மைகளில் எந்தவிதமான ரசாயனப் பொருட்களும் சேர்க்கப்படுவதில்லை. வழக்கொழிந்து போகும் இந்தக் கலையைப் புதுப்பிக்க ராஜு தனது கிராமத்தின் கைவினைக் கலைஞர்களுடன் இணைந்து புதிய இயக்கத்தைத் தொடங்கினார். இந்தப் பாரம்பரியமான பொம்மைகளுக்கு புவிசார் குறியீட்டை (GI) புவிசார் குறியீட்டுப் பதிவு அமைப்பு வழங்கி உள்ளது. ராஜுவின் முன்னெடுப்பு என்பது மறைந்து போன பாரம்பரியத்தைப் புதுப்பிப்பதாக மட்டும் அல்லாமல் 150க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தையும் வழங்குகிறது.

"சுய-சார்பு இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற பிரதம மந்திரியின் அழைப்பைத் தொடர்ந்து நாங்கள் பொம்மைகளை உற்பத்தி செய்ய முடிவு செய்தோம், இல்லையென்றால் பொம்மைகளை இறக்குமதிதான் செய்ய வேண்டும். ஊரடங்கின் போது மிக விரிவாக ஆய்வு செய்த பிறகு, நாங்கள் குஜராத்தின் ராஜ்காட்டில் பொம்மைகளைத் தயாரிக்கத் தொடங்கினோம். எங்களது நோக்கம் இறக்குமதியைக் குறைப்பது மற்றும் பொம்மை உற்பத்தியில் இந்தியாவை சுய-சார்புள்ள நாடாக மாற்றுவது என்பதே ஆகும் என்று கூறுகிறார் அதிதி டாய்ஸ் பிரைவேட் லிமிட்டெட்டின் பொதுமேலாளர் ஹிமான்ஷு வோரா. இந்த பொம்மை உற்பத்தி நிறுவனமானது 100 சதவிகிதம் இந்தியாவிலேயே தயாரிக்கும் பொம்மைகளை உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு உள்ளது. இது 160க்கும் மேற்பட்ட வகைகளில் பொம்மைகளை உற்பத்தி செய்து இறக்குமதிக்கு சரியான போட்டியாக விளங்குகிறது.



தங்களது முயற்சிகள் குறித்து பேசும் போது வோரா "ஒரு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அவர்கள் 100 சதவிகித இந்தியப் பொருட்களைத் தயாரிக்கின்றனர் என்கிறார். எங்களது நோக்கம் இந்தியாவின் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்வதும் இறக்குமதியைக் குறைப்பதுவுமே ஆகும். கல்வி சார்ந்த விளையாட்டுகளைத் தயாரிப்பதில் நாங்கள் ஈடுபட்டு உள்ளோம். இந்த ஏற்பாடுகள் அனைத்தையும் ஊரடங்கிற்குப் பிறகு வெறும் மூன்று மாதங்களிலேயே செய்து விட்டோம். நாம் எல்லோரும் சேர்ந்து ஒன்றாக முயற்சி செய்தால், முக்கியமான மாற்றங்களை நம்மால் ஏற்படுத்த முடியும்" என்கிறார் வோரா. இவரது நிறுவனம் ரூபாய் 1.15 கோடி கடன் பெற்று நெருக்கடியை வாய்ப்பாக மாற்றியது. மூன்றாவது ஆலை இப்போது செயல்படுவதோடு பொம்மைகளைத் தயாரிக்கவும் தொடங்கி விட்டது. ரிமோட் கட்டுப்பாட்டு கார்கள் முதல் டாக்டர் பொம்மை செட் வரை இங்கு தயாரிக்கப்படுகிறது. இவர்கள் தயாரிக்கும் பொம்மைகள் இறக்குமதி செய்யப்படும் பொம்மைகளைவிட விலை குறைவாக உள்ளன.







இவை வெறும் கதைகள் மட்டுமே அல்ல. மாறாக, இந்தியாவில் பொம்மை தயாரிப்புத் தொழிலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் ஆகும். அபினவ் பானர்ஜி தில்லியின் ஜண்டேவாலனில் உள்ள புகழ் பெற்ற பொம்மை சந்தைக்குச் சென்ற போது இந்த மாற்றத்தைக் கண்கூடாகக் கண்டார். கடந்த காலத்தில் இந்தச் சந்தையில் இறக்குமதி செய்யப்பட்ட பொம்மைகள் மட்டுமே விற்பனைக்குக் கிடைக்கும். ஆனால் இந்த சந்தைக்கு கடந்த முறை அவர் சென்றபோது அங்கு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பலவகையான பொம்மைகள் விற்கப்படுவதைக் கண்டார். பொம்மைகளைத் தயாரிப்பவர்கள் மட்டும் அல்லாமல் வாங்குபவர்களும்கூட இந்தியாவில் தயாரிக்கப்படும் பொம்மைகளுக்கு ஆதரவாக உள்ளனர். களத்தில் ஏற்பட்டுள்ள உண்மையான மாற்றத்துக்கு இது ஒரு சாட்சியமாக உள்ளது. பிரதம மந்திரி நரேந்திர மோடி மாற்றத்துக்கான விதைகளை 2020ல் விதைத்து இருந்தார். ஆகஸ்ட் 2020ல் தனது மாதாந்திர வானொலி நிகழ்ச்சியான “மனதின் குரல்” நிகழ்வில் பிரதமர், ”உள்ளூர் பொம்மைகளுக்கு ஆதரவு அளிப்பதற்கு இதுவே சரியான தருணம்” என்று தெரிவித்து இருந்தார். சர்வதேச அளவில் பொம்மைத் தொழிலின் மதிப்பு ரூ.7 லட்சம் கோடிக்கும் அதிகம் என்பது உங்களுக்கு ஆச்சரியம் அளிப்பதாக இருக்கும். இத்தகைய பெரும் வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு என்பது மிகவும் குறைவுதான். இப்போது பாரம்பரியம், மரபு, பன்முகத்தன்மை மற்றும் மக்கள் தொகையில் இளைஞர்களின் பங்கு ஆகியவை நிறைந்த தேசத்துக்காக சிந்தித்துப் பாருங்கள். சர்வதேச பொம்மைச் சந்தையில் மிகச் சிறிய பங்களிப்பு மட்டுமே இருப்பது நன்றாக இருக்கிறதா? நிச்சயமாக இல்லை. இதைக் கேட்ட பிறகு நீங்களும் வருத்தப்படுவீர்கள்”, என்று கூறும் பிரதம மந்திரி, மக்களின் கவனத்தை இந்திய பொம்மைச் சந்தையின் மீது திருப்பி உள்ளார். இதுவரை இந்தியச் சந்தைகளை வெளிநாட்டுப் பொம்மைகள்தான் ஆக்கிரமித்து இருந்தன. பாரம்பரியமான உள்ளூர் பொம்மைகள் கண்ணில் படுவதே இல்லை. ஒட்டுமொத்த உலகமும் கொரோனா வைரஸ் பெருந்தொற்றுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்த போது, இந்தியா நெருக்கடியை எவ்வாறு வாய்ப்பாக மாற்றுவது என எடுத்துக்காட்டியது. அதனால் கையால் தயாரிக்கப்பட்ட மற்றும் உள்ளூர் பொம்மைகள் வெளிச்சத்துக்கு வந்தன. தனது திறமை மற்றும் தைரியத்தால் இந்தியா இப்போது பொம்மைச் சந்தையை ஆக்கிரமிக்கத் தயராக உள்ளது.

“உள்ளூர் தயாரிப்புக்கு ஆதரவுக் குரல்” என்ற தாரக மந்திரமானது உள்ளூர் பொம்மைகள் குறித்த விற்பனையாளர்கள் மற்றும் வாங்குபவர்களின் கண்ணோட்டத்தை மாற்றி உள்ளது. இந்த மாற்றமானது பாரம்பரிய பொம்மைகளுக்கான தேவையை அதிகரித்து உள்ளது. டெரக்கோட்டா, பாக்குமட்டை, மரம், மூங்கில், ஆமை ஓடு ஆகியவற்றால் செய்யப்பட்ட பொம்மைகள் உட்பட உள்ளூர் பொம்மைகளுக்கான தேவை அதிகரித்து உள்ளது. மாற்றத்தின் வேகம் கையால் தயாரிக்கப்படும் பொம்மைகள் மீது மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. மாறாக ஒட்டுமொத்த தொழில் மீதே தாக்கத்தை எற்படுத்தி உள்ளது. சிறந்த பொம்மைகளை தயாரிக்கும் தொழில் நிபுணத்துவம் கொண்ட திறன் பெற்ற கைவினைக் கலைஞர்கள் இந்தியாவில் உள்ளனர். குஜராத்தில் ராஜ்கோட், கர்நாடகாவின் ராமநகரத்தின் சன்னப்பட்டினம், ஆந்திரப்பிரதேசத்தின் கிருஷ்ணாவில் கொண்டப்பள்ளி, தமிழ்நாட்டில் தஞ்சாவூர், அசாமில் காபரி மற்றும் உத்திரப் பிரதேசத்தில் வாரணாசி ஆகிய பகுதிகள் பொம்மைத் தயாரிப்புத் தொகுப்பிட மையங்களாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன. பொம்மைத் தொழில் உற்பத்திப் பிரிவில் இந்தியாவைத் தன்னிறைவு பெற்ற நாடாக மாற்றுவதில் அரசின் அர்ப்பணிப்பை அதன் முன்னெடுப்பு நடவடிக்கைகள் மூலம் உணரலாம். இந்தத் தொழிலைப் புதுப்பிக்கவும் விரிவாக்கவும் 15 அமைச்சகங்கள் மற்றும் துறைகள் ஒன்றாக கைகோர்த்து உள்ளன. இந்தியப் பொம்மை தயாரிப்புத் தொழிலை சுய-சார்பு கொண்ட தொழிலாக மாற்றுவதில் இது தொடக்கம் மட்டுமே ஆகும். இதற்கு முந்தைய மத்திய அரசுகள் இதற்காக எதுவும் செய்யவில்லையா? அப்படி ஏதும் செய்திருந்தால், அதன் பலன்கள் என்ன? இந்த புதிய தொடக்கத்துக்கான காரணம் என்ன?

## இன்றைய தொழில் திறனுக்குப் பின்னுள்ள செறிவான, பழமையான நாகரிகம், உணர்ச்சிக் கனிவு

எந்த ஒரு நாட்டின் பொம்மைகளும் அந்த நாட்டின் கலாச்சாரம் மற்றும் வாழ்க்கை முறையைப் பிரதிபலிப்பவனாக இருக்கின்றன. இந்தியாவில் பொம்மைகளுடனான தொடர்பை நாம் பின்னோக்கிச் சென்று ஹரப்பா நாகரிகத்தில் பார்க்கலாம். அகழ்வாய்வின் போது அந்தக் காலகட்டத்துக்கு உரிய பலவகைப்பட்ட பொம்மைகள் கிடைத்தன.

நவீன காலகட்டத்தில் பணம் இல்லாவிட்டாலும் கூட குழந்தைகள் பொம்மைகள் இல்லாமல் மகிழ்ச்சியாக இருக்க

> சுய-சார்பு இந்தியா என்பதோடு இந்தியப் பொம்மைகளுக்காக உள்ளூர் தயாரிப்பு ஆதரவுக் குரல் எழுப்புவதற்கும் இதுவே சரியான தருணம் என்று கூறுகிறார் பிரதமர்



# லஷ்மி சந்த், விஜய் மெக்ரா இருவரும் சுய-சார்பு உடையவர்களாக மாறுவதற்கு பொம்மைகள் உதவுகின்றன

தில்லியின் லஷ்மி சந்த் பொம்மை தயாரிப்பில் ஈடுபட்ட தனது பெற்றோரின் முயற்சிகளை மேலும் முன்னெடுத்துச் செல்கிறார். தில்லியின் ரகுபீர் நகரின் ஜேஜே காலனியில் வசிக்கும் 55 வயதான அவர் டக்-டக் எனப் பிரபலமாக அழைக்கப்படும் கையால் தயாரிக்கும் கார்களை உருவாக்குகிறார். “எனது பெற்றோர் கடந்த 43 ஆண்டுகளாக இத்தகைய பொம்மைகளைத் தயாரித்து வந்தனர். ஆரம்பத்தில் இருந்தே நான் அவர்களுக்கு உதவிகள் செய்து வந்தேன். இந்தத் திசையில் தற்போது அரசின் கவனம் திரும்பி உள்ளது என்பது நிச்சயம் எங்களைப் போன்ற கையால் பொம்மை தயாரிப்பவர்களுக்கு உதவியாக இருக்கும்,” என்று அவர் கூறுகிறார். பார்ப்பதற்கு எளிமையானதாக, அதே சமயம் குழந்தைகளைக் கவரக் கூடிய இந்த டக்-டக் பொம்மைகளைச் செய்வது எளிதான செயல் அல்ல. ஒரு பொம்மை முழுமை அடைவதற்கு முன்பு இதற்கான கச்சாப் பொருள் 40 கைகளைத் தாண்டி வருகின்றது. காணொலி வழியாக இப்போது கலைஞர்களின் கைத்திறன் உலகிற்குத் தெரிய வருகிறது.



மனமிருந்தால் மார்க்கம் உண்டு. இந்த முதுமொழியை நிரூபிக்கும் வகையில் இமாச்சலப் பிரதேசத்தின் கங்ரா பகுதியைச் சேர்ந்த விஜய் மெக்ரா மறைந்து வரும் பொம்மைத் தயாரிப்புக் கலையைப் புதுப்பித்து வருகிறார். மூங்கிலில் இருந்து பொம்மைகள் தயாரிப்பதன் மூலம் மெக்ரா சுய-சார்பு நிலையை அடைவதோடு மற்றவர்களும் சுயவேலைவாய்ப்பில் ஈடுபட உதவுகிறார். ”மூங்கில்கள் எளிதாகக் கிடைக்கின்றன. இந்தப் பொம்மைகள் மூலம் லாபமும் கிடைக்கிறது. நான் இதுவரையிலும் 150 நபர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளேன் என்று கூறுகிறார் மெக்ரா.



மாட்டார்கள். தொன்றுதொட்டு ஒவ்வொரு குடும்பத்திலும் பொம்மைகள் ஒரு அங்கமாக இருப்பதற்கு இதுவே காரணம் ஆகும். தங்களது நிதி நிலைமை எப்படி இருந்தாலும் அதிக விலையிலான அல்லது விலை குறைந்த பொம்மைகளைப் பெற்றோர் தங்களது குழந்தைகளுக்கு வாங்கித் தருகின்றனர். இந்தியா முழுவதுமே பொம்மைகள் வாழ்க்கையின் முக்கியமான அங்கமாக இருக்கின்றன; மற்றும் பாரம்பரியத்தின் அங்கமாக இருக்கின்றன. இன்றும்கூட குழந்தைகளுக்கு கொண்டாட்டம் என்றால் பொம்மைகள் இல்லாமல் நிறைவடைவது இல்லை. தென்னிந்தியாவில் தசரா விழாவின் போது பொம்மைகள் மற்றும் பல்வேறு உருவங்கள் காட்சிக்கு வைக்கப்படும் “பொம்மைக் கொலு” கொண்டாடப்படுகிறது. பல்வேறு மையக் கருத்துகளில் பொம்மைகள் காட்சிக்கு வைக்கப்படும். காட்சிக்கு வைக்கப்படும் ஒவ்வொரு பொம்மையும் கிராமியக் கைவினைக் கலைஞரால் களிமண்ணால் அல்லது மரத்தால் செய்யப்பட்டவை ஆகும். பொம்மைகள் பிரகாசமான வண்ணங்களில் தீட்டப்பட்டு இருக்கும்.

இந்திய பொம்மைகள் கட்டமைப்பின் தொழில்நுட்பக் குழுவின் தலைவர் மனு குப்தா ஜிஐ அடையாளத்துடன் பாரம்பரிய பொம்மைகள் தயாரிக்கும் 12 தொகுப்பிட மையங்கள் கொண்ட உலகின் ஒரே நாடாக இந்தியா விளங்குகிறது என்று கூறுகிறார்.

இதனோடு சேர்த்துப் பார்த்தால், 20 பாரம்பரிய பொம்மை உற்பத்தி தொகுப்பிட மையங்கள் உள்ளன. இந்திய பொம்மைகளுக்கு 5000 ஆண்டுக்கால வரலாறு உள்ளது. இதுவே பொம்மை தயாரிப்பவர்கள்

> இந்தியப் பொம்மைகளுக்கு 5,000 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாறு உள்ளது. எனினும் உலகச் சந்தையில் இந்தியப் பொம்மைகளின் பங்கு என்பது மிகக் குறைவான அளவிலேயே உள்ளது.

ஒருங்கிணைந்து செயல்பட முக்கியமான காரணமாக அமைகிறது” எனக் குப்தா கூறுகிறார்.

வேற்றுமையில் ஒற்றுமை என்ற உணர்வுடைய நாடாக இந்தியா இருப்பதால், இங்கு தயாரிக்கப்படும் பொம்மைகளும் பன்முகத்தன்மை கொண்ட கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கின்றன. வடக்கு அல்லது தெற்கு அல்லது வடகிழக்கு பகுதி என எந்தப் பகுதிகளில் பொம்மைகள் தயாரிக்கப்பட்டாலும் உள்ளூர் பாரம்பரியத்தை பிரதிபலிப்பவையாக அந்தந்தப் பிராந்தியப் பொம்மைகள் இருக்கின்றன.

# குழந்தைகளின் உடல் நலத்தில் அக்கறை செலுத்துதல்

• 2009-10ல் அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CSE) முக்கியமான பிராண்டுகள் தயாரித்த பொம்மைகளில் தாலேட்டுகள் (Phthalates) உள்ளனவா என்று ஆய்வு செய்தது. மனிதருக்கு தீங்கு ஏற்படுத்தும் தாலேட்டுகள் இறக்குமதி செய்யப்பட்ட பொம்மைகளில் இருந்தது ஆய்வில் கண்டறியப்பட்டது.

• அந்த அறிக்கையின்படி, பொம்மை தயாரிப்பவர்கள் பிளாஸ்டிக் பொம்மைகள் மிருதுவாகவும் மெல்லும்படியாகவும் இருப்பதற்காக தாலேட்டுகளைப் பயன்படுத்துகின்றனர் என்பது தெரிய வருகிறது. இந்த வேதிப்பொருள் அதிக நச்சுத்தன்மை கொண்டதாகும். அதிலும் குறிப்பாக மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இது தீங்கினை ஏற்படுத்தும்.

• அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் தாலேட்டுகளைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டு உள்ளது. இந்த வேதிப்பொருளுக்கு ஆட்படுவது என்பது இனப்பெருக்கக் கோளாறை ஏற்படுத்துவதோடு குழந்தைகளுக்கு ஆஸ்துமா மற்றும் ஒவ்வாமையையும் உருவாக்கும்.

• 2007ல் அமெரிக்க நிறுவனமான மேட்டில் தயாரித்த எட்டு லட்சம் பொம்மைகளில் குழந்தைகளுக்கு தீங்கினை ஏற்படுத்தும் ஈயம் பூசப்பட்டு இருந்ததால் அவை திரும்பப் பெறப்பட்டன.

• அத்தகைய சம்பவங்கள் பல ஏற்பட்டுள்ளன என்று ஊடகங்கள் தெரிவித்த போதிலும் அப்போதிருந்த அரசுகள் எடுத்த நடவடிக்கைகள் போதுமானவையாக இல்லை.

• அறிக்கையின் முடிவுகள் இத்தகைய பொம்மைகள் குழந்தைகளின் சருமத்தைப் பாதிப்பதோடு சேதம் அடையவும் செய்யும் என்று எடுத்துக்காட்டுகின்றன. மேலும் 33 சதவிகித பொம்மைகள் மட்டுமே அனைத்து பரிசோதனைகளிலும் பாதுகாப்பானவை என்று கண்டறியப்பட்டன.



• 2019ல் இந்திய தரக் கட்டுப்பாட்டுக் குழுமம் (QCI) புதுதில்லியின் சந்தைகளில் கிடைத்த 121 வகையான பொம்மைகளை ஆய்வு செய்தது.

• பல பொம்மைகள் ஃப்தாலேட்டுகள், கன உலோகங்கள் முதலியவற்றின் அனுமதிக்கப்பட்ட அளவுகள் குறித்த பாதுகாப்பு தர அளவுகளைப் பூர்த்தி செய்யவில்லை.



**41.3%**
இயந்திர பண்புக்கான சோதனைகளில் தோல்வியடைந்த மாதிரிகள்

**3.3 %**
மாதிரிகள் தாலேட்டுகளின் அனுமதிக்கப்பட்ட அளவுகள் என்ற அளவீட்டைப் பூர்த்தி செய்யவில்லை.

**12.4 %**
மாதிரிகள் இயந்திரவியல் மற்றும் தாலேட்டுகள் பரிசோதனைகளில் தோல்வி அடைந்தன.

**7.4 %**
மாதிரிகள் தீப்பற்றக் கூடிய பரிசோதனையில் தோல்வி அடைந்தன.

**2.5%**
மாதிரிகள் இயந்திரவியல் மற்றும் தீப்பற்றும் வாய்ப்புள்ள பரிசோதனையில் தேர்ச்சி பெறவில்லை.

இந்தப் பொம்மைகளில் கன உலோகங்கள் இருக்கிறதா என்று பரிசோதித்ததோடு இந்தியத் தரக்கட்டுப்பாட்டு குழுமம் அவற்றின் இயந்திரவியல் மற்றும் பாதுகாப்பு அம்சங்களையும் பரிசோதனை செய்தது.

பரிசோதனை முடிவுகள் இந்தப் பொம்மைகளில் தீங்கினை ஏற்படுத்தும் வேதிப்பொருட்கள் இருப்பதை சுட்டிக்காட்டின.

## புதிய ஆர்வத்திற்கு சிறகுகள் தருதல்

இந்தியப் பொம்மைகள் செறிவான கலாச்சாரப் பிணைப்பைக் கொண்டவை. ஆனால் இதனை வெளிப்படுத்துவதற்கான மேடை ஏதும் இல்லை. இந்திய பொம்மைகளுக்கான ஒரு அரங்கத்தை ஏற்படுத்தித் தருவதற்கு மத்திய அரசு பல நடவடிக்கைகள் எடுத்தது. பாரம்பரியமான பொம்மைகளோடு புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பத்தை இணைப்பதற்காக ஒரு மாதகால டாய்கத்தான் நடத்தப்பட்டது. மேலும் பிப்ரவரியில் இந்தியாவின் முதல் பொம்மைக் கண்காட்சியும் நடத்தப்பட்டது.

இந்தக் கண்காட்சியின் வெற்றியை பொம்மை தயாரிப்பில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு அவர்கள் கான்பூரில் இருப்பவர்களாக இருந்தாலும் அல்லது ராஜஸ்தானில் இருப்பவர்களாக இருந்தாலும் புதிய நம்பிக்கையை அளித்துள்ளதில் இருந்து மதிப்பிடலாம். ராஜஸ்தானில் இருந்து வந்துள்ள ராஜேந்திர கும்ஹார் நாடு முழுவதும் உள்ளூர் தயாரிப்பாளர்களுக்கு இத்தகைய முன்னெடுப்பு ஊக்கம் அளிக்கும் என்றார். "சுய-சார்பு இந்தியா மற்றும் உள்ளூர் தயாரிப்புக்கு ஆதரவுக்குரல்" ஆகியவற்றின் கீழ், பாரம்பரிய பொம்மை தயாரிப்பவர்கள் பலன் அடைவார்கள். இது இந்தியாவுக்கு

# சர்வதேச பொம்மைச் சந்தையில் இந்தியாவின் பங்களிப்பு

**85%**

சர்வதேச அளவில் பொம்மை ஏற்றுமதியில் சீனாவின் பங்கு. ஐரோப்பிய யூனியன் பட்டியலில் இரண்டாம் இடத்தில் உள்ளது.

**₹7 Lakh Crore**

லட்சம் கோடி சர்வதேச பொம்மைச் சந்தையின் மதிப்பு. இந்த மதிப்பு 2025ல் ரூ.9.5 லட்சம் கோடியாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**0.5%**

சர்வதேச பொம்மைச் சந்தையில் இந்தியாவின் பங்கு - ரூ.45 கோடி மட்டுமே.

- இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் ரூ. 3500 முதல் ரூ. 4500 கோடி வரை பொம்மைகள் விற்பனை ஆகின்றன. இதில் உள்நாட்டில் தயாரிக்கப்படும் பொம்மைகளின் பங்கு 15 சதவிகிதம் மட்டுமே மற்றவை இறக்குமதி செய்யப்படும் பொம்மைகள்.

- சர்வதேச அளவில் லெகோ மற்றும் மேட்டில் ஆகியன மிகப்பெரும் பொம்மை பிராண்டுகள் ஆகும். அதிகம் விற்கும் பல்வேறு பொம்மை பிராண்டுகள் சீனாவில் தங்களது உற்பத்தி ஆலையை வைத்துள்ளன.

- சர்வதேச சந்தை ஐந்து சதவிகிதம் வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேசமயம் இந்தியச் சந்தை 10-15 சதவிகிதம் வளர்ச்சி பெறும். எதிர்பார்க்கப்படும் இத்தகைய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பொம்மை உற்பத்தித் தொழிலில் இந்தியாவின் பங்களிப்பை அதிகரிக்க இதுவே சரியான தருணம் ஆகும்.



**சர்வதேச பொம்மைச் சந்தையில் இந்தியாவின் பங்கை 2024ல் ரூ.2,800 கோடியாக அதிகரிக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயம் செய்துள்ளது.**

முக்கியமானது ஆகும்.

ஏனெனில் நமது பாரம்பரிய பொம்மைகள் நமது பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் பாதுகாக்க உதவும். நாம் நமது நாட்டை அயல்நாட்டு பொம்மைகளிடம் இருந்து பாதுகாக்க வேண்டும் என்று கூறுகிறார் கும்ஹார். மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் இருந்து வந்திருந்த பொம்மை தயாரிப்பாளர் ஜித்தேந்தருக்கும் இதே விதமான நம்பிக்கையை கண்காட்சி தந்துள்ளது. ஜித்தேந்தர் மறுசுழற்சி செய்யப்பட்ட தோலைப் பன்படுத்தி பொம்மைகள் செய்கின்றார். இந்தக் கண்காட்சி தன்னைப் போன்ற கலைஞர்களுக்குத் திறமைகளை வெளிப்படுத்தும் நல்லதொரு மேடையாக இருந்தது என்கிறார். உள்ளூர் கலைப் பொருடகளை பெரும்போக்கில் இணைப்பதற்கான திறன்மிக்க வழியாகவும் இந்தக் கண்காட்சி இருந்தது என்கிறார் ஜித்தேந்தர்.

ஆரோக்கியமான குழந்தைப் பருவத்திற்கு உள்ளூர் பொம்மைகள்தான் குழந்தைகளின் முதல் நண்பர்கள். பொம்மைகள் குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு சாதனமாக மட்டும் அல்லாமல் அவர்களுக்கு நிறைய







## உத்திரப் பிரதேசம்

வாரணாசி பாரம்பரியப் பொம்மைகளுக்குப் பெயர் பெற்ற நகரம் ஆகும். சர்வதேச வழிமுறைகளுக்கு ஏற்ப பொம்மைகளைத் தயாரிக்க சஹரன்பூர் மற்றும் கிரேட்டர் நொய்டா தயாராக இருக்கின்றன.

**வாரணாசி** | **கிரேட்டர் நொய்டா** | **சஹரன்பூர்**



## மத்தியப் பிரதேசம்

இந்தூரில் 1,000 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டு இருக்கிறது; போபாலுக்கு அருகில் இருப்பதால் புட்னி பலன் அடையும்.

**இந்தூர்** | **போபால்** | **புட்னி**





## ஆந்திரப் பிரதேசம்

ஊரக இந்தியாவைப் பிரதிபலிக்கும் மரப் பொம்மைகள் தயாரிப்பதில் எடிகொப்பக்கா மற்றும் கொண்டப்பள்ளி பகுதிகள் பிரபலமானவை ஆகும்.

**எடிகொப்பக்கா** | **கொண்டபள்ளி** | **கடப்பா**





## குஜராத்

வியாபாரத்திற்குப் புகழ்பெற்ற நகரம். வளமையான குஜராத் பொம்மை தயாரிப்பு மையமாக மாறுவதற்கு தயாராக உள்ளது.

**பட்டன்** | **சகர்பூர்**






## பீகார்

சிக்கி என்ற புல்லில் இருந்து செய்யப்படும் பொம்மைகளுக்கு தனிச்சிறப்பான அடையாளம் உள்ளது.

**தர்பங்கா** | **சிக்கி**



## தெலுங்கானா

400 ஆண்டு பழமையான செறிவான பாரம்பரியத்துடன் விலங்கு மற்றும் பறவைகளின் பொம்மைகள் நிர்மல் நகரில் மிருதுவான மரத்தால் தயாரிக்கப்படுகின்றன.

**நிர்மல்**





## லடாக்

யூனியன் பிரதேசத்தில் பொம்மை தயாரிப்புத் தொழில் தொகுப்பிட வசதியுடன் அரசு உள்ளூர் பொம்மைகளுக்கு சர்வதேச அடையாளத்தை உருவாக்கித் தருவதற்கு தயாராக உள்ளது.

**லடாக்**



## புதுச்சேரி

புதுச்சேரியின் இயற்கைக்கு உகந்த பொம்மைகள் சர்வதேச புகழைப் பெறுவதற்கு தயாராக உள்ளன. பாரம்பரியமாக இங்குள்ள பொம்மைத் தொழிலில் களிமண் முதன்மையான கச்சாப் பொருளாகப் பயன்படுத்தப் படுகிறது.

**புதுச்சேரி**



## இமாச்சலப் பிரதேசம்

மிகப் பிரபலமான சுற்றுலா மையமான இமாச்சலப் பிரதேசத்தின் பொம்மைகள் சர்வதேச புகழைப் பெற்றுள்ளன.

**ஷிம்லா**



## திரிபுரா

மூங்கிலால் செய்யப்படும் பொம்மைகளே திரிபுராவின் தனிச்சிறப்புடையவை ஆகும்.

**அகர்தலா**





## ராஜஸ்தான்



ராஜஸ்தானில் தயாரிக்கப்படும் அரக்கு பொம்மைகள் மற்றும் கைப்பாவைகள் உலக அளவில் புகழ் பெற்றவை ஆகும். அவற்றின் உற்பத்தியை அதிகரிக்க கவனம் செலுத்தப்படுகிறது.

### சிட்டோர்கர் | உதய்பூர் | கத்புட்லி நகர்



## நாகலாந்து

செறிவான கலாச்சாரம் கொண்ட நாகலாந்து இப்போது பொம்மை உற்பத்தி மூலம் புதிய அத்தியாயத்தை தொடங்குகிறது.

### நாகலாந்து



## ஜார்கண்ட்

ஜார்கண்ட்டின் மர மற்றும் களிமண் பொம்மைகள் சர்வதேச கவனத்தைப் பெற தயாராக உள்ளன.

### தன்பாத்



## கர்நாடகம்



சன்னப்பட்டனம்தான் இந்தியாவின் முதல் பொம்மை உற்பத்தி தொகுப்பிட மையம் ஆகும். இங்கு தயாராகும் பொம்மைகள் எங்கும் புகழ்பெற்றவை ஆகும்.

### சன்னப்பட்டம் | கின்ஹால்



## கேரளா

கேரளாவின் வர்த்தகத் தலைநகர் எனப் புகழ் பெற்றுள்ள எர்ணாகுளம் தற்போது பொம்மை உற்பத்தி மையமாக அறியப்பட உள்ளது

### எர்ணாகுளம்



## ஒடிசா

பித்தளை மற்றும் உலோக கைவினைப் பொருட்களுக்கு மயூர்பஞ்ச் புகழ் பெற்ற நகரம் ஆகும். இப்போது இது பொம்மை உற்பத்தி மையமாக மேம்படுத்தப்படுகிறது.

### மயூர்பஞ்ச்



## சிக்கிம்



சிக்கிமின் 60 ஆண்டு பழமையான பாரம்பரிய மிருதுவான பொம்மைகள் உலக அளவில் கவனத்தைப் பெற தயாராக உள்ளன.

## மகராஷ்டிரா

### சவந்த்வாடி



இந்தப் பிராந்தியத்தில் தயாரிக்கப்படும் மரப் பொம்மைகள் பிரபலமானவை. பொம்மை உற்பத்தி தொகுப்பிட மையத்தின் மூலம் புதிய வேலை வாய்ப்புகள் இங்கு உருவாக்கப்படும்.

## அசாம்



கரடி பொம்மை தயாரிப்பு மையமாக அசாம் திகழ்கிறது. பொம்மை உற்பத்தி தொகுப்பிட மையத்தின் மூலம் இந்தத் தொழில் புது அடையாளம் பெற உள்ளது.

## தமிழ்நாடு

### தஞ்சாவூர்



தஞ்சாவூர் பொம்மைகள், அதாவது தலையாட்டி பொம்மைகள் குழந்தைகளிடமும் பெரியவர்களிடமும் பிரபலமாக இருக்கின்றன.



# அரசின் முன்னெடுப்புகள்

- தொழில் மேம்பாடு மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறை மற்றும் வர்த்தக அமைச்சகம் ஆகியவற்றின் தரவுகளின்படி, இந்தியாவில் 400 எம்எஸ்எம்இ-க்கள் பொம்மை தயாரிப்பில் ஈடுபட்டு உள்ளன. இவற்றில் 75 சதவிகிதம் குறுந்தொழில்கள் ஆகும். 22 சதவிகிதம் சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வகையையும 3 சதவிகிதம் பெருந்தொழில் வகையையும் சார்ந்தவை ஆகும்.
- அரசு இரு பக்க முன்னெடுப்புகளையும் எடுத்து வருகிறது. முதலாவது உள்ளூர் பொம்மைத் தொழிலை மேம்படுத்துவது, இரண்டாவது அவர்களுக்கு நியாயமான சந்தையை ஏற்படுத்தித் தருவது ஆகும். அப்போதுதான் அவர்கள் இந்தியச் சந்தையில் விற்கப்படும் வெளிநாட்டு பொம்மைகளுடன் போட்டியிட முடியும். முதன் முறையாக இந்தியாவில் ஜனவரி - பிப்ரவரியில் டாய்க்கத்தான் ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்குப் பிறகு நாட்டின் முதலாவது பொம்மை கண்காட்சி பிப்ரவரி 27 முதல் மார்ச் 24 வரை நடத்தப்பட்டது.
- இந்தியத் தர மதிப்பீட்டு அலுவலகத்தின் (BIS) சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்டு உள்ளது. பொம்மைகள் குழந்தைகளின் ஆரோக்கியத்துக்குப் பாதிப்பு ஏற்படுத்தாது என்று சான்றிதழ் பெற வேண்டும். ஆனால் கையால் செய்யப்பட்ட பொம்மைகள் மற்றும் ஜிஐ அடையாளம் பெற்ற பொம்மைகளுக்கு இந்தச் சான்றிதழ் பெறுவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது.
- வெளிநாட்டு பொம்மைகள் மீதான இறக்குமதி சுங்க வரி அதிகரிக்கப்பட்டு உள்ளது. உள்ளூர் அளவில் தயாரிக்கப்படும் பொம்மைகளின் விற்பனைக்கு பாதுகாப்பு அளிப்பதாக இது இருக்கும்.



கற்றுத் தரவும் செய்கின்றன. இவை அனைவருக்கும் தெரிந்த உண்மைதான். ஆனால், சந்தையில் வெளிநாட்டு பொம்மைகளிடம் தங்களது மதிப்பை இந்தியப் பொம்மைகள் இழந்து இருக்கின்றன.

இந்த இறக்குமதி செய்யப்பட்ட பொம்மைகள் இந்திய பொம்மைத் தொழிலுக்கு பாதகம் ஏற்படுத்துவதோடு குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கும் தீங்கு விளைவிக்கின்றன. இந்தியத் தரக்கட்டுப்பாட்டு குழுமத்தின் ஆய்வில் இறக்குமதி செய்யப்பட்ட பொம்மைகளில் சுமார் 67 சதவிகிப் பொம்மைகள் தர அளவீடுகளைப் பூர்த்தி செய்து இருக்கவில்லை. இந்தியச் சந்தைகளில் உள்ள பொம்மைகளில் 85 சதவிகிதப் பொம்மைகள் இறக்குமதி செய்யப்பட்டவை ஆகும். அதிலும் குறிப்பாக பெரும்பங்கு அளவிலான பொம்மைகள் நமது அண்டை நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. அந்த ஆய்வறிக்கையின்படி, 45 சதவிகித மிருதுவான பொம்மைகளில் புற்றுநோயை உண்டாக்கக் கூடிய தாலேட்டுகள் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிக அளவில் உள்ளன. நச்சுத்தன்மை உள்ள ஆர்செனிக் மற்றும் ஈயம் போன்ற கன உலோகங்கள் இறக்குமதி செய்யப்படும் பொம்மைகளில் உள்ளன என்று அறிக்கையானது மேலும் கூறுகிறது. இது போன்ற சூழ்நிலையில், பாரம்பரியமான பொம்மைகள் மிக முக்கியமான பங்கினை வகிக்கின்றன. கலாச்சாரத்தையும் சமூகத்தையும் பாதுகாப்பது என்று மட்டும் அல்லாமல் சுற்றுச்சூழல் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கும் சிறந்தவையாக அவை உள்ளன.

## சர்வதேச சந்தையைக் கைப்பற்ற இந்தியப் பொம்மைகள் தயார்

இன்றைய தேதியில் சர்வதேச பொம்மைச் சந்தையின் மதிப்பு ரூ.7 லட்சம் கோடிக்கும் அதிகம் ஆகும். இதில் இந்தியாவின் பங்கு வெறும் 0.5 சதவிகிதம் மட்டுமே. 2025ல் இந்தச் சந்தை மதிப்பு ரூ.9.50 லட்சம் கோடியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் தேவைப்படும் பொம்மைகளில் 85 சதவிகித தேவை இறக்குமதியை மட்டுமே சார்ந்து உள்ளது. உள்ளூர் பங்களிப்பு வெறும் 15 சதவிகிதம் மட்டுமே ஆகும். உலகில் உள்ள 14

# அரசு ஒன்பது விதமான பொம்மைகள் மீது கவனம் செலுத்துகிறது.




வயதிற்குக் கீழ் உள்ள குழந்தைகளின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு குழந்தைகள் இந்தியாவில் இருக்கும் சூழலில் உள்ளூரில் தயாரிக்கப்படும் பொம்மைகளின் பங்களிப்பு என்பது முக்கியமானதாகிறது. உள்ளூர் தயாரிப்பாளர்களுக்கு மக்கள் தொகை பிரச்சனையாக இல்லை. மாறாக அவர்களுக்கு அது ஒரு வாய்ப்பாகவே இருக்கிறது. இந்திய பொம்மை தயாரிப்பாளர்கள் சர்வதேச சந்தையில் இந்தியாவின் பங்கை ரூ.2,800 கோடிக்கு அதிகரிக்கக் கூடிய ஆற்றல் உள்ளவர்கள். சுய-சார்பு இந்தியாவுடன் "உள்ளூர் தயாரிப்புக்கு ஆதரவுக் குரல்" என்ற தாரக மந்திரமும் சேரும் போது அது இந்திய பொம்மைகளை சர்வதேச சந்தையில் குறிப்பிடத்தக்க அளவில் பங்காற்றச் செய்யும்.

## இந்தியாவின் முதல் பொம்மை கண்காட்சி மற்றும் டாய்கத்தான்

இந்தியாவில் பொம்மைத் தொழிலை புதுப்பிப்பது என்பது பல காரணங்களால் முக்கியமானதாகிறது. பொம்மைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த பிறகு, முதன் முறையாக அந்தத் தொழிலை மேம்படுத்துவதற்கு அரசு செயல்படத் தொடங்கி உள்ளது. தங்களது திறமை மற்றும் கலையை வெளிக்காட்டுவதற்கு பொம்மைத் தயாரிப்பு கலைஞர்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு ஒரு மேடை உருவாக்கித் தந்தது உள்ளிட்ட பல்வேறு புரட்சிகரமான நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. பொம்மைகளுக்கான சர்வதேச மையமாக இந்தியாவை மேம்படுத்துவதற்கு உதவ வேண்டும் என்ற குறிக்கோளுடன் பொம்மை கண்காட்சி நடத்தப்பட்டது. வாங்குபவர்கள், விற்பவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து பங்குதாரர்களையும் இந்தக் கண்காட்சி ஒன்றாக இணைத்தது. பொம்மைத் தொழிலின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான உரையாடலை ஊக்கப்படுத்தவும் நீடித்து நிலையாக இருக்கக் கூடிய இணைப்பு உறவுகளை உருவாக்கவும் தேவையான ஒரு மேடையாக இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. சர்வதேச சந்தைக்கு தொழில்துறையினரை தயார் செய்யவும் இது உதவியது. பிப்ரவரி 27 முதல் மார்ச் 4

**"ஒரு பொம்மையானது குழந்தையை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறது.... இதுவே இந்திய விளையாட்டுகள் மற்றும் அறிவு, விஞ்ஞானம், பொழுதுபோக்கு மற்றும் உளவியலை உள்ளடக்கியுள்ள பொம்மைகள் ஆகியவற்றின் சிறப்புத் தன்மை ஆகும்.**

**பிரதம மந்திரி நரேந்திர மோடி"**



வரை ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த இந்தியாவின் முதல் பொம்மை கண்காட்சியில் 1,200க்கும் மேற்பட்டோர் தங்களது பொருட்களை காட்சிப்படுத்தி இருந்தனர். முதலில் இந்தக் கண்காட்சி மார்ச் 2 வரை மட்டுமே நடத்துவதற்கு திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் மக்களின் விருப்பத்திற்கு இணங்க மேலும் இரண்டு நாட்கள் கண்காட்சி நீட்டிக்கப்பட்டது. 2021ல் அரசு டாய்கத்தானையும் நடத்தியது.

ஜனவரி 5 முதல் பிப்ரவரி 25 வரை நடைபெற்ற டாய்கத்தானின் நோக்கம் என்பது இந்திய மதிப்பீடுகளின் அடிப்படையில் புத்தாக்கமான பொம்மைகள் தயாரிப்பதற்காக கருத்து வரைவுகளை உருவாக்குவதே ஆகும். அதாவது குழந்தைகளிடம் ஆக்கப்பூர்வமான நடத்தை முறைகளையும் சிறந்த மதிப்பீடுகளையும் உருவாக்க கூடிய மதிப்பீடுகளின் அடிப்படையில் பொம்மைகள் இருக்க வேண்டும். இந்த டாய்கத்தானுக்கு 12 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிபுணர்கள் பதிவு செய்திருந்தனர். 7,000க்கும் அதிகமான புதிய யோசனைகள் பரிசீலிக்கப்பட்டன.

சுய-சார்பு நாடாக மாறுவதற்கான முன்னெடுப்பு நடவடிக்கையாக டாய்கத்தான் - 2021ஐ கல்வி அமைச்சகம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், ஜவுளி அமைச்சகம், வர்த்தகம் மற்றும் தொழில்கள் அமைச்சகம், குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சம் (MSME), தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம், அனைத்திந்திய தொழில் கல்விக் குழுமம் ஆகியன இணைந்து கூட்டாகத் தொடங்கின.

இது ஒரு சிறப்பு வகை ஹேக்கத்தான் (hackathon) ஆகும். பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், வடிவமைப்பு நிபுணர்கள், பொம்மை நிபுணர்கள், ஸ்டார்ட் அப் தொழில் தொடங்கி உள்ளவர்கள் என அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து இந்திய மதிப்பீடு அமைப்பு, கலாச்சாரம், உணர்வு, உள்ளூர் நாட்டார் வழக்காற்றியல் மற்றும் தலைவர்கள் அடிப்படையில் பொம்மைகளையும் விளையாட்டுகளையும் உருவாக்குவதற்கான யோசனைகளை முன்னெடுத்து பரிசீலனை செய்தனர்.

இந்த வகையில் நாட்டின் முதலாவது கண்காட்சி இதுவே ஆகும். அனைத்து வயதுப் பிரிவினருக்கும் கற்றலை மகிழ்ச்சியுடன் கூடிய ஒரு செயலாக மாற்றுவதற்கும் பொம்மைகளை பயன்படுத்துவதை மேம்படுத்துவதற்கும் இந்தக் கண்காட்சியானது உதவியது. இந்தக் கண்காட்சி வேடிக்கை, விஞ்ஞானம், நவீனம், உள்ளூர் கல்விசார்ந்த பொம்மைகள் மற்றும் மின்னணு பொம்மைகள் ஆகியவற்றை வழங்கியது. இந்தப் பொம்மைகள் பலவகைப்பட்டவையாக இருந்ததோடு மட்டும் அல்லாமல் சர்வதேச உற்பத்திப் பொருட்களோடு போட்டியிடும் தகுதி பெற்றவையாகவும் இருக்கின்றன. தயக்கத்தைத் தவிர்த்து கலந்துரையாடலில்




# இப்போது டிஜிட்டல் விளையாட்டுகளில் சுய-சார்பு குறித்து கவனம் செலுத்தப்படுகிறது

“பரிக்ஷா பெ சர்ச்சா” நிகழ்ச்சியின் போது ஒரு தாய் பிரதம மந்திரி நரேந்திர மோடியிடம் தனது மகன் டிஜிட்டல் விளையாட்டிற்கு அடிமையாகி இருப்பது குறித்து கேட்டதை நாம் ஞாபகப்படுத்திப் பார்க்க முடியும். பிரதமர் அந்தத் தாயிடம் பப்ஜி பற்றி கூறுகிறீர்களா எனக் கேட்டார். அவர் ”இது ஒரு பிரச்சனையாகவும் இருக்கிறது; அதே சமயம் தீர்வாகவும் இருக்கிறது. தொழில்நுட்பத்தில் இருந்து குழந்தைகளைத் தள்ளி வைக்க முடியாது. எனவே குழந்தைகள் பிளே-ஸ்டேஷனில் (கருவி) இருந்து பிளே-ஃபீல்டுக்கு (விளையாட்டு மைதானம்) மாறுவது நல்லது” என்று சொன்னார்.

பழக்கத்துக்கு அடிமையாதலைப் புரிந்து கொள்ளவும் அதே சமயம் டிஜிட்டல் விளையாட்டுகளைச் சந்தைப்படுத்தவும் இது ஒரு சிறந்த உதாரணம் ஆகும். அதேசமயம் டிஜிட்டல் மற்றும் மெய்நிகர் விளையாட்டுகள் வெளிநாடுகளில் இருந்துதான் வருகின்றன. எனவே டிஜிட்டல் விளையாட்டுப் பிரிவில் இந்தியா சுய-சார்பு அடைவதற்கும் சர்வதேச சந்தையில் இந்தியாவின் இருப்பை வெளிப்படுத்தவும் அரசு பொம்மை தயாரிப்பு தொழிற்சாலையினருடன் இணைந்து பணியாற்றி வருகிறது. பிரதம மந்திரியின் முயற்சியால் பிப்ரவரி 2020ல் ஒரு குழு அமைக்கப்பட்டு உள்ளது. டாக்டர் பரக் மன்கிகார், டாக்டர் உன்னத் ஷர்மா, பங்கஜ் சப்கால், டாக்டர் ஆர்த்தி பிரகாஷ் மற்றும் அவிதாஸ் ஆகியோர் நிபுணர் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

”குழந்தைகள் இந்திய வரலாறு மற்றும் கலாச்சாரத்தைக் கற்றுக் கொள்வதற்கு இந்தப் புதிய டிஜிட்டல் விளையாட்டுகள் உதவியாக இருக்கும். கேன்டி கிரஷ் சாகா போன்ற விளையாட்டுகளுக்கு எதிராக சர்வதேச சந்தையில் நம்மால் காலூன்றி நிற்க முடியும்” என்று குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான டாக்டர் பரக் கூறுகின்றார்.

அதே போன்று அரசு எடுத்துள்ள முன்னெடுப்பு நடவடிக்கைகளை காலத்துக்கு ஏற்ற செயல் எனக் குறிப்பிடும் டாக்டர் உன்னத் பண்டிட் இந்தப் பிரிவில் மிக வேகமாகச் செயல்பட வேண்டிய தேவை உள்ளது என்று கூறுகிறார். மேலும் அவர் ”புத்தாக்கத்தின் உதவியுடன் பல்வேறு துறைகளில் சுய-சார்பு நிலையை அடைய நாம் பேசி வரும் முறையைப் போலவே அதே அளவு கவனத்தை டிஜிட்டல் விளையாட்டுகளுக்கும் நாம் அளிக்க வேண்டும் என்கிறார். ■

## இது ஏன் தேவைப்படுகிறது?

இந்தியாவில் டிஜிட்டல் விளையாட்டுச் சந்தை குறித்த ஒரு பார்வை

| மொத்த பயனாளர் | மொத்த வருவாய் |
|---|---|
| 26.36 கோடி | 81.78 கோடி |

## மூன்று சாத்தியப்பாடுகள் குறித்த அரசின் கவனம்.....

- புராணக் கதைகள் அடிப்படையிலான விளையாட்டுகள்: உலகம் முழுவதும் விளையாடப்படுகின்ற டிஜிட்டல் விளையாட்டுகளில் பெரும்பான்மையானவை வன்முறை சார்ந்தவையாகவே இருக்கின்றன. இந்த விளையாட்டுகளில் இருந்து புதியதாக ஏதாவது கற்றுக் கொள்வதற்குப் பதிலாக குழந்தைகள் இந்த விளையாட்டுகளுக்கு அடிமை ஆகிவிடுன்றனர். இந்தியாவுக்கு பஞ்சதந்திரம் உள்ளிட்ட புராணக் கதைகளின் நீண்ட நெடிய பாரம்பரியம் இருக்கிறது. இம்மாதிரியான கதைகளின் மையக் கருத்துகளை அடிப்படையாக கொண்டு விளையாட்டுகள் இருந்தால், குழந்தைகள் புதியதாக ஏதாவது கற்றுக் கொள்ள முடியும்.
- அறநெறிக் கல்வி அடிப்படையிலான விளையாட்டுகள்: இந்தியா போன்ற ஒரு நாட்டில் நீண்ட நெடிய கலாச்சார மற்றும் நாகரீக மரபு இருக்கிறது. எனவே குழந்தைகளிடம் அறநெறிகளை ஆழமாகப் பதிய வைக்கக் கூடிய டிஜிட்டல் விளையாட்டுகளை உருவாக்குவது சிறப்பானதாகும். அமெரிக்காவும் ஐரோப்பாவும் இம்மாதிரியான டிஜிட்டல் விளையாட்டுகளை ஏற்கனவே தொடங்கி விட்டன. அங்கு 500க்கும் மேற்பட்ட பள்ளிக்கூடங்களில் நிஜ வாழ்வு விளையாட்டுகளோடு தொடர்புடைய பயிற்சிப் பாடங்கள் குழந்தைகளுக்குத் தரப்படுகின்றன. இது குழந்தைகள் புதிய மற்றும் சிறந்தவற்றைக் கற்றுக் கொள்ள உதவுகின்றது.
- மெய்நிகர் விளையாட்டு: விவேகானந்தர், வீர் சவர்க்கார் மற்றும் சிவாஜி போன்றோர் மெய்நிகர் விளையாட்டுகளின் பாத்திரங்களாக அமைந்து அவர்கள் வாழ்வின் சாகசங்கள் இத்தகைய விளையாட்டுகளில் இலக்குகளாக மாற்றப்பட்டால் குழந்தைகள் அவர்களைப் பற்றித் தெரிந்து கொண்டு மேலும் கற்றுக் கொள்ள முயல்வார்கள்.

## இது எவ்விதம் தொடங்கப்பட வேண்டும்?

- இந்தியாவில் மென்பொருள் மற்றும் விளையாட்டுத் தொழிலில் ஈடுபட்டு உள்ளவர்களின் திறன்களை மேம்படுத்துதல்
- டிஜிட்டல் மற்றும் மெய்நிகர் விளையாட்டுகளில் ஸ்டார்ட் அப்புகளை மேம்படுத்துதலோடு அவர்களது ஆரம்பகட்ட காலத்திற்கும் பிற தேவைகளுக்கும் உதவி செய்ய வேண்டும்.
- டிஜிட்டல் விளையாட்டுகள், காட்சி விளைவுகள், அனிமேஷன் மற்றும் காமிக்ஸ் ஆகியவற்றுக்கான தேசிய திறன் மேன்மை மையத்தை ஐஐடி பம்பாய் உதவியுடன் தொடங்க வேண்டும்.
- டிஜிட்டல் விளையாட்டுத் தொழிலுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்



# ஏழு பத்தாண்டுகளாக புறக்கணிக்கப்பட்ட, இந்திய பொம்மைத் தொழிலை சுய-சார்பு நிலை கொண்டதாக மாற்றுவதற்கு இதுவே சரியான தருணம்

**இந்தியாவின் முதல் பொம்மைக் கண்காட்சியை பிப்ரவரி 27, 2021ல் தொடங்கி வைத்த பிரதம மந்திரி நரேந்திர மோடி இந்தியாவின் கலாச்சாரம் மற்றும் சமூகத்தில் பொம்மைகளின் முக்கியத்துவம் குறித்துப் பேசினார். இந்திய பொம்மைத் தொழிலை சுய-சார்பு கொண்டதாக மாற்ற வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். அவர் பேசிய உரையின் கருத்துக்கள் இங்கே தரப்படுகின்றன:**

- இந்தியாவின் முதல் பொம்மைக் கண்காட்சியான இது வெறும் வர்த்தகம் அல்லது பொருளாதாரம் சார்ந்த நிகழ்வு மட்டும் அல்ல. நாட்டின் பழம்பெருமை வாய்ந்த விளையாட்டுகள் மற்றும் கொண்டாட்டங்களின் கலாச்சாரத்தை வலுப்படுத்தும் ஒரு இணைப்பாக இந்த நிகழ்ச்சி அமைந்துள்ளது.
- பொம்மைகளுடனான இந்திய படைப்பாக்கத்தின் உறவு என்பது இந்த நிலத்தின் வரலாறு எவ்வளவு பழமையானதோ அதே அளவிற்கு பழமையானது ஆகும். சிந்து சமவெளி நாகரிகம், மொஹஞ் சதாரோ மற்றும் ஹரப்பாவில் கிடைத்த பொம்மைகள் குறித்து உலகம் ஆராய்ச்சிகளை மேற்கொண்டது. பண்டையகாலத்தில் பல்வேறு நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வந்த பயணிகள் திரும்பிச் செல்லும் போது தங்களுடன் நமது விளையாட்டுகளையும் கொண்டு சென்றனர். பிரபலமாக உள்ள செஸ் விளையாட்டு முன்பு இந்தியாவில் ‘‘சதுரங்கம்‘‘ என்ற பெயரில் இருந்த விளையாட்டு ஆகும்.
- நாட்டின் பொம்மை உற்பத்தியாளர்களிடம் சூழலியல் மற்றும் உளவியல் என இரண்டிற்கும் ஏற்ற சிறந்த பொம்மைகளைத் தயாரிக்குமாறு நான் வேண்டுகோள் விடுக்கிறேன். பொம்மைகளில் குறைந்த அளவிலான பிளாஸ்டிக்கை பயன்படுத்துவதோடு மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களைப் பயன்படுத்துங்கள்.
- புதிய தேசிய கல்விக் கொள்கையானது விளையாட்டு அடிப்படையிலான மற்றும் செயல்வழி கற்றல் கல்வியை பெருமளவில் உள்ளடக்கி உள்ளது. குழந்தைகளிடம் தர்க்கரீதியான மற்றும் படைப்பாக்க சிந்தனையை மேம்படுத்துவதற்கு சிறப்புக் கவனம் செலுத்தும் ஒரு கல்வி அமைப்பாக இது இருக்கிறது.
- பொம்மைத் தயாரிப்பில் இந்தியா பாரம்பரியம் மற்றும் தொழில்நுட்ப அறிவைக் கொண்டிருக்கிறது. இந்தியாவிடம் கருத்து வரைவுகளும் செயல்படுத்தும் தகுதிகளும் இருக்கின்றன. நாம் உலகத்தின் கவனத்தை மீண்டும் சூழலுக்கு உகந்த பொம்மைகளை நோக்கி திருப்ப முடியும்.
- ஏழு பத்தாண்டுகளாக இந்தியாவின் பொம்மை பாரம்பரியமும் கலைஞர்களும் புறக்கணிக்கப்பட்டு இருந்தன. இந்தப் புறக்கணிப்பின் காரணமாக, இந்திய சந்தைகளையும் நமது வீடுகளையும் வெளிநாட்டு பொம்மைகள் ஆக்கிரமித்தன.
- இந்தியக் குழந்தைகள் நாட்டுக்காகப் போராடிய நமது சொந்த தலைவர்களை விட வெளிநாட்டு கதாபாத்திரங்கள் குறித்து அதிக அளவில் தெரிந்து வைத்திருக்கின்றனர். வெளிநாட்டு பொம்மைகள் இவ்வாறு வெள்ளம் போல் ஆக்கிரமித்தது என்பது நமது உள்ளூர் வர்த்தகத்தை அழித்து விட்டது.
- நமது பொம்மைகள் நமது மதிப்பீடுகளைக் கொண்டிருப்பதோடு குழந்தைகளுக்குக் கற்றுத் தருவதாகவும் இருக்க வேண்டும். அவற்றின் தரமானது சர்வதேச தர மதிப்பீடுகளுக்கு இசைந்ததாகவும் இருக்க வேண்டும். இந்தத் திசையில் நாட்டில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டு உள்ளன. கடந்த ஆண்டில் இருந்து பொம்மைகளுக்கு தரப் பரிசோதனை கட்டாயமாக்கப்பட்டு உள்ளதோடு இறக்குமதி செய்யப்படும் பொம்மைகளின் ஒவ்வொரு தொகுப்பில் இருந்தும் மாதிரி பரிசோதனை செய்யவும் அனுமதிக்கப்பட்டு உள்ளது.
- இந்தியா இப்போது பொம்மைத் தொழிலை 24 முதன்மை பிரிவுகளில் தரநிலைப்படுத்தி உள்ளது. தேசிய பொம்மை செயல் திட்டம் வகுக்கப்பட்டு உள்ளது. பொம்மைத் தொழிலை போட்டி நிறைந்ததாக ஆக்கவும் பொம்மை உற்பத்தியில் இந்தியாவை தன்னிறைவு பெற்ற நாடாக மாற்றவும் உலகச் சந்தைக்கு இந்திய பொம்மைகளை எடுத்துச் செல்லவும் இந்தத் திட்டத்தில் 15 அமைச்சகங்களும் துறைகளும் சேர்க்கப்பட்டு உள்ளன.




பிரதம மந்திரியின் முழு உரையைக் கேட்க கியூஆர் கோடை ஸ்கேன் செய்யவும்.

ஆர்வமுடன் ஈடுபட முறையான தொடக்க அமர்வும் நடத்தப்பட்டது. கற்றலை எவ்வாறு எளிதானதாகவும் வேடிக்கையானதாகவும் மாற்றுவது என்று நிபுணர்களிடம் ஆலோசிக்கப்பட்டது. விளையாட்டின் வழி கற்றலை ஊக்கப்படுத்த அமர்வுகள் நடத்தப்பட்டன. இவற்றில் முதலீட்டாளர்கள், இறக்குமதியாளர்கள், உள்ளூர் தொழில் அதிபர்கள் மற்றும் எம்எஸ்எம்இ-க்கள் கலந்து கொண்டதோடு இதில் 1,000க்கும் அதிகமான இந்திய நிறுவனங்களும் கலந்து கொண்டன. உலகிற்கு இந்தியாவின் பழம்பெரும் கலையான பொம்மை தயாரிப்பை அவர்கள் எடுத்துக்காட்டினர்.

## பொம்மைகள் குறித்த தயக்கத்தைத் தகர்த்தல்

குழந்தைகளின் ஆர்வத்துக்கு பொம்மைகள் சிறகுகளைத் தருகின்றன. பொழுதுபோக்கிற்கும் அறிவுத் திறன் வளர்ச்சிக்கும் உதவுவதோடு பொம்மைகள் உள்நோக்கத்தை உருவாக்கவும் உதவுகின்றன. குருதேவ் ரவீந்திரநாத் தாகூரின் பொம்மைகள் குறித்த சொற்களை பிரதம மந்திரி நரேந்திர மோடி நினைவு கூர்ந்தார். மிகச் சிறந்த பொம்மை முழுமை அடையாமலேயே உள்ளது, குழந்தை வைத்து விளையாடும் போதுதான் அந்தப் பொம்மை முழுமை அடைகிறது என்று குருதேவ் கூறியுள்ளதாகப் பிரதமர் சுட்டிக்காட்டினார். தனது குழந்தைப் பருவத்தின் போது வீட்டில் கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்தி கற்பனை வளத்துடன் தனக்கான சொந்த பொம்மைகளை

## பச்சிஷி



பாரம்பரிய விளையாட்டுகளின் மிகச் செறிவான பரம்பரைத் தொடர்ச்சி இந்தியாவுக்கு உள்ளது. இங்கு விளையாடப்படும் விளையாட்டுகள் பொழுதுபோக்கானவை மட்டும் அல்ல. அவை அறிவுத்திறன் வளர்ச்சி மற்றும் ஆரோக்கியத்துக்கான விளையாட்டுகளாகவும் உள்ளன. அறிவுத் திறன் மேம்பாட்டுக்கான அத்தகைய விளையாட்டுகளில் ஒன்றுதான் "பச்சிஷி". இது தமிழ்நாட்டில் "பல்லாங்குழி"யாக, கர்நாடகாவில் "அலி குலி மனெ"யாக, ஆந்திரப் பிரதேசத்தில் "வாமன் குண்டுலு"வாக விளையாடப்படுகிறது. பல குழிகள் நிறைந்த பலகையில் உத்தி சார்ந்து விளையாடப்படும் ஒரு வகையான விளையாட்டாக இது இருக்கிறது. விளையாடுபவர்கள் சிறு குண்டுகள் அல்லது கொட்டைகளை அதிக அளவு கைப்பற்ற வேண்டும். இந்த விளையாட்டு தென்னிந்தியாவில் இருந்து உலக அளவில் பரவி இருக்கிறது எனச் சொல்லப்படுகிறது.

## ஆந்திரப் பிரதேசத்தின் எடிகொப்பக்கா பொம்மைகள்



ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் உள்ள எடிகொப்பக்காவில் தயாரிக்கப்படும் வர்ணப்பூச்சு கொண்ட மரப் பொம்மைகள் பிரபலமானவை ஆகும். இவற்றுக்கு 400 ஆண்டுக்கால வரலாறு உள்ளது. இத்தகைய பொம்மைகளைத் தயாரிக்கும் கலைக்கு "லக்கப்பிடதலு" என்று வேறு ஒரு பெயரும் உள்ளது. இத்தகைய பொம்மைகள் கலைநயத்துடன் வேதிப்பொருட்கள் எதுவும் சேர்க்கப்படாமல் தயாரிக்கப்படுவதோடு இவை நீண்ட காலத்திற்கு நீடித்தும் இருக்கும். இந்தியச் சந்தைகளில் மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் இந்தப் பொம்மைகள் பிரபல்யம் ஆனவை. எடிகொப்பக்கா பொம்மைகளுக்கு புவிசார் குறியீட்டு பதிவு அமைப்பிடம் (GIR) இருந்து 2017ல் புவிசார் குறியீடு கிடைத்து உள்ளது.

தயாரித்துக் கொண்டதாக குருதேவ் மேலும் கூறி உள்ளார். இந்த நிலையில் ஒரு நாள் குருதேவின் நண்பர்களில் ஒருவன் அழகான வெளிநாட்டு பொம்மையை எடுத்து வந்திருந்தான். இப்போது அனைவரின் கவனமும் ஆர்ப்பாட்டமாக பொம்மை மீதே இருந்தது. அவர்களின் கவனம் விளையாட்டின் மீது இல்லை. குருதேவின் இந்த யோசனைதான் இந்திய பொம்மைகளுக்கு ஆதரவு தர வேண்டும் என்பதற்கு அடிப்படையாக அமைந்தது.

பொம்மைகளின் இருப்பு குழந்தைப் பருவத்தை வளப்படுத்துவதாகவும் புன்னகை பூக்க வைப்பதாகவும் இருக்க வேண்டும் என்று பிரதம மந்திரி வலியுறுத்தி உள்ளார். பொம்மைகள் சுற்றுச்சூழலுக்கு உகந்தவையாகவும் இருக்க வேண்டும். பல தேசிய கல்விக் கொள்கையில் குழந்தைகளின் வாழ்க்கையில் பல்வேறு அம்சங்களில் பொம்மைகளின் தாக்கத்திற்கு குறிப்பிடத்தக்க அளவு கவனம் தரப்பட்டு உள்ளது. விளையாட்டின் போதே கற்றுக் கொள்ளுதல், பொம்மைகள் செய்தவற்கு கற்றுக் கொள்ளுதல், பொம்மைத் தொழிற்சாலைகளுக்கு சென்று பார்த்து வருதல் ஆகியன பாடத்திட்டத்தின் அங்கமாக ஆக்கப்பட்டு உள்ளன. இதன் நோக்கம் எதுவெனில் இந்தியாவின் செறிவான பொம்மை பாரம்பரியத்தை குழந்தைகள் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே ஆகும்.

### மரபு மற்றும் நவீனத்துவத்தின் ஒருங்கிணைவு

மரபு மற்றும் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்து இந்தியா தனது இளம் தலைமுறைக்கு நாட்டார் வழக்காற்றியலை உயிரோட்டமாகத் தருகிறது. இது கற்றலை வேடிக்கை நிறைந்ததாக மாற்றுவதோடு குழந்தைகள் இந்தியாவின் செறிவான கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தைப் புரிந்து கொள்ளவும் உதவுகிறது. இந்தியச் சந்தைகள் முழுவதும் இறக்குமதி செய்யப்பட்ட பொம்மைகளே நிறைந்து உள்ளன. இந்த இறக்குமதி செய்யப்பட்ட பொம்மைகள் ஆர்வமூட்டுபவைகளாக இருந்தாலும் கூட அவை குழந்தைகளுக்கு எதையும் கற்றுத் தருவது இல்லை. பிரதம மந்திரி இந்தியாவில் மரபான விளையாட்டுகளின் செறிவான பாரம்பரியம் உள்ளதாகக் குறிப்பிட்டார். "உதாரணமாக, "பச்சிஷி" என்று அழைக்கப்படும் ஒரு விளையாட்டு குறித்து நீங்கள் அறிந்து இருப்பீர்கள். தமிழ்நாட்டில் இது "பல்லாங்குழி" என்ற பெயரிலும் கர்நாடகாவில் "அலி குலி மனெ" என்ற பெயரிலும், ஆந்திரப் பிரதேசத்தில் "வாமன் குண்டுலு" என்ற பெயரிலும் இந்த விளையாட்டு விளையாடப்படுகிறது. பல குழிகள் நிறைந்த பலகையில் உத்தி சார்ந்து விளையாடப்படும் ஒரு வகையான விளையாட்டாக இது இருக்கிறது. விளையாடுபவர்கள் சிறு குண்டுகள் அல்லது கொட்டைகளை அதிக அளவு கைப்பற்ற வேண்டும். இந்த விளையாட்டு தென்னிந்தியாவில் இருந்து தென்கிழக்கு ஆசியாவிற்குப் பரவி இருக்கிறது எனச் சொல்லப்படுகிறது. இன்று எல்லாக் குழந்தைகளுக்கும் பாம்பு - ஏணி விளையாட்டு தெரியும். இந்த விளையாட்டுகூட "மோக்ஷ பாதம்" அல்லது "பரமபதம்" என்ற பெயரிலான மற்றொரு இந்திய பாரம்பரிய விளையாட்டுதான் என்று உங்களுக்குத் தெரியுமா.... தாத்தா, பாட்டி மற்றும் மூத்தோர்களுக்கு என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால்,

## மேற்கு வங்கத்தின் கிருஷ்ணா நகரில் இருந்து களிமண் பொம்மைகள்



மேற்கு வங்கத்தின் நாடியா மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணா நகர் கையால் தயாரிக்கப்படும் களிமண் பொம்மைகளுக்குப் பெயர் பெற்ற இடமாகும். அழகான நிஜ உருவ அளவிலான களிமண் பொம்மைகளும் இதர பொம்மைகளும் அவற்றின் கருத்தைக் கவரும் வடிவமைப்புகளுக்கும் தோற்றங்களுக்கும் புகழ் பெற்றவை ஆகும். இந்தப் பொம்மைகள் தனிச் சிறப்பு மிக்கவை. அவை உள்ளூர் நதியோரக் களிமண்ணால் செய்யப்பட்டவை. உலகம் முழுவதும் உள்ள பொம்மை அருங்காட்சியகங்களில் இந்தப் பொம்மைகளை ஒருவர் பார்க்க முடியும்.

## வாரணாசியின் மரப் பொம்மைகள்



உத்திரப் பிரதேசத்தின் வாரணாசி அதனுடைய மரப் பொம்மைகளுக்காகப் புகழ் பெற்றதாகும். இவற்றின் வடிவமைப்பு என்பது மரக்கட்டைகளின் இயற்கையான உள்வரிக்கோடுகளால் உருவாக்கப்பட்டது ஆகும். எந்த விதமான இணைப்பும் இல்லாமல் இத்தகைய பொம்மைகள் தயாரிக்கப்படுகின்றன. இவை குழந்தைகளின் கவனத்தைக் கவர்வதாகவும் பாதுகாப்பானதாகவும் உள்ளன. ஜிஐ அடையாளக் குறியைப் பெற்ற பிறகு பொம்மைத் தொழிலானது பல மடங்கு அதிகரித்து உள்ளது. வாரணாசி ஒரு காலத்தில் இந்தியாவின் மிகப் பெரிய பொம்மை தயாரிப்பு மையமாக இருந்தது.

நீங்கள் இந்த விளையாட்டுகளை இளம் தலைமுறையினருக்கு கற்றுத் தராமல் போனால் பிறகு யார் இதை விளையாடுவார்கள்? இப்போது ஆன்லைனில் படிக்க வேண்டி இருக்கிறது. சமநிலையைப் பேணுவதற்கும் ஆன்லைன் விளையாட்டை விளையாடாமல் இருப்பதற்கும் நாம் பாரம்பரிய விளையாட்டுகளை முன்னெடுக்க வேண்டும். நமது குழந்தைகளின் நன்மைக்காக நாம் இதைச் செய்தாக வேண்டும். நமது ஸ்டார்ட் அப் தொழில்களுக்கும் நமது இளம் தலைமுறையினருக்கும் ஒரு புதுமையான மற்றும் வலிமையான வாய்ப்பு கிடைத்து உள்ளது", என்று பிரதம மந்திரி ஜுன் 2020ல் மனதின் குரல் நிகழ்ச்சியில் பேசி இருந்தார். அரசின் முயற்சிகளால் பழமையான பாரம்பரியங்கள் புதிய தொழில்நுட்பங்களுடன் இணைக்கப்பட்டு வருவதோடு அவை குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கும் புதிய வடிவத்தையும் பெற்று வருகின்றன. குஜராத் மற்றும் ராஜஸ்தானின் பொம்மலாட்ட நிகழ்ச்சிகள் மதம் சார்ந்த கதைகளைச் சொல்கின்றன. அவை இப்போது அனிமேஷன் மூலம் குழந்தைகளுக்கு இந்தியக் கலாச்சாரத்தைச் சொல்கின்றன.

### பாதுகாப்பு மற்றும் சுய-சார்புக்கான முன்னெடுப்பு நடவடிக்கை

இந்திய மதிப்பீட்டு அமைப்புடன் இந்தியா பொம்மைகளை தயாரிக்க வேண்டும். இந்தப் பொம்மைகள் வேலை வாய்ப்புகளை உருவாக்கும். அதே நேரம் அவை கலாச்சாரத்தைப் பாதுகாக்கவும் செய்யும். ஒரு குழந்தையின் திறன் மேம்பாட்டுக்கு பொம்மைகள் முக்கியமான பங்கினை ஆற்றுகின்றன. சிறப்பான மற்றும் பொருத்தமான ஒரு பொம்மை குழந்தைக்கு நிறைய திறன்களைத் தர முடியும்.

கொரோனா வைரஸ் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டிலேயே குழந்தைகள் அடைபட்டு இருந்த நேரத்தில் பொம்மைகளின் பங்கானது மிக முக்கியமானதாக மாறியது. அந்த நேரத்தில் பிரதம மந்தரி நரேந்திர மோடி காந்தி நகர் குழந்தைகள் பல்கலைக்கழகம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், கல்வி அமைச்சகம், எம்எஸ்எம்இ அமைச்சகம் ஆகியவற்றுடன் இணைந்து குழந்தைகளுக்குத் தேவையான புதிய பொம்மைகளை எவ்வாறு தயாரிப்பது என்றும் பொம்மை உற்பத்தியில் இந்தியா எப்படி பெரும் மையமாக உருவாக முடியும் என்றும் விவாதங்களை மேற்கொண்டார். இந்தியாவின் பன்முகத் தன்மையை மேம்படுத்தும் வகையில் நாட்டின் பல பகுதிகளில் பொம்மை தயாரிப்பு தொகுப்பிட மையங்கள் வளர்த்தெடுக்கப்பட்டு உள்ளன. இந்தியாவில் குழந்தைகளின் எண்ணிக்கை மிக அதிக அளவில் உள்ளது. அதே போன்று செறிவான பொம்மை கலாச்சாரமும் பலவகையான பொம்மைகளும் உள்ளன. இவ்வாறு அனைத்துக் காரணிகளும் இந்தியாவுக்குச் சாதகமாக இருக்கும் நிலையில், சர்வதேச பொம்மை சந்தையில் இந்தியாவின் பங்களிப்பு மிகவும் குறைவாக இருப்பதற்கு

## சன்னப்பட்னா: கர்நாடகாவின் 300 ஆண்டுகள் பழமையான பொம்மை பாரம்பரியம்



கர்நாடகாவின் சன்னப்பட்னாவில் தயாரிக்கப்படும் பொம்மைகள் அதே பெயரில் புகழ் பெற்று உள்ளன. இவற்றுக்கு 300 ஆண்டுக்கால வரலாறு உள்ளது. இந்தப் பிராந்தியத்தின் பொம்மைத் தொழிலின் வேர்கள் திப்புசுல்தான் காலகட்டத்தைச் சேர்ந்தவை ஆகும். இந்தப் பொம்மைகள் உலகம் முழுவதிலும் புகழ் பெற்றிருப்பதோடு குழந்தைகள் விரும்புபவையாகவும் உள்ளன.

## தஞ்சாவூர்: தலையாட்டி பொம்மைகள்



இந்தப் பொம்மைகள் டெரக்கோட்டாவால் செய்யப்பட்ட பாரம்பரியமான இந்திய தலையாட்டும் பொம்மை அல்லது உருண்டை வடிவிலான பொம்மை வகையைச் சேர்ந்தவை ஆகும். இந்தப் பொம்மைகள் குறித்து தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளது. தமிழ்நாட்டின் தஞ்சாவூர்தான் இந்த வகைப் பொம்மைகள் தோன்றிய இடம் ஆகும். குழந்தைகளிடம் மட்டும் அல்ல, பெரியவர்களிடமும் இவை பிரபலமாக இருக்கின்றன. இந்தப் பொம்மைகள் ஜிஐ அடையாளக் குறி பெற்று உள்ளன.

எந்தச் சமாதானமும் கூற முடியாது. “உள்ளூர் தயாரிப்புகளுக்கு ஆதரவுக் குரல்” என்ற தனது கருத்தாக்கத்துடன் பிரதம மந்திரி சுய-சார்புள்ள பொம்மைத் தொழிலை உருவாக்க வலியுறுத்தி வருகின்றார். நிலைமை ஓரளவிற்கு மேம்பட எடுக்கப்பட்ட தொடக்க நடவடிக்கைகளில் ஒன்றாக கொள்கை சீர்திருத்தங்கள் உள்ளன. நூறு ஆண்டுகளுக்கு முன்பு, மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கிய போது, நாட்டு மக்கள் தங்களது சுயமரியாதை மற்றும் ஆற்றலை உணர்ந்து கொள்ளச் செய்யும் ஒரு முயற்சி இது என்று குறிப்பிட்டார். இப்போது தனது வலிமையை உணர்ந்து பொம்மைத் தொழில் சுய-சார்பு நிலையை அடைய வேண்டிய காலம் ஆகும்.

கொரோனா வைரஸ் பெருந்தொற்றுக் காலத்தில் அத்தியாவசியம் இல்லாத பொருட்களை இறக்குமதி செய்வதற்குத் தடை இருந்த போது ராஞ்சியில் இருந்த மனோஜ் குமார் இதை ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டு இந்தியப் பொம்மைகள் விற்பனையை அதிகரித்தார். அவர் மிருதுவான பொம்மைகளைத் தயாரிக்கத் தொடங்கி பலருக்கும் வேலை வாய்ப்புகளை அளித்தார். இறக்குமதி தடை செய்யப்பட்டு இருந்த நிலையில், பொம்மைத் தொழிலில் கவனம் செலுத்த அதுவே சரியான தருணமாக இருந்தது. “நான் மிருதுவான பொம்மைகளைத் தயாரிக்கத் தொடங்கி சில கைவினைக் கலைஞர்களை வேலைக்கு அமர்த்தினேன். இன்றைய இளைஞர்கள் வேலைகளை வழங்குவதில் நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளனர். இந்தச் சிந்தனைக்கு “உள்ளூர் தயாரிப்புக்கு ஆதரவுக் குரல்” என்ற கருத்தாக்கம் உந்துதலைத் தந்தது. இந்தத் தொழிலில் இளைஞர்களின் பங்கேற்பு என்பது எண்ணற்ற வாய்ப்புகளை உருவாக்கும் என்று கூறுகிறார் குமார். பொம்மைகள் கண்காட்சி மற்றும் டாய்கத்தான் ஆகியவற்றின்

**விளையாட்டு மற்றும் அனிமேஷனில் உயர்நிலை மையம் ஒன்றை உருவாக்க தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகமானது ஐஐடி பம்பாயுடன் ஒன்றிணைந்து உள்ளது.**

விளைவாக இது உள்ளது. ஸ்மார்ட் போன்கள் மற்றும் கம்ப்யூட்டர் விளையாட்டுகள் பிரபலமாகி வருகின்றன. ஸ்டார்ட் அப் முதல் தொழிற்சாலைகள் வரை, ஆசிரியர்கள் முதல் மாணவர்கள் வரை, வடிவமைப்பாளர்கள் என ஒவ்வொருவரும் பொம்மைத் தொழிலை சுய-சார்பு கொண்டதாக மாற்றுவதற்குப் பங்களிப்பு செய்கிறார்கள். இத்தகைய சிறிய பங்களிப்புகள் இந்தியப் பொம்மைத் தொழில்கள் சுய-சார்பு நிலையை அடைய உதவும். “பொம்மைகளுக்காக அணி சேர்வோம் மற்றும் ஒன்றாக இணைந்து பொம்மைகள் தயாரிப்போம்” போன்றவை உள்ளிட்ட அரசின் முயற்சிகள் பொம்மைத் தொழில் புதிய அடையாளத்தையும் உச்சத்தையும் பெற உதவும். இந்தியா தனது உள்ளூர் தயாரிப்பு பொம்மைகளுடன் சர்வதேச பொம்மைச் சந்தையை கைப்பற்ற தயாராக உள்ளது. புதிய இந்தியாவானது புதிய நம்பிக்கையுடன் முன்னேறிச் செல்கிறது. ■

# வலுவான கூட்டாட்சி கட்டமைப்புடன் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகள்

உலகளாவிய கொரோனா பெருந்தொற்றுக்கு எதிராக இந்தியா வெற்றிகரமாக போராடியது. மேலும், வளர்ச்சிக்கான பாதையில் வேகமாக முன்னேறி செல்கிறது. இதன்மூலம், நாட்டில் வலுவான கூட்டாட்சி கட்டமைப்பு இருப்பது வெளிப்படுகிறது. இந்தியாவின் வளர்ச்சிப் பாதையை புதிய கோணத்துக்கு எடுத்துச் செல்வதற்காக நிதி ஆயோக் அமைப்பின் ஆட்சிமன்றக் குழுவின் 6-வது கூட்டம், பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பிப்ரவரி 20, 2021-ல் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் வேளாண்மை, உற்பத்தி, மனிதவள மேம்பாடு, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து போன்ற விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், அடிமட்ட அளவில் சேவைகளை வழங்குவது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. இந்தியாவின் வளர்ச்சிப் பயணம் குறித்து பிரதமர் எடுத்துரைத்தார். மக்கள் நிதி கணக்குகள், தடுப்பு மருந்து செலுத்துதல், உஜ்வாலா திட்டம், கழிவறைகள் மற்றும் நிரந்தர வீடுகள் ஆகியவற்றின் மூலம், ஏழைகளை மேம்படுத்துவது குறித்தும் அவர் பேசினார். ஜல் ஜீவன் திட்டத்தின் மூலம், அனைத்து வீடுகளுக்கும் குழாய்வழியாக நீர் சென்றடைந்தது. பாரத்நெட் திட்டத்தின் மூலம், இந்தியா முழுமைக்கும் இணையதள சேவை கிடைக்கச் செய்யப்பட்டது. ஊட்டச்சத்து குறைபாடுகள் சரிசெய்யப்பட்டன.

## ஆட்சிமன்றக் குழு என்பது என்ன?

பிராந்தியத்துக்கு இடையேயான, துறைவாரியான மற்றும் கூட்டாட்சி விவகாரங்கள் குறித்து விவாதிப்பதற்கான நிர்வாக தளமாக நிதி ஆயோக் அமைப்பின் ஆட்சிமன்றக் குழு திகழ்கிறது. இதில், பிரதமர், மாநில முதலமைச்சர்கள், யூனியன் பிரதேசங்களின் துணைநிலை ஆளுநர்கள் கலந்துகொள்வார்கள். 6-வது கூட்டத்தில், யூனியன் பிரதேசம் என்ற அடிப்படையில், ஜம்மு-காஷ்மீரும், லடாக்-கும் கலந்துகொண்டன. இதன்மூலம், இந்தக் கூட்டம் சிறப்பு வாய்ந்ததாக அமைந்தது. ■



> மத்திய-மாநில அரசுகள் ஒருங்கிணைந்து பணியாற்றுவது மற்றும் உறுதியான கோணத்தில் பயணிப்பது ஆகியவற்றிலேயே தேச வளர்ச்சியின் அடிப்படை அமைந்துள்ளது. கூட்டுறவு கூட்டாட்சி முறையை மிகவும் பயனுள்ள வகையில் மாற்றியமைக்க வேண்டும். மேலும், மாநில மற்றும் மாவட்ட அளவு வரை போட்டி நிறைந்த கூட்டுறவு கூட்டாட்சி முறையை கொண்டுசெல்ல முயற்சி மேற்கொள்ள வேண்டும். கொரோனா காலத்தில் மத்திய அரசும், மாநில அரசுகளும் ஒருங்கிணைந்து பணியாற்றியதன் மூலம், உலக அளவில் இந்தியாவுக்கு நேர்மறையான பெயர் கிடைத்ததையும், ஒட்டுமொத்த தேசமும் வெற்றிபெற்றதையும் நாம் பார்த்துள்ளோம்.
>
> **-பிரதமர் நரேந்திர மோடி**

## பிரதமரின் உரையின் முக்கிய அம்சங்கள்:

- நாட்டின் இந்த வளர்ச்சிப் பயணத்தில் பங்கேற்க அதிக ஆர்வத்துடன் தனியார் துறை முன்வந்துள்ளது. அரசு என்ற முறையில், இந்த ஆர்வத்துக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். மேலும், சுயசார்பு இந்தியா இயக்கத்தில் தனியார் துறையினருக்கு வாய்ப்புகளை அளிக்க வேண்டும்.
- இந்தியா, தனக்கான தேவையை மட்டுமன்றி, உலகின் தேவையையும் நிறைவேற்றும் வகையில், உற்பத்தி செய்வதற்கான வழியே சுயசார்பு இந்தியா இயக்கம் ஆகும். இந்த உற்பத்தி, உலகுக்கானதாகவும் அமைகிறது.
- கொள்கையை வடிவமைப்பதும், மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதும் மிகவும் முக்கியம். இதற்கு கடலோர மாநிலங்கள் சிறந்த உதாரணமாக திகழ்கின்றன. மீன்வளத் தொழிலையும், கடல்வழி பொருளாதாரத்தையும் ஊக்குவிப்பதற்கு எல்லையில்லாத வாய்ப்புகள் உள்ளன.
- பல்வேறு துறைகளில் உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத்தொகை திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இது உற்பத்தியை அதிகரிப்பதற்கான மிகச்சிறந்த வாய்ப்பாக உள்ளது

# உலகளாவிய தொலைத்தொடர்பு - மின்னணுவியல் மையமாக இந்தியா மாறும்

**தகவல் தொழில்நுட்ப கருவிகள், தொலைத்தொடர்பு மற்றும் மருந்துப் பொருட்கள் துறைகளில் இந்தியாவை உற்பத்தி மையமாக மாற்றுவதற்கு அரசின் சில முடிவுகள் உதவும். அதோடு, குழந்தைகளைப் பாதுகாத்து, அவர்களது உரிமைகளை உறுதிப்படுத்தும்**

**முடிவு:** தகவல் தொழில்நுட்ப கருவிகளுக்கு உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத் தொகை திட்டத்துக்கு ஒப்புதல்

**பலன்கள்:**

- மடிகணினிகள், டேப்லட்கள், அனைத்தையும் உள்ளடக்கிய கணிப்பொறிகள், சர்வர்கள் உள்ளிட்ட தகவல் தொழில்நுட்ப கருவிகள் உற்பத்திப் பணிகளில் உள்நாட்டில் மிகப்பெரும் அளவில் ஈடுபட்டுவரும் 10 நிறுவனங்கள் மற்றும் உலகளாவிய மிகப்பெரும் 5 நிறுவனங்களுக்கு இந்தத் திட்டம் பயன் அளிக்கும்
- சர்வதேச கட்டமைப்பில் இணைக்கப்படுவதன் மூலம், மின்னணுவியல் முறைகளின் வடிவமைப்பு மற்றும் உற்பத்தியில் உலகளாவிய மையமாக இந்தியா நிலைநிறுத்தப்படும்
- இந்தத் திட்டத்தால், 4 ஆண்டுகாலத்தில் சுமார் ரூ.7,350 கோடி செலவுபிடிக்கும். இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை, தகுதிவாய்ந்த நிறுவனங்களுக்கு 4 ஆண்டுகளுக்கு விற்பனை செய்யும் நிறுவனங்களுக்கு 4 சதவீதம் முதல் ஒரு சதவீதம் வரை ஊக்கத் தொகை வழங்கப்படும்.

**முடிவு:** தொலைத்தொடர்பு மற்றும் நெட்வொர்க்கிங் பொருட்களுக்கான உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத் தொகை திட்டத்துக்கு ஒப்புதல்

**பலன்கள்:**

- 5 ஆண்டு காலத்துக்கு ரூ.12,195 கோடி மதிப்பிலான இந்தத் திட்டம் மூலம், தொலைத்தொடர்புத் துறை பொருட்கள் உற்பத்தி ஊக்குவிக்கப்படும். ரூ.2 லட்சம் கோடிக்கும் மேலான அளவுக்கு உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும்.
- சர்வதேச நிறுவனங்களிடமிருந்து மிகப்பெரும் முதலீடுகளைப் பெற்று, தனது திறனை இந்தியா அதிகரித்துக் கொள்ளும்
- இந்தத் திட்டம், தற்போது உள்ள வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள, உள்நாட்டில் மிகவும் சிறப்பாக செயல்படும் நிறுவனங்களை ஊக்குவிக்கும். மேலும், ஏற்றுமதி சந்தையில் மிகப்பெரும் நிறுவனங்களாக மாற்றும்.
- இந்தியாவில் தயாரிக்கப்படும் தொலைத்தொடர்பு மற்றும் நெட்வொர்க்கிங் பொருட்களை ஏற்றுமதி செய்ய இந்தத் திட்டம் ஊக்குவிக்கும்
- ரூ.50,000 கோடி மதிப்பிலான தொலைத் தொடர்பு கருவிகளை இறக்குமதி செய்வதைத் தவிர்க்கவும் இந்தத் திட்டம் உதவும்



- அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.2.44 லட்சம் கோடி அளவுக்கு உற்பத்தியையும், ரூ.2 லட்சம் கோடி அளவுக்கு ஏற்றுமதியையும் அதிகரிப்பதன் மூலம், உற்பத்தி துறையில் இந்தியாவின் போட்டித் திறன் அதிகரிக்கும்.
- இந்தத் திட்டம், ரூ.3,000 கோடிக்கும் அதிகமான முதலீட்டை ஈர்ப்பதுடன், 40,000-க்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும்.

**முடிவு:** மருந்துப் பொருட்களுக்கு உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத் தொகை

**பலன்கள்:**

- நாட்டில் அதிக மதிப்புமிகுந்த பொருட்களை உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கவும், ஏற்றுமதியில் மதிப்புக் கூட்டலை அதிகரிக்கச் செய்யவும் 2020-21 முதல் 2028-29-ம் நிதியாண்டு வரையான காலத்துக்கு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்
- 2022-23 முதல் 2027-28 வரையான 6 ஆண்டுகளில் விற்பனை அளவு ரூ.2,94,000 கோடி அளவுக்கும், ஏற்றுமதி அளவு ரூ.1,96,000 கோடி அளவுக்கும் அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது
- மருந்துப் பொருட்கள் துறையில் ஏற்படும் வளர்ச்சியின் மூலம், 20,000 பேருக்கு நேரடியாகவும், 80,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது

**முடிவு:** சிறார் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015-ல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு ஒப்புதல்

**பலன்கள்:**

- இது குழந்தை பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை வலுப்படுத்தும்
- வழக்குகளை விரைந்து முடிப்பதற்கும், நம்பகத்தன்மையை அதிகரிப்பதற்கும் தத்தெடுப்பதற்கான உத்தரவை வழங்கும் அதிகாரத்தை கூடுதல் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்க வகைசெய்கிறது
- குழந்தைகள் நெருக்கடியான சூழலில் இருக்கும்போது, அவர்களுக்கு ஆதரவான முயற்சிகளை மேற்கொள்ளவும், சட்டத்தை இயல்பாக அமல்படுத்துவதை உறுதிப்படுத்தவும், மாவட்ட ஆட்சியர்களுக்கு இந்த சட்டத்தின்கீழ் கூடுதல் அதிகாரம் வழங்கப்படுகிறது



# பொதுமுடக்கத்துக்கு மத்தியில் ஏழைகளை மேம்படுத்துதல்

*தேசிய அளவிலான மூன்று வார கால பொதுமுடக்கத்தை அறிவித்த பிறகு, 48 மணிநேரத்துக்குள், பிரதமரின் ஏழைகள் நல திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்; ஏழைகள் மற்றும் அவர்களது வாழ்வாதாரத்துக்கு அதி முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது*

பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டவுடன், ஏழை மக்களுக்கு வாழ்வாதாரம் என்பது மிகப்பெரும் தடையாக இருந்தது. பீகார் மாநிலத்தின் சாதர் பகுதியைச் சேர்ந்த லலோ மஞ்சி, மனோஜ் மஞ்சி, சுந்தர் மஞ்சி ஆகியோரும் இதற்கு விதிவிலக்கில்லை. பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டவுடன், பிரதமரின் ஏழைகள் நல திட்டம் தொடங்கப்பட்டது. சிக்கந்தர்புர் கிராமத்தில் பொது கழிவறைகள் கட்டும் பணி தொடங்கியது. இதில், லலோ கூலித் தொழிலாளியாகவும், மனோஜ் மேஸ்திரியாகவும், சுந்தர் பெயின்டராகவும் இருந்தனர். வருவாய் ஈட்டத் தொடங்கி, தங்களது குடும்பத்தினருக்கு ஆதரவு அளித்தனர். தங்களது வீடுகளுக்கு அருகிலேயே வேலை கிடைக்கும்போது, வாழ்வாதாரத்தை தேடி வெளியே செல்ல வேண்டிய அவசியம் என்ன என்று லலோ கேள்வி எழுப்பினார். பெருமளவிலான மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தபோதிலும், இதனை மேலும் அதிகரிக்க வேண்டும் என்று அரசு விரும்பியது. தேவையைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு குடும்பத்துக்கும் இலவசமாக உணவுதானியங்கள் வழங்கப்பட்டன. ஜார்க்கண்ட் மாநிலத்தின் கிரித் பகுதியைச் சேர்ந்த ராம்சங்கர் தாக்கூராக இருந்தாலும் சரி, மத்தியப்பிரதேசத்தின் அனுப்பூரைச் சேர்ந்த அனிதாவாக இருந்தாலும் சரி, பொதுமுடக்கத்துக்கு மத்தியில் இலவச உணவுதானியங்களைப் பெற்ற 80 கோடி பேரில் அவர்களும் அடங்குவர்.

கொரோனா பெருந்தொற்று காரணமாக மார்ச் 24, 2020 முதல் மூன்று வாரங்களுக்கு அறிவிக்கப்பட்ட முழு பொதுமுடக்கம், இந்தியாவை நிலைகுலைய வைத்தது. இதில், வேலைக்காக வெளியில் கூட செல்ல முடியவில்லை. தினக் கூலி தொழிலாளர்கள், வயதானவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்களின் நிலை மோசமாக இருந்தது.

மார்ச் 26, 2020-ல் பிரதமரின் ஏழைகள் நல திட்டத்தின்கீழ், ரூ.2.76 லட்சம் கோடி மதிப்பிலான நிவாரணத் தொகுப்பை பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். ஏழைகளைப் பாதுகாப்பதும், கொரோனாவைரஸுக்கு எதிரான போரில் அவர்களுக்கு உதவுவதுமே இந்தத் திட்டத்தின் நோக்கம்.

இந்தத் திட்டத்தின்கீழ், அரசு தொடங்கிய பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்டத்தின் மூலம், குறிப்பிட்ட பொது விநியோக அமைப்பில் உள்ள பயனாளிகள் அனைவருக்கும் ஒவ்வொரு

## பிரதமரின் ஏழைகள் நலத் திட்டத்தின் சாதனைகள் மற்றும் மைல்கல்கள்

- ரூ.2.76 லட்சம் கோடி மதிப்பிலானது
- 80 கோடி மக்களுக்கு இலவச உணவுதானியம்
- 8 கோடி குடும்பங்களுக்கு இலவச சமையல் எரிவாயு
- விவசாயிகள், பெண்கள், வயதானவர்கள், ஏழைகள் மற்றும் வறிய நிலையில் இருப்போர் என 42 கோடிக்கும் மேற்பட்டோருக்கு நேரடியாக பணம் விநியோகம்

### பிரதமரின் ஏழைகள் நல தொகுப்பில் உணவு மட்டுமின்றி, மேலும் பல்வேறு சலுகைகள்:

அரசு மருத்துவமனைகள் மற்றும் சுகாதார மையங்களில் கொரோனாவுக்கு எதிராக போராடும் 22 லட்சத்துக்கும் மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்களுக்கு ரூ.50 லட்சம் காப்பீடு. இதில், துப்புறவுப் பணியாளர்கள், துணை மருத்துவர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களும் அடங்குவர்

## பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்டம்

உணவுதானியங்கள் கிடைக்காததால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து ஏழை மக்களை பாதுகாப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம். தொடக்கத்தில் இந்தத் திட்டத்தை ஜூன் 2020 வரை அரசு அறிவித்தது. பின்னர் நவம்பர் 2020 வரை நீட்டிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ், இந்தியாவின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கான 80 கோடி பேருக்கு இலவசமாக உணவுதானியங்கள் வழங்கப்பட்டன. ஏப்ரல் முதல் ஜூன் 2020 வரையான காலத்தில் 18.8 கோடி பயனாளிகளுக்கு 5.43 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு பருப்பு வகைகள் விநியோகிக்கப்பட்டன.



மாதமும் ஒவ்வொருவருக்கும் 5 கிலோ என்ற அடிப்படையில் மத்திய தொகுப்பிலிருந்து உணவுதானியங்கள் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டன. தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின்கீழ் கட்டாயமாக வழங்கப்பட வேண்டிய அளவுக்கு மேலாக இந்தக் கூடுதல் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்தத் திட்டம் நவம்பர் 2020 வரை நீட்டிக்கப்பட்டது. ரூ.75,000 கோடி மதிப்பிலான 200 லட்சம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான உணவுதானியங்கள் வழங்கப்பட்டன.

### விவசாயிகளுக்கு பலன்:

பிரதமரின் விவசாயிகள் நலநிதி திட்டத்தின்கீழ், டிசம்பர் 2020 வரையான காலத்தில் 9 கோடி விவசாயிகளுக்கு மூன்று தவணைகளாக தலா ரூ.2,000 வரவு வைக்கப்பட்டது.

### ஏழைகளுக்கு உதவி:

வங்கிகளில் பிரதமரின் மக்கள் நிதி கணக்கு வைத்துள்ள 20.60 கோடிக்கும் மேற்பட்ட பெண்களுக்கு மாதத்துக்கு ரூ.500 வீதம், மூன்று மாதங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. முதல் தவணையாக ரூ.10,325 கோடி; இரண்டாவது தவணையாக ரூ.10,315 கோடி, மூன்றாவது தவணையாக ரூ.10,312 கோடி வரவுவைக்கப்பட்டது. அதோடு, வயதுமுதிர்ந்தோர், விதவைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என 2.81 கோடி பேருக்கு நெருக்கடியிலிருந்து மீண்டுவருவதற்காக தலா ரூ.500 வீதம் இரண்டு தவணைகளாக ரூ.2,814.5 கோடி விநியோகிக்கப்பட்டது. கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் என 1.82 கோடி பேருக்கு ரூ.4,987.18 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது.

### பிரதமரின் ஏழைகள் நல திட்டத்தின்கீழ் 8.5 கோடி ஏழைக் குடும்பங்களுக்கு இலவச எரிவாயு சிலிண்டர்கள்:

2020-ம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின்கீழ் 8.52 கோடிக்கும் மேலான எரிவாயு சிலிண்டர்கள் பதிவுசெய்யப்பட்டு, இலவசமாக விநியோகிக்கப்பட்டது. கூடுதலாக ஜூன் மாதத்தில் 3.27 கோடி சிலிண்டர்களும், ஜூலை மாதத்தில் 1.05 கோடி சிலிண்டர்களும் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.

### அமைப்புசார்ந்த துறைகளில் குறைந்த ஊதியம் பெறுவோருக்கு உதவி:

100-க்கும் குறைவான தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்களில் பணியாற்றும் ரூ.15,000-க்கும் குறைவான ஊதியம் பெற்றோர், வேலைவாய்ப்பை இழக்கும் அபாயத்தில் இருந்தனர். இந்தத் தொகுப்பின் கீழ், ஜூன் 2020 வரை, தொழிலாளர்களின் வருங்கால வைப்புநிதி கணக்கிற்கு மாதந்தோறும் அவர்களது ஊதியத்தில் 24%-ஐ செலுத்த அரசு முடிவுசெய்தது. 43 லட்சம் ஊழியர்களுக்கு அவர்களது 24% வருங்கால வைப்பு நிதி பங்களிப்பாக ரூ.2,476 கோடி வழங்கப்பட்டது. மார்ச் மாதத்தில் 34.19 லட்சம் தொழிலாளர்களுக்கு ரூ.514.6 கோடி வழங்கப்பட்டது. ஏப்ரல் மாதத்தில் 32.87 லட்சம் ஊழியர்களுக்கு ரூ.500.8 கோடி வழங்கப்பட்டது. இதேபோல, மே மாதத்தில் 32.68 லட்சம் ஊழியர்களின் பங்களிப்பாக ரூ.482.6 கோடி அளிக்கப்பட்டது. ஜூன் மாதத்தில் 32.21 லட்சம் தொழிலாளர்களுக்கும் (ரூ.491.5 கோடி), ஜூலையில் 30.01 லட்சம் ஊழியர்களுக்கும் (ரூ.461.9 கோடி), ஆகஸ்டில் 1.77 லட்சம் தொழிலாளர்களுக்கும் (ரூ.24.74 கோடி) பங்களிப்பு செலுத்தப்பட்டது.

### வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களுக்கு ஒட்டுமொத்த இருப்புத் தொகையில் 75% அல்லது 3 மாத ஊதியம் இதில், எது குறைவோ அந்தத் தொகையை திருப்பி செலுத்தாத வகையிலான முன்பணமாக வழங்குதல்:

திருப்பி செலுத்த வேண்டாத வகையில், வருங்கால வைப்பு நிதி அமைப்பில் உள்ள 36.05 லட்சம் உறுப்பினர்கள் ஆன்லைன் மூலம் பணத்தை திரும்பப் பெற்றனர். இந்தத் தொகை ரூ.9,543 கோடி.





# பட்ஜெட் 2021-22:
# நாட்டை முன்னோக்கி கொண்டுசென்றது

**கொரோனாவைரஸ் காலகட்டத்துக்குப் பிறகு தாக்கல் செய்யப்பட்ட முதலாவது பொது பட்ஜெட்டில், அரசின் முன்னுரிமைகள் எடுத்துரைக்கப்பட்டன. பட்ஜெட் குறித்து மக்களிடமிருந்து வந்த நேர்மறை கருத்துக்கள், நாட்டின் மனநிலையை வெளிப்படுத்துகின்றன. தற்போது, பட்ஜெட்டை சிறப்பான முறையில் அமல்படுத்துவதில் நாட்டின் உயர் தலைமை முயற்சி மேற்கொண்டுவருகிறது. பட்ஜெட் என்பது வழக்கமானதாக இருக்காமல், நாட்டின் அடிமட்டத்தில் உள்ள கடைசி நபருக்கும் அதன் பலன்கள் சென்றடைய வேண்டும் என்பதே அரசின் நோக்கமாக உள்ளது.**

பட்ஜெட்டை அமல்படுத்துவதை வழக்கமான சம்பிரதாயமாக கொண்டிருக்காமல், நாடாளுமன்ற ஜனநாயக வரலாற்றில் முதல்முறையாக, அதனை சிறப்பாக அமல்படுத்த நாட்டின் உயர் தலைமை முக்கியத்துவம் அளித்து வருகிறது. பட்ஜெட்டும், அரசின் தொலைநோக்கு திட்டமும் அடிமட்ட மக்களுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்த ஒவ்வொரு துறையினருடனும் ஆலோசனையை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கினார். இதற்கு காரணம், பட்ஜெட்டை அமல்படுத்துவதில், அரசு தீவிரமாக இருப்பதை வெளிப்படுத்துவதும், நாட்டின் வளர்ச்சியில் ஒவ்வொரு துறையும் பங்களிப்பை செய்வதை உறுதிப்படுத்துவதுமே ஆகும். பட்ஜெட்டை சிறப்பாக அமல்படுத்துவது தொடர்பாக தொடர்ந்து காணொலிக் காட்சி கலந்துரையாடல்களில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். ஒரு புறம் பங்கு விற்பனை மற்றும் அரசுக்கு நிதியை திரட்டுவதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். மறுமுனையில், சுகாதாரம், கட்டமைப்பு மற்றும் பாதுகாப்புத் துறைகளில் பட்ஜெட்டை சிறப்பான முறையில் அமல்படுத்துவது குறித்தும் விவாதித்தார். முக்கியத்துவம் இல்லாத பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்குவதற்கு அவர் வலியுறுத்தினார். தொழில் செய்வது அரசின் வேலையில்லை என்று அவர் கூறினார். நிதி திரட்டுவது மற்றும் நவீனமயமாக்குவது ஆகியவற்றின் மூலம், ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் திறனையும் மேம்படுத்த அரசு பணியாற்றி வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

இழப்பை சந்தித்துவரும் பொதுத்துறை நிறுவனங்கள் குறித்து பேசிய பிரதமர், இவற்றில் பெரும்பாலான நிறுவனங்களுக்கு வரிசெலுத்துவோரின் பணத்தின் மூலம் ஆதரவு அளிக்க வேண்டிய நிலை இருப்பதாகவும், இது பொருளாதாரத்தில் பெரும் சுமையை ஏற்படுத்துவதாகவும் கூறினார். ஒரு குறிப்பிட்ட சொத்துக்களை அரசு விற்பனை செய்வதன் மூலம், தனியார் துறையினரை ஈடுபடுத்த முடியும் என்று அவர் விளக்கினார். தனியார் துறையினரின் பங்களிப்பை அதிகரித்து, பொதுத்துறை நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கான செயல் திட்டத்தை அரசு உருவாக்கியுள்ளதாகவும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.



## அரசு நிதியை எவ்வாறு உருவாக்குகிறது?



**குறைந்தபட்ச அரசு, அதிகபட்ச ஆளுமை என்ற சிந்தனையை பிரதமர் நரேந்திர மோடி, செயல்படுத்திவருகிறார். நாட்டில் பயன்படுத்தப்படாத மற்றும் குறைந்த அளவில் பயன்படுத்தப்படும் சொத்துக்கள், அரசிடம் ஏராளமாக இருப்பதாக பிரதமர் தெரிவித்தார். இதனை மனதில் கொண்டு, தேசிய அளவிலான நிதி சேர்ப்புக்கான திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. இதன்படி, பெட்ரோலியம், எரிவாயு, துறைமுகங்கள் மற்றும் மின்சாரம் ஆகிய துறைகளில் உள்ள 100 நிறுவனங்களில் பங்கு விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்களில் ரூ.2.5 லட்சம் கோடி முதலீட்டுக்கான வாய்ப்புகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.**

நிதி சேவைகள் துறையில் பட்ஜெட்டை அமல்படுத்துவது குறித்து பிரதமர் ஆற்றிய உரை

- பணம் செலுத்துவோரும், முதலீட்டாளரும் நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையைப் பெற வேண்டும் என்பதே நமது முன்னுரிமை
- நாட்டின் நிதித்துறை விவகாரத்தில் அரசின் இலக்கு மிகவும் தெளிவாக உள்ளது. இந்த இலக்கை முன்னோக்கி கொண்டுசெல்லும் வகையில் பட்ஜெட் அமைந்துள்ளது
- சாதாரண மக்களின் வருவாயை பாதுகாப்பது, அரசின் திட்டங்களை ஏழைகளுக்கு எந்தவொரு குறைபாடும் இல்லாமலும், சிறப்பாகவும் கொண்டுசேர்ப்பது, வளர்ச்சிக்காக கட்டமைப்பு முதலீடுகளை ஊக்குவிப்பது ஆகியவையே நமது முன்னுரிமைகள்
- விவசாயிகள், சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் மற்றும் புதுமை தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலமே சுயசார்பு பாரதம் என்ற கனவை நனவாக்க முடியும்

### வேளாண்மையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் தனியார் துறையினரின் பங்களிப்பு இருக்க வேண்டும் என பிரதமர் வலியுறுத்தினார். அவரது உரையிலிருந்து:

- 21-ம் நூற்றாண்டுக்கான இந்தியாவில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க, மதிப்புக்கூட்டு நடவடிக்கைகளுடன், அறுவடைக்குப் பிந்தைய உற்பத்தி அல்லது உணவுப் பதப்படுத்துதலில் புரட்சியை ஏற்படுத்த வேண்டியது அவசியம்
- பதப்படுத்தப்பட்ட உணவுகளுக்காக நாட்டின் வேளாண் துறையை சர்வதேச சந்தைக்கு நாம் விரிவுபடுத்த வேண்டும்
- கால்நடை வளர்ப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறைகளுக்கு முன்னுரிமை அளித்து, வேளாண்மைக்கான கடன் இலக்கை ரூ.16.50 லட்சம் கோடியாக அரசு அதிகரித்துள்ளது

### உலகளாவிய நம்பிக்கையைப் பெற்ற இந்திய சுகாதாரத் துறை



கொரோனாவைரஸ் பெருந்தொற்று காலத்தில் தனது அனுபவம் மற்றும் திறனை இந்தியா வெளிப்படுத்தியது. நாட்டின் வலுவான சுகாதாரத் துறை குறித்து உலகத்தின் கவனத்தை ஈர்த்தது. இந்திய சுகாதாரத் துறையின் கவுரவமும், நம்பகத்தன்மையும் உலக அளவில் புதிய உச்சத்தை அடைந்தது. இந்திய மருத்துவர்கள் மட்டுமல்லாது, இந்திய மருந்துகளும், தடுப்பூசிகளும் புதிய நம்பிக்கையைப் பெற்றன.

### சுகாதாரத் துறையில் பட்ஜெட்டை சிறப்பாக அமல்படுத்துவது குறித்து பிரதமர் ஆற்றிய உரை

- 2021-22-ல் சுகாதாரத் துறைக்கான பட்ஜெட் ஒதுக்கீடு இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. இது ஒவ்வொரு குடிமகனுக்கும் சிறந்த சுகாதார வசதியை அளிக்க வேண்டும் என்ற அரசின் உறுதியை வெளிப்படுத்துகிறது.
- மருத்துவ உபகரணங்கள் முதல் மருந்துகள் வரை, செயற்கை சுவாசக் கருவிகள் முதல் தடுப்பு மருந்துகள் வரை, விஞ்ஞான ஆராய்ச்சி முதல் கண்காணிப்பு கட்டமைப்புகள் வரை, மருத்துவர்கள் முதல் தொற்றுநோயியல் நிபுணர்கள் வரை என அனைத்திலும் நாம் கவனம் செலுத்த வேண்டும்
- பொது சுகாதார ஆய்வகங்களை கட்டமைப்பதில் அரசு-தனியார் கூட்டமைப்பு முறைக்கு தனியார் துறையால் பங்களிப்பை செய்ய முடியும். பிரதமரின் மக்கள் ஆரோக்கிய திட்டம், தேசிய டிஜிட்டல் சுகாதார இயக்கம், குடிமக்களின் டிஜிட்டல் சுகாதார ஆவணங்கள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை ஏற்படுத்த முடியும்

### இந்தியாவை ஆரோக்கியமாக வைத்திருக்க நான்கு அம்ச உத்திகளை கொண்டு வர முயற்சித்து வருகிறோம்:

உடல்நல பாதிப்புகளைத் தடுப்பது மற்றும் உடல் ஆரோக்கியத்தை ஊக்குவிப்பது; ஏழைகளில் ஏழை மக்களுக்கு மிகவும் குறைந்த விலையிலும், சிறப்பான முறையிலும் சிகிச்சை அளிப்பது; சுகாதார கட்டமைப்பு மற்றும் சுகாதாரத் துறை வல்லுநர்களின் எண்ணிக்கை மற்றும் தரத்தை அதிகரிப்பது; தடைகளை குறிப்பிட்ட காலத்துக்குள் தகர்த்தெறிவதற்காக இலக்கு அடிப்படையில் பணியாற்றுவது.

### பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தியில் வளர்ச்சி



ஆயுதங்கள் மற்றும் ராணுவ உபகரணங்கள் உற்பத்தியில் நூறு ஆண்டுகால அனுபவத்தை இந்தியா பெற்றுள்ளது. தற்போது, தனது திறனையும், திறமையையும் அதிகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. பாதுகாப்புத் துறை தொடர்பான 100 வகையான இறக்குமதி பொருட்களை பட்டியலிட்டு, அவற்றை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பொருட்களை உள்ளூர் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து உற்பத்தி செய்ய முடியும். இந்தியாவின் போர் விமானமான தேஜஸ் என்பது ஆவணமாக மட்டுமே ஒரு காலத்தில் இருந்தது என்று பிரதமர் தெரிவித்தார். ஆனால், தேஜஸ் போர் விமானத்தை உருவாக்குவதில் தனது பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் திறனை அரசு நம்பியது. இதன்மூலம், தற்போது, வானில் தேஜஸ் போர் விமானம் சிறப்பாக பறந்துகொண்டிருக்கிறது. சில வாரங்களுக்கு முன்பு, ரூ.48,000 கோடி மதிப்பிலான தேஜஸ் விமானங்களை உற்பத்திசெய்வதற்கு ஆர்டர் கிடைத்துள்ளது.

பாதுகாப்புத் துறைக்கான பட்ஜெட் திட்டங்களை சிறப்பாக அமல்படுத்துவது குறித்து பிரதமர் ஆற்றிய உரை:

- 2014-ம் ஆண்டு முதலே, வெளிப்படைத்தன்மை, சிறப்பாக யூகிப்பது மற்றும் எளிதாக தொழில் செய்வது ஆகியவற்றுடன், பாதுகாப்புத் துறையில் நாம் தொடர்ந்து முன்னேறி வருகிறோம்
- உரிம முறையை நீக்குவது, கட்டுப்பாடுகளை நீக்குவது, ஏற்றுமதி ஊக்குவிப்பு, அந்நிய முதலீட்டை தாராளமயமாக்குதல் போன்ற நடவடிக்கைகள் மூலம், வலுவான நடவடிக்கைகளை நாம் எடுத்துள்ளோம்
- பாதுகாப்புத் துறையில் தன்னிறைவே, நமது வீரர்கள் மற்றும் இளைஞர்களின் மேம்பாடாக பார்க்க வேண்டும்
- உற்பத்தியிலும், வடிவமைப்பு மற்றும் உருவாக்கத்திலும் பங்கெடுக்க முன்வர வேண்டும் என்று தனியார் துறையினரை நான் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்
- ஒட்டுமொத்த உற்பத்தி துறையின் முதுகெலும்பாக சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது நாம் மேற்கொண்டுள்ள சீர்திருத்தங்கள், சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கு அதிக சுதந்திரத்தை வழங்கும். மேலும், விரிவாக்கம் செய்வதற்கு ஊக்குவிக்கும். ■

பிரதமரின் முழு உரையைக் கேட்க கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்



# சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு இந்தியா உறுதிபூண்டுள்ளது

**பூமியில் பருவநிலை மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. உலகம் முழுவதும் வெப்பநிலை, வறட்சி, வெள்ளம், காட்டுத் தீ, மழையளவில், பனிப்பொழிவு முறைகளில் மாற்றம் ஆகியவை அதிகரித்துக் கொண்டே வருகின்றன என்பது பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த சமயத்தில், 2015 பாரிஸ் ஒப்பந்தத்தின்படி, உலக வெப்பநிலையளவு 2 டிகிரி செல்ஷியஸ் என்கிற அளவிற்கு உட்பட்டதாக, கட்டுக்குள் வைத்திருக்க, இந்தியா தன்னாலியன்ற பங்கையளித்து வருகிறது. மார்ச் 21 ஐ சர்வதேச வன நாளாகவும், மார்ச் 22 ஐ சர்வதேச நீர் நாளாகவும் கொண்டாடுகிற அதே சமயம், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு நாம் எவ்வாறு பங்காற்ற முடியும் என்று நாம் சிந்திக்க வேண்டும்.**

பாரம்பரிய இந்திய சிந்தனை, எப்போதுமே இயற்கையை வணக்கத்திற்குரியதாகக் கருதி வந்துள்ளது. அது மட்டுமல்லாமல், அதை அன்றாட இருப்பின் ஒரு பகுதியாக மாற்றிக் கொண்டுள்ளது. உலகம் முழுவதிலும் ஆறுகள் வழிபடப்படும் ஒரே நாடாக இந்தியா உள்ளது. அசோக மன்னர் முதல் மகாத்மா காந்தி வரை இந்திய சித்தாந்தம் எப்போதும் நீர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்துள்ளது. பிப்ரவரி 23, 2021 அன்று “சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய வகையிலான பருவநிலை தொடர்பான அபாயங்களுக்குத் தீர்வு காண்பது” என்பது குறித்த ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலின் திறந்த விவாதத்தில், இந்தியாவின் பிரதிநிதியாக, மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் பங்கேற்றார். அவர், நம் நாடு, சுற்றுச் சூழல் குறித்து உறுதி பூண்டுள்ளது என்பதை எடுத்துக்கூறும் வகையில், ஷுக்லா யஜுர்வேதத்திலிருந்து ஒரு பாடலைப் பாடினார்.

அவர் கூறியதாவது

ॐ द्यौः शान्तिरन्तरिक्षँ शान्तिः,
पृथ्वी शान्तिरापः शान्तिरोषधयः शान्तिः।
वनस्पतयः शान्तिर्विश्वे देवाः शान्तिर्ब्रह्म शान्तिः,
सर्वँ शान्तिः, शान्तिरेव शान्तिः, सा मा शान्तिरेधि॥

இதன் பொருள் என்னவென்றால், வானமெங்கும், விண்வெளி முழுமையும் அமைதி பரவட்டும். இந்தப் பூமி முழுமையிலும், நீரிலும், அனைத்து மூலிகைகள், மரங்கள் மற்றும் தாவரங்களிலும் அமைதி ஆட்சி புரியட்டும். பிரபஞ்சம் முழுமையிலும் அமைதி பொழியட்டும். அமைதி அடிப்படை அம்சமாக இருக்கட்டும். எல்லாவற்றிலும், அமைதி, அமைதி மட்டுமே நிலவட்டும். நமக்கும், எல்லா உயிரினங்களுக்கும் அமைதி, அமைதி, அமைதி கிட்டட்டும்! உலக சுகாதார அமைப்பின் (WHO) ஒரு அறிக்கையின்படி, ஒவ்வொரு ஆண்டும் சுமார் 38 லட்சம் பேர் காற்று மாசுபாடு காரணமாக இறக்கின்றனர்; பூமியில் வனப்பகுதி சுருங்கி வருகின்றன; நீர்நிலைகள் அருகிக் கொண்டிருக்கின்றன என்றும், ஆறுகள் வழித்தடங்களை மாற்றிக் கொண்டு வெள்ளம் ஏற்படக் காரணமாக அமைகின்றன; இயற்கைச் சீரழிவு ஏற்படுகிறது என்றும்

# சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான பாதையில் இந்தியா

பாரிஸ் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட பிறகு ஐந்தாண்டுகள் நிறைவடைந்ததையொட்டி வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, 2021 ஆம் ஆண்டுக்கான உலக அளவிலான பருவநிலை மாற்ற செயல்திறன் குறியீட்டு வரிசையில் முதல் 10 நாடுகளில் ஒன்றாக இந்தியா இடம் பெற்றது. 2014ல் 31வது இடத்தில் இருந்த இந்தியா, 2021ஆம் ஆண்டில் 10வது இடத்தைப் பிடித்துள்ளது. பல ஆண்டு கால கடின உழைப்பு, முறையான திட்டமிடல் ஆகியவற்றின் மூலமே இது சாத்தியமாயிற்று. கடின உழைப்பு, திட்டமிடல் ஆகியவை காரணமாக, கடந்த நான்காண்டுகளில் 13 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவிற்கு, காடுகளை அதிகரிக்க முடிந்தது.



ஈராண்டுகளுக்கு ஒருமுறை வெளியிடப்படும் இந்திய வன ஆய்வு அறிக்கையின் 2019 அறிக்கையின்படி, இந்தியாவில் காடு மற்றும் மரங்களின் பரப்பளவு

**8,07,276 சதுர கி.மீ.**

இது இந்தியாவின் மொத்த புவியியல் பரப்பளவில் 24.56 சதவீதமாகும்

- 2017 உடன் ஒப்பிடுகையில், நாட்டில் 5,188 சதுர கி.மீ (0.65 சதவிகிதம்) காடுகள் மற்றும் மரங்களின் பரப்பு அதிகரித்துள்ளது
- நாட்டின் மொத்த வனப்பகுதி 7,12,249 சதுர கி.மீ ஆகும், இது மொத்த புவியியல் பரப்பளவில் 21.67 சதவீதமாகும்.
- கர்நாடகாவில் வனப்பகுதி மிக அதிகமாக 1,025 சதுர கி.மீ அதிகரித்தது. அதைத் தொடர்ந்து ஆந்திரா (990 கி.மீ), கேரளா (823 கி.மீ), ஜம்மு-காஷ்மீர் (371 கி.மீ), இமாச்சலப் பிரதேசம் (334 கி.மீ) தொலைவிற்கு வனப்பகுதியை அதிகரித்துள்ளன.
- சுற்றுச்சூழலை மாசுபடுத்தக் கூடிய வழக்கமான மர எரிபொருளுக்கு பதிலாக, வீடுகளில் எல்பிஜி பயன்படுத்துவதற்காக உஜ்வாலா திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 8 கோடிக்கு மேற்பட்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- இந்தியாவில் தூய்மையான சுற்றுச்சூழலை அடைய வேண்டும் என்ற நோக்கத்துடன், முதன்முறையாக 2019 இல் தேசிய அளவிலான தூய்மையான காற்று திட்டம், தொடங்கப்பட்டது. காற்றில் காணப்படும் தீங்கு விளைவிக்கும் துகள்களான PM 2.5 மற்றும் PM 10இன் அளவை, 2024ஆம் ஆண்டுக்குள் 30% வரை குறைப்பதே இதன் நோக்கமாகும்.
- காற்று மாசுபாட்டைக் குறைப்பதற்காக, பிஎஸ் -4 தரநிலைக்குப் பிறகு, பிஎஸ் 6 நேரடியாக செயல்படுத்தப்படுகிறது. மின்சார வாகனங்களை மேம்படுத்த புதிய கொள்கை வகுக்கப்படுகிறது
- உஜாலா, தூய்மை இந்தியா, நமாமி கங்கே போன்ற திட்டங்கள் சுற்றுச்சூழலுடன், தண்ணீரைப் பாதுகாப்பதிலும் முக்கியமானவை என்பதை நிரூபித்து வருகின்றன. நமாமி கங்கே திட்டத்தின் கீழ் சுமார் 305 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. கங்கை நதியில் வடிகால் அமைக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.
- காடுகளின் சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாப்பதற்காக , வனவிலங்கு பாதுகாப்பு திட்டங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. கடல் அமைப்பையும், நீர்வாழ் உயிரினங்களையும் பாதுகாப்பதற்காக நெகிழியை முற்றிலுமாக அகற்ற, ஆமைக் கொள்கை மற்றும் டால்பின் திட்டம் ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டன.
- வனங்களைப் பாதுகாப்பதற்காக, புதுப்பிக்கக்கூடிய எரிசக்தித் துறையில், இந்தியா மிகவும் பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்துள்ளது. சர்வதேச சூரியசக்தி கூட்டணியை அமைப்பது என்பது முதல், 2022ஆம் ஆண்டுக்குள் 175 ஜிகாவாட் அளவிற்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றலை உருவாக்க வேண்டும் என்ற இலக்கை அடைவது வரை, இலக்குகள் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரே எட்டப்படும்.
- நாட்டின் 31 நதிகளை இணைக்க விரிவான செயல்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.
- கடந்த ஆறு ஆண்டுகளாக, நீர் பாதுகாப்பு, வனப் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைகள் அனைத்தும் அரசின் முயற்சிகளுக்குச் சான்றாகும். மேலும், பிரதமர் நரேந்திர மோடி, மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரையில் குப்பையை அகற்றுவதைக் கண்டதும், அனைவரும் இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற செய்தி அனைவரையும் சென்றடைந்தது. இயற்கையைப் பாதுகாப்பதில் அரசுக்குள்ள அக்கறையையுக் இச்செயல் பிரதிபலித்தது. எனவே, சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகளுக்குப் பங்களிப்பது அனைவரின் பொறுப்பாகும்.

பல்வேறு அறிக்கைகள் மற்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காக, உலகின் சுமார் 196 நாடுகள் 2015 இல் பாரிஸில் கூடின.

பருவநிலை மாற்றத்தை மட்டுப்படுத்துவதற்காக வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கு இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன. உலக அளவிலான இந்த அச்சுறுத்தலை ஒன்றிணைந்து கையாள்வதே இதன் நோக்கம், ஆனால் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அறிக்கை வெளிவந்தபோது, இலக்கை எட்டியிருந்த ஒரே ஒரு நாடு இந்தியா மட்டுமே. சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக, அரசு, பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்கு, பொது மக்களும் தங்கள் பங்கை அளிக்க வேண்டும். ■

# பள்ளிகள் மீண்டும் திறக்கப்படுவது, குழந்தைகளின் முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்துள்ளது

**21 ஆம் நூற்றாண்டின் மாணவர்களுக்கு, கொரோனா வைரஸ் பெருந்தொற்று ஒரு புதிய, தனித்துவமான அனுபவத்தை அளித்துள்ளது. அவர்கள் இந்த அனுபவத்தை, தங்கள் வாழ்நாளில் மறக்க முடியாது. 11 மாதங்களுக்கு வீட்டுக்குள்ளேயே அடைபட்டு ஆன்லைனில் படிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்ட பிறகு, தற்போது, கோவிட்-19 நெறிமுறைகளைப் பின்பற்றி பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. வாழ்க்கை மீண்டும் சரியான பாதையில் செல்கிறது. இப்போது, படிப்புடன், மாணவர்கள் தங்கள் நண்பர்களுடன் விளையாடவும், கூடியாடி மகிழவும் முடியும்**




டெஹ்ராடூனில் உள்ள இந்தியன் பப்ளிக் பள்ளியின் உறைவிடப்பள்ளி மாணவியான ஜோதி, கொரோனா வைரஸ் காலத்தையும், பொதுமுடக்க காலத்தையும், பீகாரில் பாட்னாவிலுள்ள தனது வீட்டில் கழித்து, பிப்ரவரி 2021ல் பள்ளிக்கு வந்தார். தனது பள்ளியை அடைந்த பிறகு,: “வீட்டிற்குள் அதிக நேரம் செலவிட்ட பிறகு, பள்ளியும், நண்பர்களும் நம் வாழ்வின் ஒரு முக்கிய அங்கம் என்பதை உணர்ந்தேன். கொரோனா வைரஸ் காலத்தில், எல்லாமே கட்டுப்படுத்தப்பட்டவையாக இருந்தன. வகுப்புகள் ஆன்லைனில் நடத்தப்பட்டுக்கொண்டிருந்தன. இப்போது, பழைய நாட்கள் மீண்டும் வந்துவிட்டதாக உணர்கிறேன்” என்று ஜோதி கூறினார். .

பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்ட போது, மாணவர்கள் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்ய முறையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பிப்ரவரியில் ஜோதி மற்றும் பிற மாணவர்கள் பள்ளிக்கு வந்தபோது, அவர்கள் கோவிட் 19 இல்லை என்ற சோதனை அறிக்கையை அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். கோவிட் இல்லை என்ற’ அறிக்கை இருந்தபோதிலும், பள்ளி மீண்டும் சோதனை செய்து, மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டது. மாணவர்கள் ஒரு வாரம் தனிமைப்படுத்தப்பட்டனர். அனைத்து வசதிகளும் அவர்களின் அறைகளிலேயே அவர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் விஷயங்கள் மாணவர்களுக்கு புதிதாக இருந்தன. ஆனால், அவர்கள் மெல்ல மெல்ல கோவிட் 19 நெறிமுறைகளுக்குப் பழக்கப்பட்டு விட்டனர். நாகாலாந்தைச் சேர்ந்த வஜ்ரதீபனுக்கும் இதே போன்ற கதை தான். 11 மாதங்கள் வீட்டுக்குள்ளேயே இருந்த பின், வெளியே வருவது ஒரு நல்ல அனுபவம் என்றார் அவர். இமாச்சலப் பிரதேசத்தின் ஷர்துல், நீண்ட திரை நேரங்களுக்குப் பிறகு மந்தமாக உணர்ந்ததாகக் கூறினார். அவர் பள்ளியில் மகிழ்ச்சியுடன் கால்பந்து விளையாடிக் கொண்டிருந்தார்.

இது உறைவிடப் பள்ளிகளில் உள்ள மாணவர்களின் கதை மட்டுமல்ல, காசியாபாத்தைச் சேர்ந்த ஆயுஷ் கெடியா என்னும் மாணவர், மீண்டும் பள்ளியில் சேருவதில் மகிழ்ச்சியடைவதாகக் கூறினார். ப்ரிஜ் விஹார், பால் பாரதி பப்ளிக் பள்ளியின் 11 ஆம் வகுப்பு மாணவர் ஆயுஷ், வழக்கமான வகுப்புகள் அவரை மகிழ்ச்சியடையச் செய்கின்றன என்றார். “11 மாதங்களுக்குப் பிறகு பள்ளி மீண்டும் திறக்கப்படுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆன்லைன் வகுப்புகளின் போது நாங்கள் நிறைய விஷயங்களை இழந்திருந்தோம். இப்போது, நான்

# கோவிட்19 காலத்தில் பள்ளிகளுக்கான புதிய விதிகள்





- நாடு முழுவதுமுள்ள 42,00,000 தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பள்ளித் தலைவர்கள் அனைவருக்கும் கல்வி அமைச்சகம் நிஷ்தா என்ற ஆன்லைன் திறன் மேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது
- பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டவுடன் சிபிஎஸ்இ, கேந்திரியா வித்யாலயா (கே.வி) மற்றும் ஜவஹர் நவோதயா வித்யாலயா (ஜே.என்.வி) ஆகியவை தங்கள் ஆசிரியர்களின் ஆன்லைன் கற்பித்தல் திறனை வளர்ப்பதற்கான மிகப் பெரிய அளவிலான பயிற்சியை மேற்கொண்டன. சாத்தியமான இடங்களில் ஆன்லைன் வழிமுறைகளின் மூலம் கற்றலின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்காக இவ்வாறு பயிற்சியளிக்கப்பட்டது. இதன் மூலமாக, இந்தியா முழுவதும், சிபிஎஸ்இ 4,80,000 ஆசிரியர்களுக்கும், கே.வி 15,855 ஆசிரியர்களுக்கும், ஜே.என்.வி 9,085 ஆசிரியர்களுக்கும் பயிற்சியளித்தது
- சிபிஎஸ்இ, ஃபிட் இந்தியா இயக்கத்துடன் இணைந்து, மாணவர்கள் நல்ல உடல் நலத்துடன் இருப்பதற்காக, அவர்கள், உடல் ரீதியான செயல்பாடுகளில் ஈடுபடும் வகையில் பல்வேறு ஆன்லைன் நேரடி அமர்வுகளை நடத்தியது.
- சிபிஎஸ்இ தற்போதைய கல்வித்தொடரில் ஒன்பதாம் வகுப்பிற்கு, உயர் நிலைப் பள்ளியளவில் ஒரு புதிய பாடத்தை அறிமுகப்படுத்தியது - உடல்ரீதியான செயல்பாடு பயிற்சி. மாணவர்களின் உடல் ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக கேந்திரிய வித்யாலயாக்களில், உடற்பயிற்சி, யோகா போன்றவை குறித்த ஆன்லைன் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- மாணவர்களின் மன நலன் காப்பதற்காக, கோவிட் 19 தொடங்கிய காலத்திலும் அதற்குப் பிறகும், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு உளவியல் ரீதியாக ஆதரவளிப்பதற்காக 'மனோதர்பன்' என்ற பெயரில் ஒரு முயற்சியை அமைச்சகம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பல்வேறு செயல்பாடுகள் நடத்தப்படுகின்றன.
- தேவையான டிஜிட்டல் கருவிகள் மற்றும் போதுமான நெட்வொர்க் இல்லாததால் ஏற்படும் டிஜிட்டல் இடைவெளி தொடர்பான கேள்விகளைக் கையாள, அமைச்சகம் பிரதமர் இ-வித்யா திட்டத்தின் கீழ் ஒத்திசைவு மாதிரியைத் துவக்கியது.
- தீக்ஷா (DIKSHA) வில் ஆன்லைனில் கிடைக்கும் உள்ளடக்கம் இப்போது சுயம்பிரபா டிவி சேனல் மூலம் கிடைக்கிறது. இதேபோல், இது வானொலிகளிலும் கிடைக்கும்
- உயர்தர கல்வித் திட்டங்களை ஒளிபரப்ப மொத்தம் 34 சேனல்கள் ஒதுக்கப்பட்டுள்ளன
- கல்வி கற்பிப்பதற்கான பலவகை வழிகள் - தீக்ஷா, ஸ்வயம்பிரபா, சமூக வானொலி, சிக்ஷா வாணி போன்றவை பிரதமர் இ-வித்யாவின் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டன
- இந்தி, ஆங்கிலம், உருது, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் சி ஐ இ டி - என் சி இ ஆர் டி CIET-NCERT தயாரித்த சுமார் 2,000 ஒலி-வானொலி நிகழ்ச்சிகள் உள்ளன

---

எனது நண்பர்களையும் ஆசிரியர்களையும் சந்திக்க முடியும். இது படிப்புக்கு மட்டுமல்லாமல் இதர செயல்பாடுகளுக்கும் உதவியாக இருக்கும். இதெல்லாம் கிடைக்காமலிருந்தது; இதற்காக ஏங்கிக் கொண்டிருந்தேன்" என்று அவர் கூறுகிறார்

கொரோனா வைரஸ் பெருந்தொற்று குழந்தைகளை மிகவும் பாதித்துள்ளது. இப்போது, அரசின் ஒப்புதலுக்குப் பிறகு, கோவிட்19 குத் தகுந்த நடைமுறைகளைப் பின்பற்றி பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. இது, விஷயங்களை இயல்பு நிலைக்குக் கொண்டு செல்வது மட்டுமல்லாமல், இவ்வளவு நீண்ட காலமாக வீட்டுக்குள்ளே அடைந்து கிடந்த குழந்தைகளுக்கு, புதிய ஆற்றலையும், மகிழ்ச்சியையும் தருகிறது. பொதுமுடக்க காலத்திலும் அதற்குப் பின்னரும் 11 மாதங்களுக்கு பள்ளிகள் இல்லை என்றாலும், கல்வி மற்றும் கற்றல் பாதிக்கப்படவில்லை. கல்வியாண்டு பாதிக்கப்படாமலிருக்க முறையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

வகுப்புகள் டிஜிட்டல் முறையில் நடைபெற்றன. வெளியே எந்த நடமாட்டமும் இல்லாதபோதும் கூட கற்றல் தொடர்ந்தது. டிஜிட்டல் கல்வியை மேம்படுத்துவதற்கும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இணையவழிக் கற்றலை சாத்தியமாக்குவதற்கும், அரசு, பிரதமர் இ-வித்யா திட்டத்தை அறிமுகப்படுத்தியது. டிஜிட்டல் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் மாணவர்களுக்கு, டி.டி.எச் மூலம் கல்வி புகட்டப்படுகிறது.

## நோய்களை எதிர்த்துப் போராடுதல்

# ஒரு நேரத்தில் ஒரு தடுப்பூசி

ஒவ்வொரு ஆண்டும், இந்தியா மார்ச் 16 ஐ தேசிய தடுப்பூசி நாளாக அனுசரிக்கிறது. நாட்டில் முதன்முதலாக வாய்வழியாக போலியோ தடுப்பூசி வழங்கப்பட்ட நாளிது. உயிருக்கு ஆபத்தான நிலைமைகளிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன், இந்தியா பல நோய்த்தடுப்பு திட்டங்களை நடத்தி வருகிறது. நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு தடுப்பூசி திட்டங்கள் பற்றிக் காண்போம். .



இந்தியா போன்ற வளரும் நாடுகளில் குழந்தைகளின் உயிர்களைப் பாதுகாப்பதற்கு தடுப்பு மருந்து போடுவதே, மிகவும் சிக்கனமான வழியாகும். இருப்பினும், சமூகத்தின் பெரும்பாலானோர், கல்வியறிவின்மை, மோசமான தகவல் தொடர்பு, சமூகப் புறக்கணிப்பு, சென்று சேர்வதற்கு கடினமான இடம் போன்றவை காரணமாக, தங்கள் குழந்தைகளுக்கு நோய்த்தடுப்பு மருந்துகளை அளிப்பதற்குத் தயங்குகிறார்கள்.

இதைச் சமாளிக்க, அரசாங்கம் கூடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது, இதன் காரணமாகவே மிஷன் இந்திரதனுஷ் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. அசாமின் துப்ரியில், நயன் செங்கல் சூளையில் தினசரி கூலிகள் தங்கள் குழந்தைகளை நோய்த்தடுப்பு மருந்துகள் செலுத்துவதற்கு அழைத்துச் செல்லவில்லை, ஏனெனில் அவர்கள் ஒரு நாள் வருமானத்தை இழக்க நேர்ந்திருக்கும். பலமுறை முயற்சித்த பிறகும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை நோய்த்தடுப்பு மையத்திற்கு அழைத்து வரத் தயங்கினர். எனவே, சுகாதார அதிகாரிகள் அவர்களின் பணியிடத்திற்கே சென்று தடுப்பு மருந்து சேவையளிக்க முடிவு செய்தனர். சுமார் 30 குழந்தைகளுக்கு நோய்த்தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டன.

அசாமின் சிராங், மோரிகான், லக்கிம்பூர் போன்ற இடங்களிலும் இதே நிலைமை தான் நிலவியது. மிஷன் இந்திரதனுஷ் திட்டம் மூலம் இந்த நிலை மாறியது. மேம்படுத்தப்பட்டது. லக்கிம்பூரில், சிறப்பு நடவடிக்கைகள் மூலமாக நோய்த்தடுப்பு மருந்து செலுத்தப்படுவது 99 சதவிகிதத்தை எட்டியது. மக்களின் அச்சங்களைப் போக்குவதற்கும், நோய்த்தடுப்பு மருந்துகளின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் அரசு அயராது உழைத்து வருகிறது.

மார்ச் 16 அன்று தேசிய தடுப்பூசி தினத்தைக் கடைபிடிப்பது அத்தகைய ஒரு முயற்சியாகும். நாட்டின் முதலாவது வாய்வழி போலியோ தடுப்பூசி இந்த நாளில் செலுத்தப்பட்டது என்பதால் இது மிகவும் குறிப்பிடத்தக்க நாளாகும். போலியோவை எதிர்த்துப் போராடுவதற்கும், ஒழிப்பதற்கும் தொடங்கப்பட்ட விரிவான பல்ஸ் போலியோ பிரச்சாரத்தின் கீழ், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வாய்வழியாக இரண்டு சொட்டு தடுப்பு மருந்து வழங்கப்பட்டது.




அனைவருக்கும் நோய்த்தடுப்பு திட்டம் (யுஐபி) முப்பதாண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வந்த போதிலும், 2014 ஆம் ஆண்டு வரை, 65 சதவிகித குழந்தைகள் மட்டுமே, தங்கள் வாழ்க்கையின் முதல் ஆண்டில் முழுமையாக நோய்த்தடுப்பு மருந்து செலுத்தப்பட்டவர்களாக இருந்தனர். அதாவது, சுமார் 89 லட்சம் குழந்தைகள் தடுப்பு மருந்து செலுத்தப்படாமல் விட்டுவிடப்பட்டனர். தடுப்பூசி போடப்படாத குழந்தைகள் மற்றும் ஓரளவு தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகள், குழந்தைப் பருவ நோய்கள் மற்றும் உறுப்பு இயக்கக் குறைபாடுகளால் மிகவும் எளிதில் பாதிக்கப்படுகின்றனர். நோய்த்தடுப்பு அளிப்பதை மேம்படுத்துவதற்காக, அரசு பல்வேறு தீவிரமான உத்திகளை செயல்படுத்தியது. மிஷன் இந்திரதனுஷ் இத்தகைய ஒரு திட்டமாகும்.

மிஷன் இந்திரதனுஷ் டிசம்பர் 2014 இல் தொடங்கப்பட்டது, குறிப்பிட்ட சில மாதங்களில் சிறப்பு செயல்பாடுகள் மூலம் நோய்த்தடுப்பு மருந்து அளிப்பதை விரைவாக அதிகரிப்பதே அதன் நோக்கமாகும். யுஐபியின் கீழ் வழங்கப்படும் அனைத்து தடுப்பு மருந்துகளும் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள், கருவுற்ற பெண்கள் ஆகியோருக்கு வழங்கப்படுவதை இத்திட்டம் உறுதி செய்கிறது.

மிஷன் இந்திரதனுஷின் முதல் இரண்டு கட்டங்களில் முழு நோய்த்தடுப்பு பாதுகாப்பை 6.7 சதவிகிதம் அதிகரித்தன. பிப்ரவரி 23, 2021 வரையிலான காலத்தில், மிஷன் இந்திரதனுஷின் கீழ் 3,76,00,000 குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து செலுத்தப்பட்டது.

## அனைவருக்கும் நோய் தடுப்பு மருந்து திட்டம் (யுஐபி)

- யுஐபி என்பது டிப்தீரியா மற்றும் கடுமையாக பாதிக்கக் கூடிய குழந்தைப் பருவ காசநோய் போன்ற நோய்களை இலக்காகக் கொண்டு, அவற்றால் பாதிக்கப்படாமலிருப்பதற்காக தடுப்பு மருந்து அளிக்கப்படுவதற்கான திட்டத்தின் விரிவாக்கப்பட்ட திட்டமாகும்
- தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தின் ஒரு பகுதியான, யுஐபி மிகக் குறைந்த செலவிலான, பயனுள்ள பொது சுகாதார முறைகளில் ஒன்றாகும். தடுப்பு மருந்து செலுத்தினால் இறப்பு நேரிடாது என்ற வகையிலான, ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கு, இது பெரும்பாலும் பொறுப்பாகிறது.

**நாட்டில் நோய்த்தடுப்பு பாதுகாப்பு விரைவாக அதிகரிக்கப்பட வேண்டும் என்ற நோக்கில், யுஐபியின் கீழ் ஆண்டுதோறும் புதிதாகப் பிறந்த குழந்தைகள் சுமார் 2.67 கோடி பேருக்கும், சுமார் 2.9 கோடி கர்ப்பிணிப் பெண்களுக்கும் தடுப்பு மருந்து செலுத்தப்பட்டது.**

- தடுப்பு மருந்து மூலம் தடுக்கக்கூடிய 12 நோய்களுக்கு தடுப்பு மருந்து தேசிய மற்றும் துணை தேசிய அளவில் இலவசமாக வழங்கப்பட்டது
- தேசிய அளவில், ஒன்பது நோய்களுக்கு எதிராக தடுப்பூசி வழங்கப்படுகிறது: டிப்தீரியா, பெர்டுசிஸ், டெட்டனஸ், போலியோ, தட்டம்மை, ரூபெல்லா, கடுமையாகத்தாக்கும் குழந்தைப் பருவ காசநோய், ஹெபடைடிஸ் பி, மூளைக்காய்ச்சல், மற்றும் ஹீமோபிலஸ் இன்ஃப்ளுயன்ஸா பி வகையினால் ஏற்படும் நிமோனியா ஆகிய நோய்களுக்கு எதிராக தடுப்பு மருந்து செலுத்தப்படுகிறது.

## யுஐபியின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தடுப்பு மருந்துகள்

**நிமோகோகல் நிமோனியாவால் ஏற்படும் குழந்தை இறப்பு மற்றும் நோயுறும் தன்மையைக் குறைப்பதற்காக நிமோகோகல் கான்ஜுகேட் தடுப்பூசி (பி.சி.வி) 2017 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. 2021-22 வரவுசெலவுத் திட்டத்தின் படி, தற்போது ஐந்து மாநிலங்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ள இந்த ('மேட் இன் இந்தியா') உள் நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மருந்து, நாடு முழுவதும் ஆண்டுதோறும் 50,000 க்கும் மேற்பட்ட குழந்தைகளின் இறப்பைத் தவிர்ப்பதற்காக நாடு முழுவதும் விநியோகிக்கப்படும்.**



- டிஓபிவி யிலிருந்து பிஓபிவி மாற்றத்துடன் தொடர்புடைய அபாயங்களை ஒழிக்கும் வகையில், குளோபல் போலியோ எண்ட் கேம் வியூகத்தின் ஒரு பகுதியாக, யுஐபியில் நவம்பர் 2015இல் இனாக்டிவேட்டட் போலியோ தடுப்பு மருந்து (ஐபிவி) அறிமுகப்படுத்தப்பட்டது,
- ரோட்டா வைரஸ் வயிற்றுப்போக்கு காரணமாக ஏற்படும் இறப்பு மற்றும் நோயுறும் தன்மையைக் குறைப்பதற்காக ரோட்டா வைரஸ் தடுப்பூசி (ஆர்.வி.வி) மார்ச் 2016ல் அறிமுகப்படுத்தப்பட்டது
- அம்மை நோயை ஒழிப்பதற்கும் ரூபெல்லாவைக் கட்டுப்படுத்துவதற்கும் தட்டம்மை ரூபெல்லா (எம்ஆர்) தடுப்பு மருந்து 2017ல் அறிமுகப்படுத்தப்பட்டது
- வயதானவர்களிடையே டிப்தீரியாவுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து வருவதைக் கட்டுப்படுத்தும் வகையில், யுஐபியில் டிடி தடுப்பு மருந்துக்கு மாற்றாக, டெட்டனஸ் மற்றும் வயது வந்தோருக்கான டிப்தீரியா (டி.டி) தடுப்பு மருந்து அமைந்துள்ளது. ■

> உலகெங்கிலும் உள்ள சுமார் 60 சதவிகித குழந்தைகளுக்கு போடப்படும் உயிர்காக்கும் தடுப்பு மருந்துகள் இந்தியாவில் கண்டறியப்பட்டவை என்பதில் ஒவ்வொரு இந்தியரும் பெருமைப்படுவார்கள்.
>
> **பிரதமர் நரேந்திர மோடி**

# கோவிட் தடுப்பு மருந்து: இப்போது பொதுமக்களின் முறை

*கொரோனா வைரஸ் பெருந்தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் இந்தியாவின் பங்கு மிக முக்கியமானது என்று உலக சுகாதார நிறுவனம் கருதுகிறது. முதல் கட்டத்தில் முன்னணி பணியாளர்களுக்கு தடுப்பூசி போட்ட பிறகு, இப்போது 2021 மார்ச் 1 முதல் சாதாரண மக்களுக்கும் தடுப்பூசி போடப்படுகிறது. பிரதமர் நரேந்திர மோடி தடுப்பூசி போட்டுக் கொண்டு மக்களுக்கு செய்தி விடுத்தார்.*



நம்பிக்கையூட்டும் தடுப்பு மருந்து

இந்தியாவில் இரண்டு தடுப்பூசிகள் போடப்படுகின்றன - சீரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியாவின் கோவிஷீல்ட் மற்றும் பாரத் பயோடெக்கின் கோவாக்சின். தடுப்பூசிகளைப் பற்றி மக்களின் மனதில் சில சந்தேகங்கள் இருந்தன. இருப்பினும், பிரதமர் தடுப்பூசி போட்டுக் கொண்டு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்து, தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கான தயக்கத்தைக் குறைக்க. வகை செய்தார். அவர் மார்ச் 1 ஆம் தேதி அதிகாலையில் எய்ம்ஸுக்கு விஜயம் செய்தார். புதுச்சேரியைச் சேர்ந்த செவிலி பி. நிவேதா, பிரதமருக்கு தடுப்பூசி போட்டார். பிரதமர், அசாமிய பாரம்பரிய 'கமுச்சா' துண்டு ஒன்றை வைத்திருந்தார்

"எய்ம்ஸில் கோவிட் 19 தடுப்பூசியின் முதல் டோஸை போட்டுக் கொண்டேன். கோவிட் 19 க்கு எதிரான உலகளாவிய போராட்டத்தை வலுப்படுத்த நமது மருத்துவர்கள் மற்றும் விஞ்ஞானிகள், மிகக்குறுகிய நேரத்தில் எவ்வாறு பணியாற்றினர் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. தடுப்பூசி போட்டுக் கொள்ளத் தகுதியுள்ள அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். நாம் அனைவரும் ஒன்றுபட்டு, இந்தியாவை கோவிட் இல்லாத நாடாக்குவோம். "

**பிரதமர் நரேந்திர மோடி**

கொரோனா வைரஸுக்கு எதிரான இந்தியாவின் போராட்டத்தை உலகம் முழுவதும் பாராட்டியது. இந்தப் போர், இப்போது ஒரு தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ளது. 2021 ஜனவரி 16 ஆம் தேதி தொடங்கப்பட்ட கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து செலுத்தும் இயக்கத்தின் முதல் கட்டத்தில், 1.43 கோடி முன்னணி பணியாளர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது. மார்ச் 1, 2021 முதல், அடுத்த கட்டப்பணிகள் துவங்கின. 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், 45 முதல் 59 வயதுக்குட்பட்டவர்கள், பிற நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தால், அவர்களுக்கும் தடுப்பூசி போடப்படுகிறது. பிரதமர் நரேந்திர மோடி தமக்கு தடுப்பூசி போட்டு இரண்டாம் கட்டத்தைத் துவக்கி வைத்தார். நாடு முழுவதும் குறைந்தது 12,000 அரசு மருத்துவமனைகள் இந்த தடுப்பூசியை மக்களுக்கு இலவசமாக வழங்குகின்றன. இதே அளவு எண்ணிக்கையிலான தனியார் மருத்துவமனைகளும், 250 ரூபாய்க்கு தடுப்பூசி போட அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதற்கிடையில், அருணாச்சலப் பிரதேசம் கொரோனா வைரஸ் இல்லாத மாநிலமாக மாறியுள்ளது. பிப்ரவரி 28 வரை, மாநிலத்தில் 16,836 கொரோனா வைரஸ் நோயாளிகள் பதிவாயினர். மார்ச் மாதம் ஒன்றாம் தேதிக்குள், அனைத்து நோயாளிகளும் குணமடைந்து விட்டனர். தொற்று காரணமாக மாநிலத்தில் குறைந்தது 56 பேர் உயிரிழந்தனர்.

## கோவிட் 19 போகவில்லை, கவனக்குறைவாக இருக்க முடியாது

**1,80,05,503**
தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை

**21,99,40,742**
நடத்தப்பட்ட பரிசோதனைகள்

**1,76,319**
நோயாளிகள் எண்ணிக்கை

**1,08,39,894**
குணமடைந்தோர் எண்ணிக்கை

**97.01%**

**இறப்பு விகிதம்: 1.41%**

அனைத்து தரவுகளும் மார்ச் 4, 2021 படி

## தடுப்பூசி தோழமை இயக்கம்

இந்தியா 48 நாடுகளுக்கு 4.61 கோடிக்கும் அதிகமான டோஸ் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்துகளை வழங்கியது. இந்தியாவிடமிருந்து பிற நாடுகள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

2021 மார்ச் 3 ஆம் தேதி வரை, 'தடுப்பூசி தோழமை' இன் கீழ், 48 நாடுகளுக்கு 4 கோடியே 61 லட்சத்து 66 ஆயிரம் டோஸ் தடுப்பூசி மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 71.25 லட்சம் பரிசாக வழங்கப்பட்டது.

தடுப்பூசி அனைவருக்கும் கிடைக்க வேண்டும்; தடுப்பூசிகளை உலகெங்கிலும் உள்ள நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்கும் இந்தியா கொண்டுள்ள உறுதிப்பாட்டை உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ், பாராட்டியுள்ளார், மற்ற நாடுகளும் இந்த முன்மாதிரியைப் பின்பற்றும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## பிரதமர் அளிக்கும் சுயத்திற்கான மும்மந்திரம்

# சுய விழிப்புணர்வு, தன்னம்பிக்கை மற்றும் தன்னலமற்றிருத்தல்






விஸ்வ பாரதி பல்கலைக்கழகம் மற்றும் ஐ.ஐ.டி கரக்பூர் ஆகியவற்றின் பட்டமளிப்பு விழாவில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, மாணவர்கள் நம்பிக்கையுடனும், தன்னலமற்ற தன்மையுடனும் முன்னேறிச் செல்ல வேண்டும் என்றும், தேசத்தை முதன்மைப்படுத்தும் சிந்தனையுடன் தங்கள் திறனை உணர வேண்டும் என்றும் கூறினார். நாடே முதன்மையானது என்ற எண்ணத்துடன் எடுக்கப்பட்ட ஒவ்வொரு முடிவும் சில தீர்வுகளை அளிக்கும் என்பதால், எந்த முடிவையும் எடுப்பதற்கு மாணவர்கள் தயங்க வேண்டாம் என்று அவர் கூறினார். தேசிய கல்விக் கொள்கை தற்சார்பு இந்தியாவை நோக்கிய பயணத்தின் ஒரு மைல்கல் என்று அவர் குறிப்பிட்டார். பட்டமளிப்பு விழாவின் போது, விஸ்வபாரதியைச் சேர்ந்த சுமார் 2,535 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. ■

### விஸ்வ-பாரதி பட்டமளிப்பு விழாவில் பிரதமரின் உரையின் முக்கிய அம்சங்கள்

ஒரே இந்தியா செழுமையான இந்தியா (ஏக் பாரத்-ஸ்ரேஷ்ட பாரத்) என்பதற்கு வங்காளம் ஒரு உத்வேகமாகத்திகழ்கிறது. 2047 ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் அடைந்த 100 ஆண்டுகளைக் கொண்டாடும் போது, விஸ்வபாரதியின் 25 மிகப்பெரிய இலக்குகள் என்னவாக இருக்கும். இது ஒரு தொலை நோக்குப்பார்வை ஆவணமாக உருவாகலாம்

தேசிய ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் ரூ.50,000 கோடியை ஆராய்ச்சிக்கு செலவிட இந்த ஆண்டு, பட்ஜெட் முன்மொழிந்துள்ளது

- 21 ஆம் நூற்றாண்டில், இந்தியா அறிவுசார் பொருளாதாரத்தை உருவாக்குவதை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இந்தியாவின் அறிவையும் அடையாளத்தையும் உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் பரப்புவதில் விஸ்வ-பாரதிக்கு ஒரு பெரிய பங்கு உண்டு
- முதலாவதாக, புதிய தேசிய கல்விக் கொள்கை பாலின உள்ளடக்க நிதியை வழங்குகிறது
- கிராமவாசிகள், கைவினைஞர்கள் மற்றும் விவசாயிகளை தற்சார்பு கொண்டவர்களாக மாணவர்கள் மாற்ற வேண்டும். அவர்களது தயாரிப்புகளை பெரிய சந்தைகளுக்குக் கொண்டு செல்ல, ஒரு சங்கிலியை உருவாக்க வேண்டும்

### ஐ.ஐ.டி கரக்பூரில் பிரதமரின் உரையின் முக்கிய அம்சங்கள்

வரைபடம் மற்றும் புவியியல் (ஜியோஸ்பேஷியல் ) தரவை அரசாங்கம் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துள்ளது. இந்த நடவடிக்கை நாட்டின் புதிதாகத் தொழில் தொடங்குபவர்களுக்கும், இளம் தொடக்க நிலை மற்றும் புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கும் புதிய சுதந்திரத்தை வழங்கும்

இந்த ஆண்டு, இந்தியா விடுதலையடைந்து 75 வது ஆண்டை நாடு கொண்டாடவுள்ளது. ஐ.ஐ.டி கரக்பூர் உருவாக்கிய 75 பெரிய புதிய கண்டுபிடிப்புகளையும் தீர்வுகளையும் தொகுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

- ஒரு பொறியியலாளராக, உங்களுக்குள், விஷயங்களை உருவாக்குவதற்கான ஒரு உள்ளார்ந்த திறன் உள்ளது
- ஐ.ஐ.டி கரக்பூர் ஐ.டி, நவீன கட்டுமான தொழில்நுட்பம் மற்றும் கோவிட் 19 ஆகியவற்றில் பாராட்டத்தக்க பணிகளைச் செய்து வருகிறது
- பிரதமர் ரிசர்ச் ஃபெலோஸ் திட்டம் ஆராய்ச்சிக்கு ஒரு புதிய வழியை வழங்கியுள்ளது

பிரதமரின் முழு உரையைக் கேட்க க்யூ ஆர் ஸிஸி குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்

# அழுத்தங்களுக்குத் தீர்வுகளாக பொம்மைகள்!

பொம்மைகள் முழுமையான வளர்ச்சி மற்றும் மென்மையான மனதின் வளர்ச்சிக்கானவை. அவை அழுத்தங்களைத் தீர்ப்பதாகவும் உள்ளன . உலக அளவில் போட்டியிடக்கூடிய அளவிற்கு பொம்மைத்துறையை மாற்றுவதற்காக இந்தத்தொழில்துறையில் அரசு கவனம் செலுத்தி வரும் இந்த சமயத்தில், பொம்மைகள் தயாரிப்பில் மாணவர்களை ஈடுபடுத்துவது பொம்மைகளுக்கு ஒரு புதிய பரிமாணத்தை வழங்கும்,

## கேந்திரியா வித்யாலயா மாணவர்களால் தயாரிக்கப்பட்ட தனித்துவம் வாய்ந்த பொம்மைகள்



ஒவ்வொரு மாணவரும் தத்தமது வழிகளில் தனித்துவமானவர்கள். புது தில்லியின் பழைய ஜே.என்.யூ வளாகத்தின் கேந்திரியா வித்யாலயாவின் மாணவர்களுக்கு, இந்தியாவின் முதல் பொம்மை கண்காட்சியில் தங்கள் திறமையை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பு கிடைத்தது. வெவ்வேறு பாடங்களைப் புரிந்துகொள்ள உதவுகிற பொம்மைகளை உருவாக்குவதற்கான பல்வேறு வழிகளைக் கண்காட்சியில், மாணவர்கள் காண்பித்தனர், பொம்மை தயாரிப்போடு தொடர்புடைய மாணவர்களில் ஒருவர், இந்த பொம்மைகள் உதவியுடன், தங்களால் பாடங்களை எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது என்று கூறினார். “இந்த பொம்மை விளையாட்டுகளின் மூலம் கற்றுக்கொள்வதால், இந்தியப் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தைப் பற்றியும் நாம் அனைவரும் தெரிந்து கொள்ளலாம். பொம்மை செய்யும் முறை வேடிக்கையானது; ஆனால் அதே சமயம் மிகவும் தகவல் நிறைந்ததாகும்” என்று மாணவர் கூறினார். வேறு சில மாணவர்கள் ரிமோட் மூலம் கட்டுப்படுத்தக் கூடிய பொம்மைகளை உருவாக்கினர். அவர்கள் கூறுகிறார்கள்: “இந்த நான்கு சக்கர ரிமோட் மூலம் இயக்கப்படும் பொம்மைகளைத் தயாரிப்பதில் இயற்பியலின் கோட்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன.” பள்ளியின் சூழலில் மகிழ்ச்சியில் திளைக்கும் சுதீப் பாஜ்பாய், மாணவர்கள் மகிழ்ச்சியாக இருப்பது மட்டுமல்லாமல், பள்ளியின் ஒட்டுமொத்த சூழலும் மகிழ்ச்சியாக உள்ளது என்று ஆனந்தத்துடன் தெரிவித்தார். “இது மத்திய அமைச்சகத்தால் செயல்படுத்தப்பட்ட தேசிய கல்விக் கொள்கையின் முதல் அத்தியாயம். இப்போது மாணவர்கள் விரைவாகவும், புதுமையான வழிகளிலும் விஷயங்களைக் கற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்” என்று அவர் கூறினார். பொம்மைக் கண்காட்சி புதிய நம்பிக்கையையும், கற்றலின் புதிய சகாப்தத்தையும் உருவாக்குகிறது. ■

## கொரோனா வைரஸைப் பற்றிய விழிப்புணர்வுக்கான தனித்துவமான பாம்புகள் மற்றும் ஏணிகள் விளையாட்டு



புதுமையான மனங்கள் சாதாரண விஷயங்களை வெவ்வேறு வழிகளில் செய்கின்றன. மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் வசிக்கும் சமீர் குமார், கொரோனா வைரஸ் தொற்றுநோயிலிருந்து ஒருவரைப் பாதுகாப்பதற்கான வழிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு தனித்துவமான வழியை உருவாக்கியுள்ளார். தனது படைப்பாற்றலால், அவர் பாம்புகள் மற்றும் ஏணிகள் விளையாட்டை சுவாரஸ்யமாக்குகிறார். பாம்புகள் மற்றும் ஏணிகளின் (பரமபத) விளையாட்டில், அவரது பதிப்பில், பாம்புகளுக்குப் பதிலாக, விளையாடுபவர்கள் கொரோனா வைரஸிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். கொரோனா வைரஸிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள மக்கள் பின்பற்ற வேண்டியவை குறித்தும், செய்யக் கூடாதவை குறித்தும் இவ்விளையாட்டு எடுத்துரைக்கும். தனது விளையாட்டின் மூலம், சமீர் இந்தியாவின் முதல் பொம்மை கண்காட்சியில் இடம் பெற்றார். அவரது விளையாட்டு நாளுக்கு நாள் பிரபலமாகி வருகிறது. “கொரோனா வைரஸிலிருந்து பாதுகாப்பதற்காக முகமூடிகள், சானிடைசர்கள் பயன்படுத்துதல்; சமூக விலகியிருத்தலைப் பின்பற்றுவது ஆகியவை பற்றி இந்த விளையாட்டு சொல்கிறது. விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நான் இந்த விளையாட்டை உருவாக்கியுள்ளேன்” என்று சமீர் கூறினார். தொடுகையில்லா ஃப்ரெஷனர் மற்றும் பொறியியல் மாணவர்களுக்குப் பயனளிக்கக்கூடிய நியூமேடிக் பயிற்சிக் கருவிகளையும் சமீர் உருவாக்கியுள்ளார், ■



**Narendra Modi** @narendramodi ·

என்.எஸ்.ஐ.எல் மற்றும் இஸ்ரோவுக்கு வாழ்த்துக்கள் பி.எஸ்.எல்.வி-சி 51 / அமசோனியா -1 மிஷனின் முதலாவது அர்ப்பணிப்பு வர்த்தக லான்ச் வெற்றிக்குப் பாராட்டுக்கள் . இது நாட்டில் விண்வெளி சீர்திருத்தங்களில் புதிய சகாப்தத்தை ஏற்படுத்துகிறது. 18 சக பயணிகள் நான்கு சிறிய செயற்கைக்கோள்கள் மூலம் நம் இளைஞர்களின் சுறுசுறுப்பையும் புதுமையையும் வெளிப்படுத்தியுள்ளனர்.



**Rajnath Singh** @rajnathsingh ·

"பாலகோட் வான்வழித் தாக்குதல்களின் ஆண்டுவிழாவில், இந்திய விமானப்படையின் அளப்பரிய தைரியத்திற்கும் விடாமுயற்சிக்கும் நான் வணக்கம் செலுத்துகிறேன். பாலகோட் தாக்குதல்களின் வெற்றி, பயங்கரவாதத்திற்கு எதிராகச் செயல்படுவதற்கான இந்தியாவின் வலுவான எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளது. இந்தியாவை பாதுகாப்பாக வைத்திருக்கும் நமது ஆயுதப்படைகள் குறித்து நாங்கள் பெருமைப்படுகிறோம்"



**Amit Shah** @AmitShah ·

"அனைத்து சமூக ஊடக தளங்களும் இந்திய சட்டங்களைப் பின்பற்ற வேண்டும். இன்று அறிவிக்கப்பட்ட புதிய விதிகள், சமூக ஊடகங்களைப் பயன்படுத்துபவர்களுக்கு குறை தீர்ப்பு வழிமுறைகளை அமைப்பு ரீதியாக்குவதன் மூலமும், குறைகளுக்குத் தீர்வு காண்பதை உறுதி செய்வதன் மூலமும், அவர்களுக்கு மேலும் அதிகாரம் அளிக்கும்.

நான் நரேந்திர மோடி அவர்கள் மற்றும் ஆர் எஸ் பிரசாத் அவர்கள் ஆகியோருக்குப் பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன், "



**Nitin Gadkari** @nitin_gadkari ·

#WorldCivilDefenceDay உலக சிவில் பாதுகாப்பு நாள் அனுசரிக்கப்படும் இந்த நேரத்தில், விபத்துக்கள் அல்லது பேரழிவுகள் ஏற்படும் சூழ்நிலைகளில் பாதுகாப்புக்காக குடிமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் சுய பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மக்கள் கவனத்தை ஈர்ப்போம்



**Dr. Ramesh Pokhriyal Nishank** @DrRPNishank

நாடு முழுவதுமிருந்து தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்த, கண்காட்சிக்கு 1000 க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் வருவதால், இந்தியா பொம்மை கண்காட்சியைப் பார்வையிடுவதன் மூலம் இந்திய பொம்மைகளின் உலகத்திற்கு வருகை தாருங்கள். . இந்தியாவை சுயசார்பு நாடாக உருவாக்க நாம் ஒன்றிணைவோம்.



**Smriti Z Irani** @smritiirani

11 கூட்டு மாநிலங்கள்
60 குழுக்கள்
100+ பேச்சாளர்கள் நிபுணர்கள்
1000+ நிறுவனங்கள்
30000+ பொம்மை தயாரிப்பு யூனிட்டுகள்
21 லட்சம்+ பதிவுகள்
குழந்தைகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், இதர பங்குதாரர்கள்



# PM: Govt to move forward in defence sector with transparency

EXPRESS NEWS SERVICE
NEW DELHI, FEBRUARY 22

PM Narendra Modi

PUSHING FOR self-reliance in the defence sector, Prime Minister Narendra Modi on Monday said the government had taken steps to move forward in the sector with "transparency, predictability and ease of doing business".

The Prime Minister was delivering the keynote address at a 'Webinar on Budget Announcements 2021-22: Galvanising Efforts for Atmanirbhar Bharat'. The webinar was also addressed by Defence Minister Rajnath Singh, who said the government was actively promoting not only domestic manu-

ented defence industry. Singh also made some key announcements about defence procurement from the domestic industry.

"It has been the endeavour of the government to move forward in the defence sector with transparency, predictability and ease of doing business. There used to be hundreds of ordnance factories before independence. In both the World Wars, weapons on a large scale were exported from India.

has not been strengthened as much as it should have been after Independence," Modi said.

Ruing that the country is among the biggest defence importers in the world, he said "an India that has the capacity to reach Mars could have made modern weapons also, but it became an easy way to import weapons from abroad".

Modi said India has made a list of 101 important items related to defence, which can be manufactured indigenously with the help of industries. He said a timeline has been set so that the domestic industry can plan to meet these requirements.

Singh said another list of items that will not be imported will be notified in March 2021.

# PM Modi makes strong pitch for privatisation, asset monetisation

Government has identified 100 assets whose sale could garner ₹2.5-lakh crore

OUR BUREAU
New Delhi, February 24

Prime Minister Narendra Modi on Wednesday said the government has identified 100 assets for monetisation that could fetch as much ₹2.5-lakh crore for the exchequer.

Putting his weight firmly behind privatisation and asset monetisation at a webinar organised on Department of Investment Promotion & Asset Management (DIPAM) related announcements in the recent Budget, Modi highlighted that a ₹25-trillion opportunity is up for grabs for the private sector in the country's mega ₹111-lakh crore National Infrastructure Pipeline (NIP) projects over the next five years.

He made a strong pitch for a bigger role for the private sector in the growth of the Indian economy and stressed that wealth creators are also important for the country.

Asserting that government is going ahead with the mantra of 'monetise and modernise' while

that it (government) has no business to be in business, Modi said the amount collected from monetisation and divestment would be used to fund development projects. Asset monetisation and privatisation decisions would help empower Indian citizens, he said.

**Implementation plan**

The main objective of the webinar — attended by key decision makers from sovereign wealth funds and pension funds, domestic and international investors, investment banks, advisors and experts — was to jointly develop an effective implementation plan for the reforms on privatisation and asset monetisation announced in the Budget. The webinar was also attended by Finance Minister Nirmala Sitharaman, NITI Aayog Vice-Chairman Rajiv Kumar and senior officers from 14 ministries of Central government.

Modi said that when government monetises, that space is filled by the private sec

the country. Private sector brings investment and best global practices with it.

"I can understand the need of any public sector enterprise if it is fulfilling the needs of any sector. It is the responsibility of the government to supply support to country's enterprise and business but there is no need for government to be in business", he added.

Many public sector enterprises are loss-making and several of them need the support of public money. "It burdens the economy", he added.

Making a case for privatisation, Modi said that public sector enterprises should not be run because they were started

someone's pet project. The Budget has set the stage to propel India back into a high growth trajectory with strong focus on privatisation and asset monetisation. The Budget also focuses on the strong partnership of the private sector in India's development. Also, the scope and targets of public-private partnership have been put forward with clarity.

"If the public sector is important, so is the participation of private enterprises. ...

# PM Modi calls for 100-day drive to clean water bodies

NEW DELHI, FEBRUARY 28

Underlining the importance of collective responsibility towards water conservation, PM Narendra Modi on Sunday called for a 100-day campaign to clean all water bodies and prepare these for rainwater harvesting before the monsoon season begins.

In his monthly ...

COLLECTIVE DUTY

He said the Atmanirbhar Bharat campaign should not just remain an economic campaign, but become a national spirit. "It will be possible when every person in the country takes pride in indigenous products and connects with the idea of self-

# Farmers should get more avenues to sell crops, says PM

PRESS TRUST OF INDIA
NEW DELHI, MARCH 1

PRIME MINISTER Narendra Modi on Monday emphasised on farmers getting more avenues to sell crops and said a food processing revolution was needed in the country for value addition to farm produce and to

the farm sector, including in R&D work.

Without making any direct reference to the three new farm reform laws, or to the three-month-old agitation by farmers, Modi said there is a need for expanding options for the country's farming community to sell agri produce. "Today the need of the hour is that farmers of the country get more and more options to ...," he said.

credit target has been hiked to Rs 16.5 lakh crore with priority to animal husbandry, dairy and fisheries sector.

He said Rural Infrastructure Fund has been increased to Rs 40,000 crore and allocation for micro irrigation has been doubled. Scope of Operation Green Scheme has been expanded to 22 perishable products and 1,000 more mandis with e-NAM will be linked, Modi highlighted. The Prime Minister laid emphasis on the effective and timely implementation of these budget provisions so that benefits reach

# Trust in country's health sector increased during pandemic: PM

Rhythma Kaul
letters@hindustantimes.com

Narendra Modi

NEW DELHI: Like several other sectors, India is now preparing to be aatmanirbhar, or self-reliant, in the health sector with focus on the public private partnership model to deal with health emergencies in a better way and improve access to health care for all, Prime Minister Narendra Modi said Tuesday.

The prestige of India's health sector and trust in it has increased manifold across the globe after it successfully overcame the "trial by fire" during the Covid-19 pandemic, he added, addressing a webinar on effective implementation of the Union Budget's provisions in the health sector.

"The amount allocated for the health sector in this year's budget has been unprecedented, and is an attempt to provide better health care services to every citi-

eeksha (trial by fire)" for the country and particularly for the health sector, but I am happy to announce that India managed to pass the test successfully...," Modi said.

He added that India "managed to save lives" and create a testing infrastructure in a few months, with currently 2,500 labs active for Covid-19 testing. Modi also said the successful handling of Covid-19 had been possible ... collaboration

between the government and the private sector.

"Covid-19 has taught us that we don't have to just fight this pandemic, but also have to be prepared to handle such epidemics in future too. We have to keep India ready for any eventuality, which is why it is equally important to strengthen the health sector," he said.

"From medical equipment to medicines, from ventilators to vaccines...from doctors to epidemiologists, we have to pay attention to all so that the country is better prepared for any health disaster in future," he added.

This is the inspiration behind the PM Aatmanirbhar Swasth Bharat Scheme, under which it has been decided that a modern ecosystem would be developed from research to testing and treatment in the country itself, Modi said.

The government has proposed a budget outlay of ₹223,846 crore for health and well-being in 2021-2022.

Narendra Modi

# We have to be Aatmanirbhar in toy sector: Modi

NEW DELHI: Prime Minister Narendra Modi on Saturday exhorted toy manufacturers to use less plastic and more eco-friendly and recyclable material in a bid to increase the share of the domestic industry in the global market. Inaugurating the first India Toy Fair, the PM said, "We have to become Aatmanirbhar in the toy sector and also cater to the global market".

# Committed to doubling farmers' income: Modi

TIMES NEWS NETWORK

New Delhi: On the second anniversary of PM-Kisan scheme, PM Narendra Modi and other senior BJP functionaries on Wednesday highlighted the measures taken by the Centre for farmers' empowerment in a bid to blunt the opposition campaign to paint the government as "anti-farmer" in the light of the enactment of the three farm laws last year.

Modi said the PM-Kisan scheme was launched with an aim to ensure a life of dignity as well as prosperity for the hard working farmers, who work day and night to feed the nation. "The tenacity and passion of our farmers is inspiring," he said.

"Over the last seven years, the government of India has taken many initiatives to transform agriculture. From better irrigation to more technology, more credit and markets to proper crop insurance, focus on soil health to eliminating middlemen, the efforts are all-encompassing," the PM said in a series of tweets, in which he also shared details about the farmers' welfare schemes since 2014.

Countering the apprehensions of farm union leaders about the future of MSP, Modi said, "Our government had the honour of ushering a historic increase in MSP. We are doing everything possible to double the income of farmers. You can find insightful content on the NaMo App, offering a glimpse of the work done for farmers."

Asserting that the Modi government is committed to doubling farmers' income, home minister Amit shah said, "Hearty congratulations to all the beneficiaries of the country on the successful completion of two years of the PM Kisan Samman Nidhi Yojana...." Shah said the scheme has given new power and honour to the farmers of the country. "It is proving to be a boon for more than 11 crore marginal farmers," he added.

Defence minister Rajnath Singh said the scheme has made an effective and meaningful contribution to the lives of farmers. BJP chief JP Nadda said: "The Modi government is constantly trying to make the country self-sufficient in food production. This scheme, providing economic relief to the farmers, has become the basis of major changes in the rural economy," Nadda said.

PTI

A farmer checks mustard flowers at a farm near Amritsar

## On 2nd anniv of PM-Kisan, K'taka, Maha & UP awarded for efficient implementation

Karnataka, Maharashtra and UP were awarded for being the best performing states in implementing the PM-Kisan scheme in three different categories on the occasion of the second anniversary of this flagship programme on Wednesday. While UP was awarded for fastest implementation, Karnataka topped the list in covering the highest percentage of beneficiaries. Maharashtra was the best in physical verification and grievance redress. Karnataka has verified the highest 97% Aadhaar-authenticated data. More than 90% beneficiaries in the state have been paid one or more instalments via Aadhaar-based payment mode under the scheme. In the district category, Punjab's Rupnagar, Haryana's Kurukshetra and Chhattisgarh's Bilaspur were awarded as best performing districts for coming out with authenticated data, leading to quick payments to eligible farmers. TNN

# Maldives to get $100 mn for defence: India

EXPRESS NEWS SERVICE @ New Delhi

INDIA on Monday offered a $100 million line of credit to Mauritius to procure defence assets while the two countries signed a comprehensive economic cooperation partnership agreement.

The announcements were made after External Affairs Minister S Jaishankar and Mauritius Prime Minister Pravind Jugnauth held talks. The foreign minister is on a two-day visit to Mauritius following his visit to Maldives.

"SAGAR policy reaffirmed. Pleased to witness, along with PM @JugnauthKumar, the exchange of USD 100 million Defence Line of Credit. Will facilitate procurement of defence assets, guided by the needs of Mauritius," Jaishankar tweeted after the meeting.

Sources said that the two leaders discussed issues related to the Indo-Pacific and Chagos Islands, a point of dispute between the UK and Mauritius.

India also expressed support to Mauritius in its effort to be taken off the FATF's grey list. New Delhi also provided 2 lakh doses of Covid vaccines to Mauritius while the island nation requested another 2 lakh vials. The two countries, after the meeting of the two leaders, also exchanged letters on provisions of a Dornier aircraft and a Dhruv advanced light helicopter, the sources added.

RNI No. :
DELTAM/2020/78809
March: 16-31, 2021

நியூ இந்தியா
# சமாச்சார்
Fortnightly

RNI Registered No. DELTAM/2020/78809, Delhi Postal License No DL (S)-1/3551/2020-22, WPP NO U (S)-99/2020-22, posting at BPC, Meghdoot Bhawan, New Delhi-110001 On 13-17 advance Fortnightly, (Publishing Date March 5, 2021, Pages-44)






"ஒவ்வொரு குழந்தைக்கும் பாம்புகள் மற்றும் ஏணிகளின் விளையாட்டு பற்றி தெரியும். ஆனால், இது "மோக்ஷ பாட்டம்" அல்லது "பரமபதம்" என்று அழைக்கப்படும் மற்றொரு பாரம்பரிய இந்திய விளையாட்டு என்றும் உங்களுக்குத் தெரியுமா?"

**பிரதமர் நரேந்திர மோடி**

Tamil Issue 18

Editor:
Jaideep Bhatnagar,
Principal Director General,
PIB, New Delhi

Published & Printed by:
Satyendra Prakash,
Principal Director General,
BOC on behalf of Bureau of Outreach and Communication

Published from Bureau of Outreach and Communication,
2nd Floor, Soochna Bhawan, New Delhi - 110003

Printed at Infinity Advertising services Pvt. Ltd.
FBD-One Corporate Park, 10th Floor,
New Delhi-Faridabad border,
NH-1, Faridabad-121003 (Haryana)